தமிழ்நாடு அரசு

# தமிழ்

## பத்தாம் வகுப்பு

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது.

(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல்பதிப்பு : திபி 2042; (2011)
திருத்திய பதிப்பு: திபி 2043; (2012)
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல்

குழுத்தலைவர்

முனைவர் பெ. மாதையன்,

தமிழ்த்துறைத் தலைவர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636 011.

மேலாய்வாளர்கள்

முனைவர் இரா. காமராசு, தமிழ்ப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005.
முனைவர் தி. மகாலட்சுமி, இணைப் பேராசிரியர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,தரமணி, சென்னை – 600 113.
புலவர் சு. நஞ்சப்பன், மேனாள் தலைமையாசிரியர், வெள்ளக் கிணறு, கோவை மாவட்டம்.
புலவர் துரை. தில்லான் மேனாள் தமிழாசிரியர், சின்னாளப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

வல்லுநர்கள்

எ. முத்துக்கிருஷ்ணன்,
(மேனாள் கல்விப் பேரவைக்குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம்)
முதுநிலை விரிவுரையாளர், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம், திருவூர் – 602 025, திருவள்ளூர் மாவட்டம்.
த. தனுஷ்கோடி, முதுநிலை விரிவுரையாளர், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார்கோவில்.

நூலாசிரியர்கள்

முனைவர் க. வீ. வேதநாயகம்,
மேனாள் தலைமையாசிரியர்,
அரசு மேனிலைப் பள்ளி,
கள்ளிப்பட்டி – 638 505. ஈரோடு.

அ. அலெக்ஸாண்டர்,
முதுகலைத் தமிழாசிரியர்,
புனித ஜோசப் மேனிலைப்பள்ளி,
ஆசாரிப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்–629201.

மி.த. கந்தசாமி,
மேனாள் முதுகலைத் தமிழாசிரியர்,
இந்து மேனிலைப் பள்ளி,
வாணியம்பாடி, வேலூர் மாவட்டம்.

கு. சம்பந்தம்,
முதுகலைத் தமிழாசிரியர்,
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேனிலைப் பள்ளி,
திருவள்ளூர் – 602 001.

தி. அசோக்,
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசினர் பெண்கள் மேனிலைப்பள்ளி,
ஆயக்காரன்புலம், நாகை மாவட்டம்.

கு. சிவக்குமார்,
தமிழாசிரியர், அரசு மேனிலைப் பள்ளி,
எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம்,
சென்னை–600 106.

சபா சிலம்பரசன்,
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசு மேனிலைப் பள்ளி,
வல்லம், தஞ்சாவூர் மாவட்டம்.

எ.பாரதிராஜா,
தமிழாசிரியர்,
ஆர்.எம்.ஜெ.அரசினர் பெண்கள் மேனிலைப்பள்ளி
திருவள்ளூர் – 602 001.

இலக்கணம்

முனைவர் ஞா. பழனிவேலு, உதவிப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005.
கெ. சம்பத்து, தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கூனிப்பாளையம், திருவள்ளூர் மாவட்டம்.

கணினி அச்சு : பாமா

வடிவமைப்பு : எஸ். மாரீஸ்

விலை : ரூ.

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன்சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

- மனோன்மணியம் பெ. சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று நான் உளமார உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், 'சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதிநெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக் காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்துவிளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

## நாட்டுப் பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற
நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும் சிந்துவையும் கூர்ச்சரத்தையும்
மராட்டியத்தையும் திராவிடத்தையும் ஒரிசாவையும்
வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில்
எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின்
இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால்
வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | வாழ்த்து | 1 |
| | திருக்குறள் | 3 |
| | ஏலாதி | 11 |
| | உயர்தனிச் செம்மொழி | 13 |
| | பரிதிமாற்கலைஞர் | 19 |
| | எழுத்து | 22 |
| 2. | சிலப்பதிகாரம் | 32 |
| | தமிழ் வளர்ச்சி | 39 |
| | பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் | 41 |
| | மெல்ல மெல்ல மற! | 45 |
| | சொல் | 48 |
| 3. | கம்பராமாயணம் | 57 |
| | அண்ணல் அம்பேத்கர் | 68 |
| | அன்றாட வாழ்வில் சட்டம் | 74 |
| | பொது | 79 |
| 4. | நற்றிணை | 86 |
| | புறநானூறு | 88 |
| | பேச்சுக்கலை | 90 |
| | அண்ணாவின் கடிதம் | 94 |
| | வினாவகை, விடைவகை, ஒருபொருட்பன்மொழி | 96 |
| 5. | பெரியபுராணம் | 104 |
| | திரைப்படக்கலை உருவான கதை | 113 |
| | பாரதரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் | 118 |
| | உவம உருபுகள் | 120 |

| இயல் | | பக்கம் |
| --- | --- | --- |
| 6. | தமிழ்விடுதூது | 127 |
| | தொன்மைத் தமிழகம் | 129 |
| | தற்காலத் தொல்லியல் ஆய்வுகள் | 133 |
| | புணர்ச்சி | 138 |
| 7. | திருக்குறள் | 148 |
| | தேவாரம் | 155 |
| | தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள் | 157 |
| | குறட்டைஒலி | 162 |
| | பொருள் இலக்கணம் – அகப்பொருள் | 166 |
| 8. | சீறாப்புராணம் | 173 |
| | காந்தியம் | 181 |
| | அடித்தளம் | 187 |
| | புறப்பொருள் | 190 |
| 9. | கலித்தொகை | 202 |
| | நந்திக் கலம்பகம் | 204 |
| | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | 205 |
| | திருவருட் பிரகாச வள்ளலார் | 207 |
| | அயோத்திதாசப் பண்டிதர் | 213 |
| | பா வகைகள் | 216 |
| 10. | நிற்க நேரமில்லை | 230 |
| | பல்துறை வேலைவாய்ப்புகள் | 232 |
| | நூலகம் | 237 |
| | அணி | 241 |
| | வினாத்தாள் திட்ட வரைவு | 247 |

## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
| --- | --- | --- |
| 1 | வாழ்த்து | 04 |
| | ஒழுக்கமுடைமை (1, 5, 7, 8, 10) | 10 |
| | காலமறிதல் (1, 3, 4, 5, 9) | 10 |
| 2 | சிலப்பதிகாரம் (அடி 23 முதல் 32 வரை) | 10 |
| | தமிழ் வளர்ச்சி | 04 |
| 3 | கம்பராமாயணம் – 12, 14 | 08 |
| 5 | பெரியபுராணம் – 6, 10 | 08 |
| 7 | பெரியாரைத் துணைக்கோடல் (1, 3, 8, 9, 10) | 10 |
| | பொருள்செயல்வகை (1, 4, 5, 8, 9) | 10 |
| 8 | சீறாப்புராணம் – 10 | 04 |
| 9 | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | 04 |
| 10 | நிற்க நேரமில்லை (அடி 7 முதல் 10 வரை) | 04 |
| | மொத்த அடிகள் | 86 |

(பாடநூலுள் * உடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதியாகும்)

# வாழ்த்து

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே. *

– மாணிக்கவாசகர்

**பொருள் :** எல்லாம் உடைய பெருமானே! நான் உன்பால் பேரன்பு கொண்டதன் காரணமாக உடல் சிலிர்த்தேன்; உள்ளம் நடுங்கினேன்; நறுமணம் கமழும் உன் திருவடிகளைக் கருத்திற்கொண்டு, தலைமேல் கைகுவித்து வணங்கினேன்; கண்களில் நீர் பெருகுமாறு உள்ளம் வருந்த உருகினேன்; பொய்ப்பொருளை விலக்கி மெய்ப்பொருளாகிய உன்னையே நினைந்து துதித்தேன்; வெல்க வெல்க என உன் அரும்பெரும் செயல்களைப் போற்றிப் புகழ்ந்தேன். இத்தகைய ஒழுக்கத்தை நான் என்றும் கைவிடேன். எனவே, உன் அடியவர்களுள் ஒருவனாக என்னையும் ஏற்று அருள்புரிவாயாக!

**சொற்பொருள் :** மெய் – உடல்; விதிர்விதிர்த்து – உடல் சிலிர்த்து; விரை – மணம்; நெகிழ – தளர; ததும்பி – பெருகி; கழல் – ஆண்கள் காலில் அணியும் அணிகலன் (இங்கு ஆகுபெயராய் இறைவனின் திருவடியைக் குறித்தது); சயசய – வெல்க வெல்க.

**இலக்கணக்குறிப்பு :** விடேன் – தன்மை ஒருமை வினைமுற்று.

**பகுபத உறுப்பிலக்கணம் :** போற்றி – போற்று + இ. போற்று – பகுதி, இ – வினையெச்ச விகுதி.



**ஆசிரியர் குறிப்பு :** சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர். இவர், திருவாதவூரில் பிறந்தவர். இவ்வூர், மதுரைக்கு அருகில் உள்ளது. மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்; பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்றபோது, திருப்பெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர். அவ்விறைவனை, மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்க அழுது தொழுதவர். இதனால் மாணிக்கவாசகரை, 'அழுது அடியடைந்த அன்பர்' என்பர். திருவாசகமும் திருக்கோவையாரும் இவர் அருளியன. இவர் எழுப்பிய கோவில், தற்பொழுது ஆவுடையார்கோவில் என வழங்கப்படும் திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளது. இவர்தம் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

நூற்குறிப்பு : சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் உள்ளன. திருவாசகத்தில் அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருவாசகம் கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்யுமாதலால், 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் தொடர் வழங்கலாயிற்று. திருவாசகத்தின் சிறப்பை உணர்ந்த ஜி. யு. போப், இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திருவாசகத்திலுள்ள திருச்சதகத்தின் முதற்பாடல் நம் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. திரு என்பது, நூலின் சிறப்பை உணர்த்த வந்த அடைமொழி; சதகம் என்பது, நூறு பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) மாணிக்கவாசகர் பிறந்த ஊர் ____________.

ஆ) மாணிக்கவாசகர் பாடல்கள் ____________ திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

இ) மாணிக்கவாசகர் கட்டிய கோவில் ____________ உள்ளது.

ஈ) மாணிக்கவாசகர் ____________ மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்.

உ) ஜி.யு.போப் திருவாசகத்தை ____________ மொழியில் மொழிபெயர்த்தார்.

ஊ) திருவாசகத்திற்கு உருகார் ____________ உருகார்.

**2. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

1. மெய்தான் ____________ (அறும்பி/அரும்பி) விதிர்விதிர்த்துன் ____________ (விரையார்/விறையார்) கழற்கு.

2. கைதான் நெகிழ விடேன். இதில், 'நெகிழ' என்பது ____________ (துலர/தளர) என்னும் பொருளில் வந்துள்ளது.

**3. பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. விரை | – | உடல் |
| 2. கழல் | – | பெருகி |
| 3. ததும்பி | – | மணம் |
| 4. மெய் | – | அணிகலன் |

### ஆ) சிறுவினா

மாணிக்கவாசகர், இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார் ?

உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை. – ஜி.யு. போப்



# திருக்குறள்

## ஒழுக்கமுடைமை

( நல்ல நடத்தை உடையவராதல் )

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
   உயிரினும் ஓம்பப் படும். *

பொருள் : ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே; ஆதலால், அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல்வேண்டும்.

சொற்பொருள் : விழுப்பம் – சிறப்பு; ஓம்பப்படும் – காத்தல்வேண்டும்.

இலக்கணக்குறிப்பு : ஒழுக்கம் – தொழிற்பெயர்; படும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
   தேரினும் அஃதே துணை.

பொருள் : எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை ஆகும். ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது, அதனை விரும்பிக் காத்தல்வேண்டும்.

சொற்பொருள் : பரிந்து – விரும்பி; தேரினும் – ஆராய்ந்து பார்த்தாலும்.

இலக்கணக்குறிப்பு : காக்க – வியங்கோள் வினைமுற்று; பரிந்து, தெரிந்து – வினையெச்சங்கள்.

பிரித்தறிதல் : பரிந்தோம்பி – பரிந்து + ஓம்பி; தெரிந்தோம்பி – தெரிந்து + ஓம்பி.

(இவ்விரு பாடலும் ஒழுக்கத்தின் உயர்வைக் கூறுகின்றன.)

3. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
   இழிந்த பிறப்பாய் விடும்.

பொருள் : ஒழுக்கம் உள்ளவரே உயர்குடியினர். அவ்வொழுக்கம் இல்லாதவர் இழிகுடியினர்.

சொற்பொருள் : குடிமை – உயர்குடி; இழுக்கம் – ஒழுக்கம் இல்லாதவர்.

இலக்கணக்குறிப்பு : இழிந்த பிறப்பு – பெயரெச்சம்.

4. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
   பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பொருள் : ஒருவன், தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக்கொள்ள இயலும். ஆனால், ஒழுக்கம் குறைந்தால், அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்துபோகும்.

இலக்கணக்குறிப்பு : கெடும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; கொளல் – அல் ஈற்றுத் தொழிற்பெயர்.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை,
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. *

பொருள் : பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது; அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.

சொற்பொருள் : அழுக்காறு – பொறாமை; ஆக்கம் – செல்வம்.

இலக்கணக்குறிப்பு : உடையான் – வினையாலணையும் பெயர்.

அணி : உவமையணி.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

பொருள் : ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை நன்குணர்ந்த மனவலிமை மிக்கோர், அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலகமாட்டார்.

சொற்பொருள் : ஒல்கார் – விலகமாட்டார்; உரவோர் – மனவலிமையுடையோர்; ஏதம் – குற்றம்.

இலக்கணக்குறிப்பு : உரவோர் – வினையாலணையும் பெயர்.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. *

பொருள் : ஒழுக்கமுடையோர் மேன்மை அடைவர்; ஒழுக்கம் இல்லாதவர் அடையக் கூடாத பழியை அடைவர்.

சொற்பொருள் : எய்துவர் – அடைவர்.

இலக்கணக்குறிப்பு : எய்தாப் பழி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; எய்துவர் – பலர்பால் வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம் : எய்துவர் – எய்து + வ் + அர். எய்து – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

(இவ்வைந்து பாடலும் ஒழுக்கத்தின் குணமும், ஒழுக்கம் இன்மையால் ஏற்படும் குற்றமும் கூறுகின்றன.)

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். *

பொருள் : நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவைப் பெறுவதற்கான விதையாகும். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே விளைவாகத் தரும்.

சொற்பொருள் : இடும்பை – துன்பம்; வித்து – விதை.

இலக்கணக்குறிப்பு : நல்லொழுக்கம், தீயொழுக்கம் – பண்புத்தொகைகள்.

(இப்பாடல் ஒழுக்கத்தின் விளைவைக் கூறுகின்றது.)

9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

பொருள் : நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமைதரும் சொற்களைச் சொல்ல இயலாது.

சொற்பொருள் : ஒல்லாவே – இயலாவே.

இலக்கணக்குறிப்பு : சொலல் – தொழிற்பெயர்.

10. உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். *

பொருள் : உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

சொற்பொருள் : உலகம் – உயர்ந்தோர்; ஒட்ட – பொருந்த; ஒழுகல் – நடத்தல், வாழ்தல்.

(இவ்விரு பாடலும் சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களைக் கூறுகின்றன.)

## காலமறிதல்

(செயலை நிறைவேற்றுவதற்கு ஏற்ற காலத்தை அறிதல்)

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. *

பொருள் : பகற்பொழுதில் தன்னிலும் வலிய கோட்டானைக் காக்கை வென்றுவிடும். அதுபோலப் பகையை வெல்லக் கருதும் வேந்தர், ஏற்ற காலம் அறிந்து செயற்படுதல்வேண்டும்.

சொற்பொருள் : கூகை – கோட்டான்; இகல் – பகை.

( இப்பாடல் காலமறிதலின் சிறப்பைக் கூறுகின்றது. )

2. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

பொருள் : காலத்திற்குப் பொருந்திய செயலை மேற்கொள்வதே செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

சொற்பொருள் : திரு – செல்வம்; தீராமை – நீங்காமை.

3. அருவினை என்ப உளவோ, கருவியாற்
காலம் அறிந்து செயின். *

பொருள் : தகுந்த கருவிகளோடு ஏற்ற காலமறிந்து செயல்பட்டால், செய்தற்கரிய செயல்கள் எவையுமில்லை.

சொற்பொருள் : அருவினை – செய்தற்கரிய செயல்.

இலக்கணக்குறிப்பு : அருவினை – பண்புத்தொகை; அறிந்து – வினையெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிந்து – அறி + த் ( ந் ) + த் + உ. அறி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

4. ஞாலம் கருதினுங் கைகூடும், காலம்
கருதி இடத்தாற் செயின். *

பொருள் : காலமறிந்து, இடத்தோடு பொருந்தச் செயல்பட்டால், உலகத்தையே அடைய விரும்பினும் கைகூடும்.

சொற்பொருள் : ஞாலம் – உலகம்.

(இம்மூன்று பாடலும் காலமறிந்து செயல்படுதலால் ஏற்படும் பயனைக் கூறுகின்றன.)

5. காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர். *

பொருள் : உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர், அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கலங்காமல் காத்திருப்பர்.

இலக்கணக்குறிப்பு : கலங்காது – எதிர்மறை வினையெச்சம்.

6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

பொருள் : ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பதானது, ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

சொற்பொருள் : ஒடுக்கம் – அடங்கியிருப்பது; பொருதகர் – ஆட்டுக்கடா; பேருந்தகைத்து – பின் வாங்கும் தன்மையது.

அணி : உவமையணி

( இவ்விரு பாடலும் உரிய காலத்திற்காகக் காத்திருத்தலின் சிறப்பைக் கூறுகின்றன. )

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

பொருள் : அறிவுடையார், பகைவர் தீங்கு செய்த உடனே சினத்தை வெளிப்படுத்தமாட்டார்; அவரை வெல்லுதற்கான காலம் வரும்வரை, அச்சினத்தை மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்.

சொற்பொருள் : பொள்ளென – உடனே; புறம்வேரார் – வெளிப்படுத்தமாட்டார்; உள்வேர்ப்பர் – மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்; ஒள்ளியவர் – அறிவுடையார்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

பொருள் : பகைவரைக் காணும்போது பணிவாக இருத்தல்வேண்டும். அப்பகைவர்க்கு முடிவுக்காலம் வரும்போது, அவர்தம் நிலைமை தலைகீழாய் மாறிவிடும்.

சொற்பொருள் : செறுநர் – பகைவர்; சுமக்க – பணிக; இறுவரை – முடிவுக்காலம்; கிழக்காந்தலை – தலைகீழ் (மாற்றம்).

(இவ்விரு பாடலும் பகைவரை எதிர்கொள்ளும் முறையைக் கூறுகின்றன.)

9. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல். *

பொருள் : கிடைத்தற்கு அரிய வாய்ப்புக் கிடைத்தபொழுது, அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்பொழுதே செய்தற்கரிய செயல்களைச் செய்தல்வேண்டும்.

சொற்பொருள் : எய்தற்கு – கிடைத்தற்கு; இயைந்தக்கால் – கிடைத்தபொழுது.

(இப்பாடல் காலம் வரும்போது விரைந்து செயலைச் செய்க என்பதைக் கூறுகின்றது.)

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

பொருள் : வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப்போல் அமைதியாகக் காத்திருத்தல்வேண்டும். உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப்போல் விரைந்து செயலைச் செய்து முடித்தல்வேண்டும்.

சொற்பொருள் : கூம்பும் – வாய்ப்பற்ற; சீர்த்த இடம் – உரிய காலம்.

அணி : உவமையணி.

(இப்பாடல் காத்திருத்தலையும் செயல்படுதலையும் உவமைவழி கூறுகின்றது.)



ஆசிரியர் குறிப்பு : திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர் திருவள்ளுவர். இவர் கி.மு. 31இல் பிறந்தவர் என அறிஞரால் உறுதி செய்யப்பட்டுத் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது. தமிழக அரசு, தைத் திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது.

நூற்குறிப்பு : திரு + குறள் = திருக்குறள். மேன்மையான கருத்துகளைக் குறள் வெண்பாக்களால் கூறும் நூலாதலின், திருக்குறள் எனப் பெயர் பெற்றது. இஃது ஈரடிகளில் இயற்றப்பட்டிருப்பினும் விரிவான பொருளைத் தருகின்றது. இந்நூல் நாடு, மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கிறது; உலகப் பொதுமறை எனப் போற்றப்பெறுகிறது. திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இஃது அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது; ஒன்பது இயல்களையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது. ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். தமிழ்ச் சான்றோர் பலரால் இயற்றப்பட்ட திருவள்ளுவமாலை, திருக்குறளின் பெருமைகளைப் போற்றிப் புகழ்கிறது.

'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' என்றும்,

'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' என்றும்,


பாவேந்தர் பாரதிதாசன் திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்த வற்றுள்,
பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வினிலே அழைத்துச்
செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்
இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே.

– பாவேந்தர் பாரதிதாசன்

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**

நாலடி, நான்மணி, நானாற்பது, ஐந்திணை,முப்
பால், கடுகம், கோவை, பழமொழி, – மாமூலம்,
இன்னிலைய, காஞ்சியுடன், ஏலாதி என்பவே,
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.




மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812இல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) திருக்குறளில் _______ அதிகாரங்களும் _______ குறட்பாக்களும் உள்ளன.

ஆ) திருக்குறள் _______ முதலான உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இ) ஒழுக்கத்தின் எய்துவர் _______ இழுக்கத்தின்
எய்துவர் _______ பழி.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் _________.

1. நால்வர் நான்மணிமாலை 2. திருவள்ளுவமாலை 3. இரட்டைமணிமாலை

ஆ) திருக்குறள் _________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.

1. சிந்தியல் 2. குறள் 3. நேரிசை

இ) 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் _________.

1. பாரதியார் 2. சுரதா 3. பாரதிதாசன்

**3. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

அ) இறுவரை காணின் _______ ( கிழக்காம் / கிளக்காம் ) தலை.

ஆ) மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும்சொல் _______. ( உரவோர்/உறவோர் )

**4. அடி எதுகையை எடுத்தெழுதுக.**

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

**5. சீர் மோனையை அடிக்கோடிடுக.**

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

**6. விடுபட்ட சீர்களை எழுதுக.**

அ) பரிந்தோம்பிக் _________ ஒழுக்கம் _________
தேரினும் _________ துணை.

ஆ) ஊக்கம் உடையான் _________ பொருதகர்
தாக்கற்குப் _________ தகைத்து.

**7. உவமையைப் பொருளோடு பொருத்தி எழுதுக.**

அ) அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று

ஆ) கொக்கொக்க கூம்பும் பருவத்து

8. சீர் பிரித்து எழுதுக.

1. ஒழுக்கமுடைமைகுடிமைஇழுக்கம்இழிந்தபிறப்பாய்விடும்.
2. காலங்கருதியிருப்பர்கலங்காதுஞாலங்கருதுபவர்.

## ஆ) குறுவினாக்கள்

1. உயிரினும் ஓம்பப்படுவது எது ? ஏன் ?
2. ஒழுக்கத்தால் எய்துவது எது ? இழுக்கத்தினால் எய்துவது எது ?
3. நன்றிக்கு வித்தாவது எது ?
4. என்றும் இடும்பை தருவது எது ?
5. பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுபவர் யார் ?
6. கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது ?
7. ஞாலம் கருதினும் கைகூடும். எப்போது ?
8. ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர் ?
9. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?
10. செய்தற்கரிய செயல் செய்வது எப்போது ?
11. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது ?
12. காலமறிந்து செயல்படுவது எவ்வாறு ?
13. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
14. பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார் ?

## இ) சிறுவினாக்கள்

1. ஒழுக்கத்தின் உயர்வினை எழுதுக.
2. ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மையையும் கடைப்பிடிக்காதவழி ஏற்படும் தீமையையும் எழுதுக.
3. காலமறிதலின் தேவையை எழுதுக.
4. காலமறிந்து செயல்படுதலால் வரும் பயன் யாது ?

## ஈ) நெடுவினாக்கள்

1. ஒழுக்கமுடைமைபற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
2. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

## ஏலாதி

வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு
நுணங்கிநூல் நோக்கி நுழையா – இணங்கிய
பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
நூல்நோக்கி வாழ்வான் நுனித்து.

– கணிமேதாவியார்

பொருள் : பிறர்க்குப் பணிந்தும், நல்வழியில் நடந்தும், மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றியும், நுண்ணறிவு நூல்களை ஆராய்ந்தும், அவை நவிலும்வண்ணம் வாழும் பழியிலா மன்னன் நூல்களெல்லாம் போற்றும்படி வாழ்வான்.

சொற்பொருள் : வணங்கி – பணிந்து; மாண்டார் – மாண்புடைய சான்றோர்; நுணங்கிய நூல் – நுண்ணறிவு நூல்கள்; நோக்கி – ஆராய்ந்து.

இலக்கணக்குறிப்பு : நூல்நோக்கி – இரண்டாம் வேற்றுமைத்தொகை; பழியில்லா மன்னன் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : நோக்கி – நோக்கு + இ. நோக்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி; வாழ்வான் – வாழ் + வ் + ஆன். வாழ் – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; நுனித்து – நுனி + த் + த் + உ. நுனி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

பிரித்தறிதல் : வழியொழுகி – வழி + ஒழுகி.

ஆசிரியர் குறிப்பு : ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார். இவருக்குக் கணிமேதையர் என்னும் மற்றொரு பெயருமுண்டு. இவர், சமண சமயத்தவர் என்பர். இவர், சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை ஏலாதியில் வலியுறுத்திக் கூறுகிறார். இவர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு. இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

நூற்குறிப்பு : பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஏலாதியும் ஒன்று. இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது. இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது. ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக்கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர். இம்மருந்து, உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும். அதுபோல, இந்நூலின் நற்கருத்துகள், கற்போரின் அறியாமையை அகற்றும். இந்நூலின் ஐம்பத்தொன்பதாவது பாடல், நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) ஏலாதி __________ நூல்களுள் ஒன்று.

1. பதினெண்மேற்கணக்கு 2. பதினெண்கீழ்க்கணக்கு 3. காப்பியம்

ஆ) கணிமேதாவியாரின் காலம் __________

1. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு 2. கி.பி. நான்காம் நூற்றாண்டு
3. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

இ) மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் __________, __________.

1. திருக்குறள், நன்னூல் 2. திரிகடுகம், ஏலாதி 3. நற்றிணை, அகநானூறு

2. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.

நூ _____ (ல் / ள்) நோக்கி வா _____ (ழ் / ல்) வான் நு _____ த்து (னி / ணி)

### ஆ) குறுவினாக்கள்

1. ஏலாதி – நூற்குறிப்பு எழுதுக.
2. கணிமேதாவியார் – குறிப்பு எழுதுக.
3. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

#### அறிந்துகொள்வோம்

**எட்டுத்தொகை நூல்கள்**

நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூ(று),
ஒத்த பதிற்றுப்பத்(து,) ஓங்கு பரிபாடல்,
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு), அகம்,புறம்என்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.

**பத்துப்பாட்டு நூல்கள்**

முருகு, பொருநாறு, பாணிரண்டு, முல்லை,
பெருகு வளமதுரைக் காஞ்சி, – மருவினிய
கோலநெடு நல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும் பத்து.

# உயர்தனிச் செம்மொழி

"வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி"

என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றுவார் பாவலரேறு பெருஞ்சித்திரனார். தமிழ், மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் பழைமை வாய்ந்த இலக்கிய வளம்மிக்க மொழி. காலத்தால் மூத்த தமிழ்மொழி, தனித்தன்மையால் மிடுக்குற்றுச் செம்மொழியாய்த் திகழ்கிறது. 'திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்' என்று பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். "தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் பதினாறு செவ்வியல் தன்மைகளைக்கொண்டது செம்மொழி; அதுவே நம்மொழி" என்பார் பாவாணர்.

## நிலைத்த மொழி

உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன என்பர் மொழிநூலார். இவற்றுள் இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் மூவாயிரம். இவற்றுள்ளும் ஈராயிரமாண்டுகட்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே. அவை தமிழ், சீனம், சமற்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகியன. இவற்றுள் இலத்தீனும் ஈப்ருவும் வழக்கிழந்து போயின. இன்றும் நிலைத்து நிற்கும் மொழிகளுள் நம் தமிழ்மொழியும் ஒன்று.

ஒரு மொழி நிலைத்து நிற்பதற்கு, அதன் பழைமையும் வளமையும் மட்டும் போதா. அம்மொழி பேச்சுமொழியாக, எழுத்துமொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, பயிற்றுமொழியாக நிலைபெற்றிடல்வேண்டும். இலக்கிய வளம், இலக்கண அரண், மிகுந்த சொல்வளம், வரலாற்றுப் பின்னணி, தனித்தியங்கும் மாண்பு, காலத்திற்கேற்ற புதுமை எனப் பலவகைகளிலும் சிறப்புப் பெற்றிருத்தல்வேண்டும். தமிழ்மொழிக்கு இவை அனைத்தும் பொருந்தும்.

## செம்மொழித் தகுதிப்பாடுகள்

1. தொன்மை 2. பிறமொழித் தாக்கமின்மை 3. தாய்மை 4. தனித்தன்மை 5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு 6. பொதுமைப் பண்பு 7. நடுவுநிலைமை 8. பண்பாடு, கலை




கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம். (இலெமூரியாக் கண்டம்)

பட்டறிவு வெளிப்பாடு 9. உயர்சிந்தனை 10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு 11. மொழிக் கோட்பாடு எனப் பதினொரு தகுதிக் கோட்பாடுகளை அறிவியல் தமிழறிஞர் முஸ்தபாவும், மொழிவல்லுநர்களும் வரையறுத்துள்ளார்கள்.

### 1. தொன்மை

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக் கண்டம். அவன் பேசிய மொழி தமிழ்மொழியே என்கின்றனர் ஆய்வாளர். அக் குமரிக்கண்டத்தில் முதல், இடைத்தமிழ்ச்சங்கங்கள் அமைத்துத் தமிழர் மொழியை வளர்த்தனர் . இந்நிலப்பகுதி கடற்கோளால் கொள்ளப்பட்டதால், தமிழ்ச்சான்றோரால் மூன்றாவது தமிழ்ச்சங்கம் இன்றைய மதுரையில் தோற்றுவிக்கப்பட்டது. இது மூவாயிரம் ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தது என்பர். உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை, அதன் தொன்மையைக் கருதி 'என்றுமுள தென்தமிழ்' என்பார் கம்பர்.

### 2. பிறமொழித் தாக்கமின்மை

காலச்சூழலே மொழிக் கலப்பினை ஏற்படுத்துகிறது. ஆங்கிலத்தில் எண்ணற்ற பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. வடமொழியிலும் தமிழ், பிராகிருதம், பாலிமொழிச் சொற்கள் கலந்துள்ளன. இவ்வாறே தமிழிலும் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. பிறமொழிச் சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்கா. ஆனால், தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது. மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி, தமிழ். அவ்வேர்ச்சொற்களைக் கொண்டே புத்தம் புதுக் கலைச்சொற்களைத் தமிழ்மொழியால் உருவாக்கிக்கொள்ள இயலும்.

### 3. தாய்மை

தமிழ்மொழியானது திராவிடமொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது. அது பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்பார் கால்டுவெல். ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது தமிழ். ஆதலால், உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ் என்பது பெருமைக்குரிய ஒன்று.

### 4. தனித்தன்மை

இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ். தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர். திருக்குறள், மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தளித்தது. உலகில் பேசப்படும் மொழிகளுள் தமிழின் பழைமையையோ அதன் பெருமையையோ எம்மொழியும் நெருங்கவியலாது. தமிழ்மொழி இறவா இலக்கிய, இலக்கண வளங்கொண்டு தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் கொண்டுள்ளது. இவையாவும் தமிழ்மொழியின் தனித்தன்மைகளே.

### 5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு

உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் 26,350. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிபு.

மாக்சுமுல்லர் என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார். உலக இலக்கியங்கள் எவற்றிற்கும் இல்லாத் தனிச்சிறப்பு, சங்க இலக்கியங்களுக்கு உண்டு. அவை தொன்மக் கருத்துகளின் அடிப்படையில் எழுதாமல், மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்தின. ஆதலால், சங்க இலக்கியங்களை மக்கள் இலக்கியம் எனலாம்.

தமிழ்மொழியின் இலக்கண அமைப்பானது, தனிச் சிறப்புடையது; நுண்ணிய அறிவை உண்டாக்கவல்லது. தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட். நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது தொல்காப்பியம். இஃது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது. தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு அகத்தியம் என்பது பெயர். அறிவியல்முறையில் அமைந்த இத்தகைய இலக்கண நூல்கள் தோன்றவேண்டுமென்றால், குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாவது தமிழ்மொழி தோன்றிச் செம்மைநிலை பெற்றிருத்தல்வேண்டும். அத்தகைய இலக்கிய இலக்கண வளமுடையது, தமிழ்மொழி.

### 6. பொதுமைப் பண்பு

தமிழர், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தனர்; ஒன்றே குலம் எனப் போற்றினர்; தீதும் நன்றும் விளைவது அவரவர் செயலால் என்றுணர்ந்தனர்; செம்புலப் பெயல்நீர்போல அன்புள்ளம் கொண்டனர். இவ்வாறான பொதுமை அறங்களைத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவை உலகத்தால் போற்றப்படுகின்றன.

### 7. நடுவுநிலைமை

சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை; இயற்கையோடு இயைந்தவை; உலகத்தார் ஏற்கும் பொதுக் கருத்துகள் உடையவை; மக்கள் சிறப்புடன் வாழ ஏற்ற கருத்துகளை மொழிபவை.

### 8. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு

சங்கப் படைப்புகள் வெறுங்கற்பனைப் படைப்புகளல்ல. அவை மனிதப் பட்டறிவின் முழு வெளிப்பாடுகள்; அறிவுடன் பொருந்தி வருவன; அறத்தொடு நிலையாய் நிற்பன. அவை பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், பிறன்மனை நோக்காப் பேராண்மை முதலிய பண்பாட்டு நெறிமுறைகளையும் வெளிப்படுத்துகின்றன.

### 9. உயர் சிந்தனை

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என உலக மக்களை ஒன்றிணைத்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது புறநானூறு. அஃது உரிமைக்கு உறவுகோல் ஊன்றுவது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனத் திருக்குறள் உலகுக்கு எடுத்துரைக்கிறது. அது மக்கட் பண்பில்லாதாரை மரம் எனப் பழிக்கிறது. இவையெல்லாம் தமிழ்மொழிக்கே உரிய விழுமிய சிந்தனைகள்.

### 10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு

தமிழ்ச்சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளமடையச் செய்தனர்; மேலும், எளிய குடிமகனையும் குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது. இந்நூல் கூறும் கலைநுட்பச் செய்திகள், சங்ககாலத் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித்தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

### 11. மொழிக் கோட்பாடு

தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்புமுறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துகின்றன. 'இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது' என்பார் முனைவர் எமினோ. எக்காலத்திற்கும் பொருந்தும் மொழியியல் கோட்பாடுகளை வகுத்த தமிழர்தம் மொழித்திறம் ஆராயத்தக்கது.

ஒருமொழிக்கு முப்பத்துமூன்று ஒலிகள் இருந்தாலே போதும் என்பர். ஆனால், தமிழோ ஐந்நூறு ஒலிகளைக் கொண்டுள்ளது. இதுவே மனித உணர்வுகள்

அனைத்தையும் எண்ணியவாறு வெளிப்படுத்தப் போதுமானது என்பர் மொழிநூலார். தமிழ்மொழி காலப் புதுமையைப் பெறத்தக்க வல்லது; கணினிப் பயன்பாட்டிற்கும் ஏற்றது.

இவ்வாறு, செம்மொழிக்கான பதினொரு கோட்பாடுகளும் முற்றிலும் பொருந்துமாறு அமைந்த ஒரே மொழி தமிழ்மொழி.

இவ்வருஞ்சிறப்புமிக்க தமிழைச் செம்மொழி என அறிவித்தல்வேண்டும் என்ற முயற்சி 1901இல் தொடங்கி 2004வரை தொடர்ந்தது. நடுவணரசு 2004ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக ஏற்பளித்தது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) தமிழர் மனித வாழ்வை ____ , ____ எனப் பிரித்தனர்.

ஆ) குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசியமொழி ____ .

இ) 2004ஆம் ஆண்டு ____ திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.

ஈ) தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ____ ஆவார்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) பதினாறு செவ்வியல் தன்மைகளைக்கொண்டது செம்மொழி எனக் கூறியவர் ____.

1. திரு.வி.க  2. உ.வே.சா.  3. பாவாணர்

ஆ) இன்றைய மதுரையில் ____ தமிழ்ச்சங்கம் இருந்தது.

1. மூன்றாம்  2. இரண்டாம்  3. முதலாம்

### ஆ) குறுவினாக்கள்

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?
2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?
3. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
4. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?
5. ஒருமொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?

## இ) சிறுவினாக்கள்

1. செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளாக மொழியியலார் கூறுவன யாவை?
2. தமிழ்மொழியின் இலக்கிய வளம் குறித்து எழுதுக.
3. தமிழ்மொழியின் இலக்கணச் சிறப்பை எழுதுக.

## ஈ) நெடுவினா

செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

### அறிந்துகொள்வோம்

### செம்மொழிக் காலக்கோடு

1901 – மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.

1918 – மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி, அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது.

1918 – சைவ சித்தாந்த மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1919 – கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது.

1966 – உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.

2004 – நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

# பரிதிமாற்கலைஞர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பரிதிமாற்கலைஞர். இவர், சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் தம் பெயரைப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழாக்கிக் கொண்டவர். இவர், மதுரையை அடுத்த விளாச்சேரி என்னும் சிற்றூரில் கோவிந்தசிவனார், இலட்சுமிஅம்மாள் இணையரின் மூன்றாவது மகனாக, 1870ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் நாள் பிறந்தார்.

## பரிதிமாற்கலைஞரின் பணிகள்



பரிதிமாற்கலைஞர், தந்தை கோவிந்தசிவனாரிடம் வடமொழியும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இளங்கலை (பி.ஏ.) பயின்றார். இளங்கலைத் தேர்வில், தமிழிலும் தத்துவத்திலும் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். தாம் பயின்ற கல்லூரியில் தத்துவத்துறை ஆசிரியர் பணி வழங்கப்பட்டதை ஏற்காது, தமிழ்த்துறைப் பணியை விரும்பிக்கேட்டு ஏற்றார். தாம் கற்பிக்கும் பாடங்களைச் செந்தமிழ் நடையில் சுவைபட விவரிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். பிற துறை மாணவர்களும் அவருடைய வகுப்புக்கு வந்து ஆர்வத்துடன் பாடங்கேட்டார்கள். அவருக்கு ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம், பேராசிரியர் பணி வழங்க முன்வந்தது; ஆனால், அதனை அவர் ஏற்கவில்லை. தமிழ் பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குத் தம்முடைய இல்லத்திலேயே தமிழ் கற்பித்ததுடன், அவர்களை இயற்றமிழ் மாணவர் எனவும் பெயரிட்டு அழைத்தார். மேலும் அவர், மாணவர்களுக்குத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைச் சுவைபடக் கற்பித்ததோடு தமிழைச் சுவைக்கவும் கற்பித்தார்.

## மதுரைத் தமிழ்ச்சங்கம்

பரிதிமாற்கலைஞரின் ஒவ்வொரு செயலும் தமிழ் வளர்ச்சியை நோக்கியே அமைந்திருந்தது. மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் இவரும் ஒருவர். பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித்துரை மேற்பார்வையில் பரிதிமாற்கலைஞர், உ. வே. சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்கள் துணையுடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

## தமிழ்ப்புலமையும் தனித்தமிழ்ப்பற்றும்

பரிதிமாற்கலைஞர், தமிழின் மேன்மையைத் தாம் உணர்ந்ததோடு, உலகிற்கு உணர்த்துவதிலும் தலைசிறந்து விளங்கினார். யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமையையும் கவிபாடும் திறனையும் கண்டு, திராவிட சாஸ்திரி என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார். பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய தனிப்பாசுரத்தொகை என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொண்டார். இந்நூலினை, ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

பரிதிமாற்கலைஞர், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்தபோது கல்லூரி முதல்வராக இருந்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் மில்லர். ஆங்கிலப் பேராசிரியரான அவர் ஒருநாள், டென்னிசன் இயற்றிய ஆர்தரின் இறுதி என்னும் நூலில் உள்ள ஒரு பாடலை நடத்தினார். அதில், துடுப்புகளை அசைத்துச் செலுத்தப்பட்ட படகானது அழகிய அன்னப்பறவைக்கு உவமையாக்கப்பட்டிருந்தது. அதனை வியந்து பாராட்டிய மில்லர், "இங்கிலீஷ், இங்கிலீஷ்தான்; படகை நகர்த்தும் துடுப்புகளுக்கு உவமையாகப் பறவைகளின் சிறகைக் கூறியது வெள்ளையர்களின் அபூர்வக் கண்டுபிடிப்பு" என்று பெருமையாகக் கூறினார். அதுமட்டுமன்றித், "தமிழில் இதுபோன்ற உவமை ஏதேனும் உண்டோ ?" என்று மாணவர்களிடம் வினவினார். அதற்குப் பரிதிமாற்கலைஞர், "பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே கம்பராமாயணக் குகப்படலத்தில் இத்தகைய உவமை உள்ளது" என்று கூறி, 'விடுநனி கடிது' என்னும் அப்பாடலைப் பாடியும் காட்டினார். அதனைக் கேட்ட ஆங்கிலப் பேராசிரியர் வியந்து, அவரைப் பாராட்டினார்.

## தமிழின் சிறப்பை உணர்த்தல்

தமிழ்ச்சொற்களோடு வடமொழிச்சொற்களைக் கலந்து எழுதுதல், மணியும் பவளமும் கலந்து கோத்த மாலைபோலாகும் எனத் தமிழின் அருமை உணராதோர் கூறினர். ஆனால், அது தமிழ்மணியோடு பவளத்தைப்போலச் செந்நிறம் உடையதான மிளகாய்ப் பழம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது பரிதிமாற்கலைஞரின் கருத்து. மணியோடு மிளகாய்ப் பழத்தையும் கோத்து மாலையாக அணிந்தால், சிறுபொழுது செல்லும் முன்னரே மிளகாய்ப்பழத்தின் தோல் காய்ந்து, காம்பொடிந்து, விதை உடம்பிலேபட்டு, வியர்வையோடு கலந்து பொறுக்கமுடியாத எரிச்சலைத்தான் தரும்; தோல் தடித்து உணர்ச்சி கெடாத எவரும், அந்த எரிச்சலை உணர்வர். அதனைப்போன்றே தமிழ்த்தாயின் எழில் மிகுந்த உடம்பிற்கு, மணிப்பிரவாள நடை எரிச்சலைத்தான் தரும் என்பதனை உணர்ந்த பரிதிமாற்கலைஞர், வடசொற்கலப்பைக் கண்டிக்கத் தயங்கவில்லை.

## தமிழ்த்தொண்டு

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில், பட்டவகுப்புகளில் தமிழை விலக்கி, வடமொழியைக் கொண்டுவரப் பல்கலைக்கழகத்தாரால் முடிவெடுக்கப்பட்டது. ஆனால், 1902ஆம் ஆண்டில் பரிதிமாற்கலைஞரின் உறுதியான எதிர்ப்பால், அம்முடிவைப் பல்கலைக்கழகம் கைவிட்டது. அவரது முனைப்பான முயற்சி இல்லையென்றால், பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலிருந்து தமிழ் அறவே நீக்கப்பட்டிருக்கும். பரிதிமாற்கலைஞர், ரூபாவதி, கலாவதி முதலிய நற்றமிழ் நாடகங்களை இயற்றினார்.

அவர் ரூபாவதி, கலாவதி என்னும் பெண்பால் வேடங்களும் புனைந்து நடித்து நாடகக்கலை வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார்; சித்திரக்கவி எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்ததால், சித்திரக்கவி என்னும் நூலை எழுதினார். குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் ஐம்பத்தொரு பாடல்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்.

மு.சி. பூர்ணலிங்கம் தொடங்கி வைத்த ஞானபோதினி என்னும் இதழைப் பரிதிமாற்கலைஞர் நடத்தினார். பரிதிமாற்கலைஞர் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். மாணவப் பருவத்திலேயே ஆங்கிலப்பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பிற்காலத்தில் வடமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் செந்தமிழ் இதழில் உயர்தனிச் செம்மொழி என்னும் தலைப்பில், தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரைவரைந்தார். தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி என முதன்முதலாக நிலைநாட்டினார்.

தமிழ் உள்ளங்கொண்டு அயராது தமிழ்த் தொண்டாற்றிய பரிதிமாற்கலைஞர், தமது முப்பத்து மூன்றாம் அகவையில் (02.11.1903) இயற்கை எய்தினார். நடுவணரசு பரிதிமாற்கலைஞருக்கு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்துள்ளது. நற்றமிழில் பெயர் சூட்டவும், நற்றமிழின் தனிப்பெருமையைக் காக்கவும் உறுதி கொள்வதே பரிதிமாற்கலைஞர் தொண்டுக்கு நாம் காட்டும் நன்றிக்கடனாகும்.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்றினை விளக்குக.
2. பரிதிமாற்கலைஞரின் தமிழ்த்தொண்டினை விவரிக்க.

**செயல் திட்டம் :** உங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களின் பெயர்களைத் தொகுக்க. அவற்றைத் தனித்தமிழ்ப் பெயர்களாகவும் பிறமொழிப்பெயர்களாகவும் வகைப்படுத்துக. பிறமொழிப் பெயர்களுக்கு இணையான தமிழ்ப்பெயர்களையும் எழுதுக.

**பரிதிமாற்கலைஞரின் சொல்லாக்கங்கள்**

| | | |
|---|---|---|
| Aesthetic | – | இயற்கை வனப்பு |
| Biology | – | உயிர்நூல் |
| Classical Language | – | உயர்தனிச் செம்மொழி |
| Green Rooms | – | பாசறை |
| Instinct | – | இயற்கை அறிவு |
| Order of Nature | – | இயற்கை ஒழுங்கு |
| Snacks | – | சிற்றுணா |

# எழுத்து

## ( சார்பெழுத்துகள் : ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள் )

உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளை முதலெழுத்துகள் எனவும், அவற்றைச் சார்ந்து வரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் எனவும் முன் வகுப்புகளில் கற்றறிந்தோம். இனி ஐகார, ஔகார, ஆய்த, மகரக் குறுக்கங்கள் பற்றிக் காண்போம்.

### 1. ஐகாரக்குறுக்கம்

'ஐ' என்னும் நெட்டெழுத்தைத் தனியாக ஒலித்துப் பாருங்கள். அது, தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கும். ஆனால், இவ்வெழுத்தைச் (ஐ) சொல்லின் முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வருமாறு எழுதி ஒலித்துப் பாருங்கள். அஃது, ஒலி குறைந்து ஒலிப்பதனை உணர்வீர்.

ஐம்பது – சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது

தலைவன் – சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

கடலை – சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

இவ்வாறு சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

### 2. ஔகாரக்குறுக்கம்

'ஔ' என்னும் நெடில் எழுத்தும், 'ஐ' என்னும் நெட்டெழுத்தைப்போலவே தனியாக ஒலிக்கும்போது, இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதில்லை. ஆனால், சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ஒன்றரை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும்.

(எ–டு) ஔவை, வௌவால் – ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது.

சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும், ஔவும் முதலற் றாகும் – நன்னூல், 95

### 3. மகரக்குறுக்கம்

'ம்' என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். அதாவது, 'ம்' என்னும் மெய்யெழுத்து, செய்யுளில் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து, கால் மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

(எ–டு) போலும் – போல்ம் – போன்ம்

மருளும் – மருள்ம் – மருண்ம்

அ) செய்யுளில் இடம்பெறும் போலும், மருளும் ஆகிய மகர ஈற்றுச் சொற்கள், ஈற்றயல் உகரங் கெட்டு, போல்ம், மருள்ம் என்றாகிப் பின் போன்ம், மருண்ம் எனத் திரியும். இவ்வாறு திரியும் னகர, ணகரங்களின் முன்னுள்ள மகரம், தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஆ) மகர ஈற்றுச்சொல் முன் வகர (வ்) முதல்மொழி வந்து சேரும்போது, நிலைமொழி மகரம் குறைந்து ஒலிக்கும்.

(எ–டு) வரும் + வண்டி = வரும் வண்டி. 'ம்' தன் அரை மாத்திரையிலிருந்து குறைந்து, கால் மாத்திரையாக ஒலிக்கும். (வரும் – இது மகர ஈற்று நிலைமொழி. வண்டி இது 'வ்' என்னும் வகர முதல் மொழி.)

இவ்விரண்டு இடங்களிலும் குறைந்து ஒலிக்கும் மகரமே மகரக்குறுக்கம் எனப்படும்.

### 4. ஆய்தக்குறுக்கம்

ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம். ('ஃ' என்னும் எழுத்து குறைந்து ஒலிப்பது.) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவாக ஒலிக்கும். அதுவே ஆய்தக்குறுக்கம் எனப்படும். பிறகு, வருமொழியிலுள்ள தகரம் (த்) நிலைமொழிக்கேற்ப றகரமாக (ற்) வும், டகரமாகவும் (ட்) மாறிப் புணரும்.

(எ–டு) கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) வளையல் – இச்சொல்லில் ஐகாரம் ________ மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

ஆ) ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ________ ஆகும்.
1. திண்ணை 2. வளையல் 3. ஐந்து

இ) பல் + தீது என்பது ________ எனப் புணரும்.
1. பல்தீது 2. பஃறீது 3. பலதீது

ஈ) குறுக்கங்கள் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ________ ஆய்தக்குறுக்கம் என நால்வகைப்படும்.

## 2. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. ஐகாரக்குறுக்கம் | – | முஃடீது |
| 2. ஔகாரக்குறுக்கம் | – | தலைவன் |
| 3. ஆய்தக்குறுக்கம் | – | போன்ம் |
| 4. மகரக்குறுக்கம் | – | வௌவால் |

## ஆ) சிறுவினாக்கள்

1. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. ஔகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. மகரம் எவ்வெவ்விடங்களில் குறுகும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. ஆய்தக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

# மொழித்திறன் பயிற்சி

## சொற்றொடர் வகைகள்

### 1. செய்தித்தொடர்

அ) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார்.

ஆ) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

இவ்விரு தொடர்களும் செய்திகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு, ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது செய்தித்தொடர் எனப்படும்.

### 2. வினாத்தொடர்

அ) எழில், என்ன சாப்பிட்டாய்?

ஆ) அன்பரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

இ) எங்கே செல்கிறாய்?

இவ்வாறு வினாப்பொருளைத் தரும் தொடர், வினாத்தொடர் எனப்படும். என்ன? ஏன்? எங்கே? எப்படி? முதலிய வினாச்சொற்கள் வினாத்தொடரில் அமையும்.

### 3. உணர்ச்சித்தொடர்

நீங்கள் சென்னைக்கு அருகிலுள்ள பூண்டி ஏரியைப் பார்த்ததுண்டா? அதனைப் பார்த்ததும் உங்களுக்குத் தோன்றியது என்ன?

'அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி!'

கண்ணகியும் கயல்விழியும் பாதையில் நடந்துகொண்டே பேசிச் செல்கின்றனர். கயல்விழியின் காலில் முள் ஆழமாகக் குத்திவிட்டது. உடனே, அவள் எவ்வாறு அலறியிருப்பாள்?

"ஐயோ, முள் குத்திவிட்டதே!"

இவ்வாறு நாம் பேசும் செய்திகள் உணர்ச்சியை வெளிப்படுத்தும் தொடர்களாக அமைந்தால், அவற்றை உணர்ச்சித் தொடர்கள் என்கிறோம்.

மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமைவது, உணர்ச்சித் தொடர்.

என்னே என்னும் சொல்லை வியப்புக் குறித்தும், அந்தோ என்னும் சொல்லைத் துன்பம் குறித்தும் சொற்றொடர்களில் அமைத்துக் காட்டலாம்.

(எ–டு) என்னே, இமயமலையின் உயரம்!

அந்தோ, நாய் வண்டியில் அடிபட்டுவிட்டதே!

### 4. கட்டளைத்தொடர்

நீ பள்ளிக்குப் புறப்படும்போது, உன்னிடம் அம்மா கூறுவது என்ன?

பார்த்துப் போ, கவனமாகப் படி என்றுதானே.

இவ்வாறு, ஒரு செயல் அல்லது சில செயல்களைப் பின்பற்றும்படி ஆணையிட்டுக் கூறுவது, கட்டளைத்தொடர்.

### 5. தனிநிலைத்தொடர்

1. அழகன் பாடம் எழுதுகிறான்.
2. மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள்.

இத்தொடர்களில் முதல் தொடரில் அழகன் என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் மா, பலா, வாழை என்பன எழுவாய்கள்.

இவ்வாறாக, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.

### 6. தொடர்நிலைத்தொடர்

கார்மேகம் கடுமையாக உழைத்தார்; அதனால், வாழ்வில் உயர்ந்தார்.

நேற்று மழை பெய்தது; அதனால், ஏரி குளங்கள் நிரம்பின.

இவ்வாறு, ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது தொடர்நிலைத்தொடர். தொடர்நிலைத்தொடர்கள் அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.

### 7. கலவைத்தொடர்

1. நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை.
2. முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான்.

இவ்வாறு, ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது, கலவைத்தொடர்.

8. செய்வினைத்தொடர்

"குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்." இத்தொடரில்,

| | | |
|---|---|---|
| குடியரசுத் தலைவர் | – | எழுவாய் |
| உலகத் தமிழ் மாநாடு | – | செயப்படுபொருள் |
| தொடங்கிவைத்தார் | – | பயனிலை |

இவ்வாறாக எழுவாய், செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர் எனப்படும். செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்பட்டு வரும். சில தொடர்களில் மறைந்தும் வரும்.

(எ–டு) மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.

9. செயப்பாட்டு வினைத்தொடர் (செயப்படுபொருள் வினைச்சொல்லைக்கொண்டு முடிவது)

உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப்பெற்றது.

இத்தொடரில் சொற்கள் செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்னும் வரிசையில் அமைந்துள்ளன. எழுவாயோடு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் உள்ளது. இவ்வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.

10. தன்வினைத்தொடர் (எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது)

பாத்திமா திருக்குறள் கற்றாள்.

இத்தொடரிலுள்ள பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதனால், இது தன்வினைத்தொடராகும்.

11. பிறவினைத்தொடர் (எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது)

பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்.

இது பிறவினைத்தொடர். பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத்தொடராகும்.

12. நேர்கூற்றுத்தொடர் (ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது)

ஆசிரியர், "மாணவர்களே, நாளை ஒழுக்கமுடைமையில் குறள்கள் ஐந்தனைப் படித்து வருக", என்றார். இவ்வாறு ஆசிரியர், மாணவர்களிடம் கூறிய இத்தொடர் நேர்கூற்றுத் தொடராகும்.

இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும்; தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும்; இங்கு, இப்போது, இவை எனச் சுட்டுப்பெயர்கள் வரும்; நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும்.

(எ–டு) தேன்மொழி பொன்னியிடம், "நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள்.

### 13. அயற்கூற்றுத்தொடர்

ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது, அயற்கூற்றுத்தொடர். பொன்னியிடம் தேன்மொழி, தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.

அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா; இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும்; சுட்டுப்பெயர்கள் அது, அவை, அங்கே என மாறும்; காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும்; என்று, ஆக என்னும் இணைப்புச்சொற்களும் இடம்பெறும்.

### 14. உடன்பாட்டுத்தொடர்

செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத் தொடர்.

கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.

### 15. எதிர்மறைத்தொடர்

கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்.

இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது எதிர்மறைத்தொடர்.

### 16. பொருள்மாறா எதிர்மறைத்தொடர்

கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்.

கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்னும் தொடர் உடன்பாட்டுத்தொடர். கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை என்பது இதற்கான எதிர்மறைத்தொடர்.

மேலே உள்ள உடன்பாட்டுத்தொடரை பொருள்மாறா எதிர்மறைத்தொடராக மாற்ற வேண்டுமானால், அதனை இரண்டு எதிர்மறைகளைக்கொண்ட தொடராகக், கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் என மாற்றுதல்வேண்டும். இதற்குக் கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்பதே பொருள் என்பதனால், இது பொருள்மாறா எதிர்மறைத்தொடர் எனப்படுகிறது.

இரண்டு எதிர்மறைச்சொற்கள் சேர்ந்து வந்தால், அஃது உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

#### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, பொம்மை ________ செய்யப் ________ என வரும்.

ஆ) அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்ததால் ________ தொடர் ஆகும்.

இ) அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளை ________ என வரும்.

ஆ) தொடரை மாற்றி அமைக்க.

1. திருக்குறளை அனைவரும் அறிவர். – வினாத்தொடராக அமைக்க.
2. இமயமலை மிகவும் உயரமானது. – உணர்ச்சித்தொடராக மாற்றுக.
3. கிளி கல்லால் அடிபட்டது – உணர்ச்சித்தொடராக மாற்றுக.
4. வாரியார், "குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்" என்றார். – அயற்கூற்றாக மாற்றுக.
5. நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன. – கலவைத்தொடராக மாற்றுக.

இ) சந்திப்பிழையற்ற தொடர் எது?

1. கயிறுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
2. கயிற்றுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
3. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

ஈ) ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?

1. அவன் கவிஞன் அல்ல.
2. அவன் கவிஞன் அன்று.
3. அவன் கவிஞன் அல்லன்.

உ) பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?

1. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.
2. அவர்களிருவர்க்கும் இடையே உரையாடல் நடந்தது.
3. அவர்களிருவர்க்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது.

ஊ) வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

1. வலதுபக்கம் சுவறில் எழுதாதே.
2. வலப்பக்கச் சுவரில் எழுதாதே.
3. வலப்பக்கச் சுவற்றில் எழுதாதே.

எ) தொடர்கள் எவ்வகையானவை?

1. பிசிராந்தையார், நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். (உணர்ச்சி, வினா, செய்தி).
2. குழந்தையை அடித்தது யார்? (உணர்ச்சி, வினா, கட்டளை).
3. நம்நாட்டுக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது. (தன்வினை, செய்வினை, செயப்பாட்டுவினை)
4. வயலில் ஆடுகள் மேய்ந்தில. (உடன்பாடு, எதிர்மறை, தன்வினை)
5. காந்தியடிகள் உண்மை பேசாமல் இரார். (எதிர்மறை, பொருள்மாறா எதிர்மறை, பிறவினை)

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்த தமிழறிஞர் மறைமலையடிகளாரைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்க.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

– வள்ளலார்

### இ) எழுதுதல் திறன்

திருக்குறளின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

### ஈ) கட்டுரைப் பயிற்சி

தமிழ்மொழியின் சிறப்புகள்

### உ) கடிதம் எழுதுதல்

பள்ளி இலக்கிய மன்றத் தொடக்கவிழாவிற்கு வரவிருக்கின்ற இலக்கியச் சொற்பொழிவாளரை வரவேற்க வரவேற்பு மடல்.

## தமிழெண்களை அறிவோம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | 1 | கக | 11 | உக | 21 | ௩க | 31 | ௪க | 41 |
| உ | 2 | கஉ | 12 | உஉ | 22 | ௩உ | 32 | ௪உ | 42 |
| ௩ | 3 | க௩ | 13 | உ௩ | 23 | ௩௩ | 33 | ௪௩ | 43 |
| ௪ | 4 | க௪ | 14 | உ௪ | 24 | ௩௪ | 34 | ௪௪ | 44 |
| ரு | 5 | கரு | 15 | உரு | 25 | ௩ரு | 35 | ௪ரு | 45 |
| சு | 6 | கசு | 16 | உசு | 26 | ௩சு | 36 | ௪சு | 46 |
| எ | 7 | கஎ | 17 | உஎ | 27 | ௩எ | 37 | ௪எ | 47 |
| அ | 8 | கஅ | 18 | உஅ | 28 | ௩அ | 38 | ௪அ | 48 |
| கூ | 9 | ககூ | 19 | உகூ | 29 | ௩கூ | 39 | ௪கூ | 49 |
| க० | 10 | உ० | 20 | ௩० | 30 | ௪० | 40 | ரு० | 50 |

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

“யாழினி! நீ ஏன் பெயர் கொடுக்கவில்லை?” என ஆசிரியர் கேட்ட வினாவுக்கு, விடை என்ன கூறுவது என்று தெரியாமல் நின்றாள். ‘நாளை ஒருநாள்தான் இருக்கிறது, எண்ணி முடிவு சொல்’, என்று கூறியவாறே ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளியே சென்றார்.

“யாழினி, உன்மீது நாங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம். உன் அழகான கையெழுத்தும், செறிவான கருத்தும் கட்டுரைப் போட்டியில் உனக்குப் பரிசு பெற்றுத் தருமல்லவா? ஆனால், நீயோ போட்டியில் கலந்துகொள்ள மறுக்கிறாய். என்ன காரணம்?” என்று அவளுடைய தோழியர் வினவினர்.

“எனக்குப் போட்டிகளில் கலந்துகொள்வது என்றாலே மிகவும் அச்சமாக உள்ளது. நீங்கள் நினைப்பதுபோல் என்னால் சிறப்பாகச் செய்ய முடியுமா? என்று தெரியவில்லை. என் கட்டுரைக்குப் பரிசு கிடைக்கவில்லையென்றால் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது” என்று யாழினி அவர்களுக்குப் பதிலளித்தாள்.

நீங்கள் யாழினியாக இருந்தால் என்ன செய்வீர்கள்? சிந்தனை செய்க.

## மதிப்புக்கல்வி

### மனிதநேயம்

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியில் இருந்த அவர், நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் முதல் இருபது மணி நேரம் வரை கடுமையாக உழைப்பார். சில நாள் வீடு திரும்ப அவருக்கு நள்ளிரவுக்குமேல் ஆகிவிடும்.

ஒருநாள் அவர், நள்ளிரவுக்குமேல் வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் வீடு திரும்பினார். –நெடுங்காலமாக அவரிடம் வேலை பார்த்துவரும் காவலர், அன்று களைப்பு மிகுதியால் உறங்கிக்கொண்டிருந்தார்.

அவருடன் வந்த மற்றவர்கள், அக் காவலரை எழுப்பச் சென்றார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தி, பாவம், வயதானவர்; அவரை எழுப்பாதீர்கள்; அவர் தூங்கட்டும் என்று கூறியவாறே தாமே அறையின் திறவுகோலை எடுத்துச்சென்று அறையைத் திறந்தார்.

அவரோடு வந்த வெளிநாட்டு நண்பர் தமது கட்டுரை ஒன்றில், அவரின் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டாய் இந்நிகழ்வைக் குறிப்பிடுகிறார்.

அவர்தாம் இந்தியாவின் முதன்மையமைச்சராக இருந்த நேரு.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

பூங்காவில்...

“டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே . பட், நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி ? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்.”

“சண்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்குதே, டோண்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே.”

தந்தைக்கும் மகளுக்கும் நடந்த உரையாடலைப் படித்தீர்களா ?

இப்படிப் பேசினால் தமிழுக்கும் பெருமையில்லை; ஆங்கிலத்திற்கும் சிறப்பில்லை. தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம். மேற்காணும் உரையாடலில் பயன்படுத்தியுள்ள ஆங்கிலச் சொற்களை நீக்கி. அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பேசிப் பழகுக.

## மொழியாக்கம்

அ) தமிழாக்கம் செய்க.

Maps serve better than the printed pages for giving many kinds of information. In fact, people made and used maps before they learned how to read and write. Explorers have found maps that had been made by their ancestors. Sometimes these maps were carved on stones.

ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

1. Health is wealth.
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
2. Too much of anything is good for nothing.
   அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
3. No pain no gain.
   உழைப்பின்றி ஊதியமில்லை.
4. Haste makes waste.
   பதறாத காரியம் சிதறாது.
5. Knowledge is power.
   அறிவே ஆற்றல்.

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது. ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருகவேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

– தந்தை பெரியார்.

# சிலப்பதிகாரம்

## மதுரைக் காண்டம்

### வழக்குரை காதை

#### முன்கதைச் சுருக்கம்

காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன். இவன், கலையுணர்வும் வறியோர்க்கு உதவும் நற்பண்பும் மிக்கவன். காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள் கண்ணகி. இவள், திருமகள் போன்ற அழகும் பெண்கள் போற்றும் பெருங்குணச் சிறப்பும் கற்புத்திறமும் மிக்கவள். இவ்விருவரும் மனையறம்பூண்டு இன்புற்று வாழ்ந்தனர்.

கோவலன், ஆடலரசி மாதவியை விரும்பிக் கண்ணகியை விட்டுப் பிரிந்தான். அவன், மாதவி இல்லத்திலேயே தங்கித் தன் செல்வத்தையெல்லாம் இழந்தான். மாதவி, இந்திரவிழாவில் கானல்வரிப் பாடலைப் பாடினாள். பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்ட கோவலன், மாதவியை விட்டுப் பிரிந்தான். பிரிந்தவன், தன்மனைவி கண்ணகியிடம் சென்றான். அவன், தான் இழந்த செல்வத்தை ஈட்ட எண்ணினான்.

வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். அவர்களுக்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள் என்னும் சமணத்துறவி சென்றார். அவர், மதுரை நகர்ப்புறத்தில் மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார். கோவலன் சிலம்பு விற்றுவர மதுரைநகரக் கடைவீதிக்குச் சென்றான். விலைமதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றனைக் கோவலன் விற்பதனைப் பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் அறிந்தான்.

பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன், பொய்யான பழியைக் கோவலன்மேல் சுமத்தினான். அதனை ஆராய்ந்து பாராத மன்னன், 'அவனைக் கொன்று, சிலம்பைக் கொணர்க' என்று ஆணையிட்டான். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதரி மூலம் அறிந்த கண்ணகி பெருந்துயருற்றாள். அவள், 'தன் கணவன் கள்வன் அல்லன்' என்பதனை மன்னனுக்கும், உலகோர்க்கும் உணர்த்த எண்ணினாள்; பாண்டிய மன்னன் அவைக்குச் சென்று வழக்குரைத்தாள்.

வாழியெம் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் தலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்

பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்

பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என
வருக மற்றவள் தருக ஈங்கென

வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
* வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்

கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி *
கண்ணகி யென்பதென் பெயரேயெனப், பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்என ஒள்ளிழை

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் சிலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்

கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்

மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

– இளங்கோவடிகள்

பொருள் : கொற்கை என்னும் துறைமுகத்தை உடைய பாண்டிய மன்னனே வாழ்வாயாக! தெற்குப் பகுதியில் உள்ள பொதியமலைக்குத் தலைவனே வாழ்க! செழியனே வாழ்க! தமிழ்நாட்டின் தென்பகுதித் தலைவனே வாழ்க! இதுவரை பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே வாழ்க!

வெற்றிதரும் வேலினைத் தன்பெரிய கையில் ஏந்தி, ‘பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை பீடத்தில் ஏறிய இளங்கொடியாகிய கொற்றவையும் அல்லள்; கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும் அல்லள்; இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும் அல்லள்; அச்சம்தரும் காட்டைத் தான் விரும்பும் இடமாகக் கொண்ட காளியும் அல்லள்; தாருகன் என்ற அசுரனின் பரந்த மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்; தன் உள்ளத்தில் கறுவு கொண்டாள் போலவும், மிக்க சினம் கொண்டாள் போலவும், விளங்குகின்றாள்; வேலைப் பாடமைந்த பொற்சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தியவளாய் இருக்கின்றாள்; கணவனை இழந்த அவள், நம் வாயிலின் முன்னே நிற்கின்றாள்’, என்று வாயிற்காவலன் அறிவித்தான். அத்தகையவளை அழைத்து வருக என்று அரசன் கூறினான்.

வாயிற்காவலன் கண்ணகியைப் பாண்டிய மன்னனிடம் அழைத்துச் சென்றான். மன்னன் கண்ணகியை நோக்கி, “இளமையான கொடி போன்றவளே! நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ, யார்?” என வினவினான். கண்ணகி மன்னனை நோக்கி, “ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு” என உரைக்கத் தொடங்கினாள்.

‘புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும், தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதிச்சோழனும் வாழ்ந்த, பெரும்புகழுடைய புகார் நகரமே யான் பிறந்த ஊர். அப்புகார் நகரில் பழியில்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசாத்துவான் மகனை மணம்புரிந்தேன். வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலைசெய்யப்பட்ட கோவலன் மனைவி நான், கண்ணகி என்பது என் பெயர்’ என்று கூறினாள்.

பாண்டிய மன்னன் கண்ணகியிடம், “கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று; அதுவே அரச நீதி” என்று கூறினான். அதற்குக் கண்ணகி, “அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது” என்றாள்.

அதற்கு அரசன், “நீ கூறியது நல்லதே! எம்முடைச் சிலம்பின் பரல்கள் முத்துகளே” என்றான். கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கொண்டுவரச் செய்து, அவள் முன் வைத்தான். வைத்த அச்சிலம்பினைக் கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள். அதிலிருந்து வெளிப்பட்ட மாணிக்கப்பரல் ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது.

அம்மாணிக்கப் பரல்களைக் கண்ட பாண்டிய மன்னன் தாழ்வுற்ற குடையனாய், சோர்வுற்ற செங்கோலனாய், “பொன்தொழில் செய்யும் கொல்லனின் பொய்யுரை கேட்டு, அறநெறி தவறிய, நானோ அரசன்! நானே கள்வன்; அறந்தவறாது குடிமக்களைக் காக்கும் தொன்மையாட்சி என்முதல் தவறியது. என் வாழ்நாள் அழியட்டும்” என்றவாறே மயங்கி வீழ்ந்தான்.

மன்னனின் மனைவி கோப்பெருந்தேவி உள்ளங்கலங்கி, உடல் நடுங்கி, ‘கணவனை இழந்த மகளிர்க்கு, எவ்விதத்திலும் ஆறுதல் கூற இயலாது’ என்று கூறித், தன் கணவனின் திருவடிகளை வணங்கி நிலத்தில் வீழ்ந்து இறந்தாள்.

சொற்பொருள் : கொற்கை – பாண்டிய நாட்டின் துறைமுகம்; தென்னம் பொருப்பு – தென் பகுதியில் உள்ள பொதிகைமலை; பழியொடு படரா – மறநெறியில் செல்லாத; அடர்த்துஎழு குருதி – வெட்டுப்பட்ட இடத்தினின்றும் பீறிட்டு எழும் செந்நீர்; பசுந்துணி – பசிய துண்டம்; தடக்கை – நீண்ட கைகள்; அறுவர்க்கு இளைய நங்கை – ஏழு கன்னியருள் இளையவளாகிய பிடாரி; இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு – இறைவனை நடனமாடச் செய்த காளி; சூருடை கானகம் – அச்சம் தரும் காடு; உகந்த – விரும்பிய; தாருகன் – அரக்கன்; பேர்உரம் கிழித்த பெண் – அகன்ற மார்பினைப் பிளந்த துர்க்கை; செற்றம் – கறுவு; செயிர்த்தனள் – சினமுற்றவள்; பொற்றொழில் சிலம்பு – வேலைப்பாடுமிக்க பொற்சிலம்பு; கடையகத்தாள் – வாயிலின் முன்னிடத்தாள்; நீர்வார்கண் – நீரொழுகும் கண்கள்; தேரா – ஆராயாத; எள்ளறு – இகழ்ச்சி இல்லாத; இமையவர் – தேவர்; புள் – பறவை (புறா); புன்கண் – துன்பம்; கடைமணி – அரண்மனை வாயில்மணி; ஆழி – தேர்ச்சக்கரம்; ஏசா – பழியில்லா; கோறல் – கொல்லுதல்; கொற்றம் – அரச நீதி; நற்றிறம் – அறநெறி; படரா – செல்லாத; வாய்முதல் – (வாயின் முதலாகிய) உதடு.

இலக்கணக்குறிப்பு : மடக்கொடி – அன்மொழித்தொகை; படராப் பஞ்சவ, அடங்காப் பசுந்துணி, தேரா மன்னா, ஏசாச் சிறப்பின் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்; தடக்கை – உரிச்சொற்றொடர்; புன்கண், பெரும்பெயர், அரும்பெறல், பெருங்குடி, கடுங்கோல், செங்கோலன், நன்மொழி – பண்புத்தொகைகள்; உகுநீர், சூழ்கழல், செய்கொல்லன் – வினைத் தொகைகள்; அவ்வூர் – சேய்மைச்சுட்டு; வாழ்தல் – தொழிற்பெயர்; என்கால், என்பெயர், நின்னகர், என்பதி – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்; புகுந்து – வினையெச்சம்; தாழ்ந்த, தளர்ந்த – பெய ரெச்சங்கள்; வருக, தருக, கெடுக – வியங்கோள் வினைமுற்றுகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : வருக – வா (வரு) + க. வா – பகுதி, வா – வரு என்றானது விகாரம், க – வியங்கோள் வினைமுற்று விகுதி; வந்தோய் – வா (வ) + த் (ந்) + த் + ஓய். வா – பகுதி, வா – வ எனக் குறுகியது விகாரம், த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஓய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி; தீர்த்தோன் – தீர் + த் + த் + ஓன். தீர் – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஓன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; உரைத்தது – உரை + த் + த் + அ + து. உரை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – சாரியை, து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி; கேட்ட – கேள் (ட்) + ட் + அ. கேள் – பகுதி, ள் – ட் ஆனது விகாரம், ட் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி; வீழ்ந்தனள் – வீழ் + த் (ந்) + த் + அன் + அள். வீழ் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, அள் – பெண்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : எள்ளறு – எள் + அறு; புள்ளுறு – புள் + உறு; அரும்பெறல் – அருமை + பெறல்; பெரும்பெயர் – பெருமை + பெயர்; அவ்வூர் – அ + ஊர்; பெருங்குடி – பெருமை + குடி; புகுந்தீங்கு – புகுந்து + ஈங்கு; பெண்ணணங்கு – பெண் + அணங்கு; நற்றிறம் – நன்மை + திறம்; காற்சிலம்பு – கால் + சிலம்பு; செங்கோல் – செம்மை + கோல்.



ஆசிரியர் குறிப்பு : இளங்கோவடிகள் சேரமரபினர். இளங்கோவடிகளின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் நற்சோணை. இவர்தம் தமையன் சேரன் செங்குட்டுவன். இளையவரான இளங்கோவே நாடாள்வார் என்று கணியன் கூறிய கருத்தைப் பொய்ப்பிக்கும்பொருட்டு, இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற்கோட்டத்தில் தங்கினார். இளங்கோவடிகள் அரசியல் வேறுபாடு கருதாதவர்; சமய வேறுபாடற்ற துறவி. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. இளங்கோவடிகளின் சிறப்புணர்ந்த பாரதியார், "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" எனப் புகழ்கிறார்.

நூற்குறிப்பு : சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது ஆதலின், சிலப்பதிகாரமாயிற்று. சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெருங் காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது; புகார்க்காண்டம் பத்துக் காதைகளையும்,

மதுரைக்காண்டம் பதின்மூன்று காதைகளையும், வஞ்சிக்காண்டம் ஏழு காதைகளையும் கொண்டுள்ளது. இஃது, 'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்' எனவும் வழங்கப்பெறும்.

முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரத்தைப் போற்றிப் புகழ்வர். "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனப் பாரதியாரால் போற்றப்பட்டது இக்காப்பியம். நம் பாடப்பகுதியாகிய வழக்குரை காதை, மதுரைக்காண்டத்தின் பத்தாவது காதையாகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்கள். இவற்றுள் முதன்மையானது சிலப்பதிகாரம். காலத்தாலும் கதைத்தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்ட சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இரட்டைக்காப்பியம் என வழங்குவர். இசை நாடகமே சிலப்பதிகாரக் கதையின் உருவம்.

நூலெழுந்த வரலாறு : சேரன் செங்குட்டுவன், சீத்தலைச்சாத்தனாரோடும் இளங்கோவடிகளோடும் மலைவளம் காணச் சென்றான். அங்கிருந்த மலைவாழ் மக்கள், "வேங்கை மரத்தின்கீழ் ஒரு பெண்தெய்வத்தைப் பார்த்தோம்" என்று கூற, உடனிருந்த பெரும்புலவர் சாத்தனார், "அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்" என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார். அதனைக் கேட்ட இளங்கோவடிகள், "இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்" என்று கூறினார். சாத்தனாரும், 'அடிகள் நீரே அருளுக' என்றார். இவ்வாறே சிலப்பதிகாரம் உருவாயிற்று.

நூற்பயன் : "அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" என்னும் முப்பெரும் உண்மைகளைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் ____________ ஆகும்.

ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை, ____________, வளையாபதி ____________ என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) இளங்கோவடிகள் ____________ நாட்டைச் சேர்ந்தவர்.

1. சோழ 2. சேர 3. பாண்டிய

ஆ) 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடியவர் ____________.

1. கவிமணி 2. பாரதிதாசன் 3. பாரதியார்

**3. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.**

அ) வா ___ தல் ( ல்/ழ் ) வே ___ டி ( ண்/ன் ) ஊழ்வினை து ___ ப்ப. (ற/ர)

ஆ) தா ___ ந்த ( ள்/ழ் ) குடையன் தளர் ___ த ( ன்/ந் ) செங்கோ ___ ன் ( ள/ல )

4. சீர் எதுகைகளை அடிக்கோடிடுக.

1. வருக மற்றவள் தருக ஈங்கென.
2. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே.

5. சீர் மோனைகளை அடிக்கோடிடுக.

1. கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று.
2. யானோ அரசன் யானே கள்வன்.

6. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. புகார்க்காண்டம் | – | பதின்மூன்று காதைகள் |
| 2. மதுரைக்காண்டம் | – | ஏழு காதைகள் |
| 3. வஞ்சிக்காண்டம் | – | பத்துக் காதைகள் |
| | – | பதினைந்து காதைகள் |

## ஆ) குறுவினாக்கள்

1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை ?
2. சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறது ?
3. சிலம்பு உணர்த்தும் முப்பெரும் உண்மைகள் யாவை ?
4. 'யாரையோ நீமடக்கொடி' – யார், யாரிடம் கூறியது ?
5. 'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே' – யார், யாரிடம் கூறியது ?

## இ) சிறுவினாக்கள்

1. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?
2. கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.
3. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை ?
4. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது ?

## ஈ) நெடுவினாக்கள்

1. "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?
2. கண்ணகிக்கும் பாண்டியமன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

செயல்திட்டம் : வழக்குரைகாதை நிகழ்ச்சியை வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

## தமிழ் வளர்ச்சி

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

* உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர். *

– பாவேந்தர் பாரதிதாசன்

பொருள் : தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல்வேண்டும். இலக்கண நூல்களைப் புதிதாகப் படைத்தல்வேண்டும். உலகின் புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி விளக்கப் படங்களுடன் நூல்களாக்கிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும். வறுமையினால் தமிழன் ஒருவன் கல்லாத நிலை ஏற்படுமானால், இங்குள்ளோர் நாணம் அடைதல்வேண்டும். பல்வேறு துறை நூல்களைப் பிறர் துணையின்றி எல்லாரும் படித்தறிந்துகொள்ளும் வகையில், தமிழில் வெளியிடல்வேண்டும். தமிழறிவை மதங்களுக்குள் அடக்காமைவேண்டும். இலவச நூல்நிலையங்கள் ஊர்தோறும் ஏற்படுத்தல்வேண்டும். தமிழின் பெருமைகளைக் கூறுவதிலேயே காலம் கழித்தோம்; குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைத்தோமில்லை; உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்ப்போம், வாரீர்.

சொற்பொருள் : தெளிவுறுத்தும் – விளக்கமாகக் காட்டும்; சுவடி – நூல்; எளிமை – வறுமை; நாணிடவும் – வெட்கப்படவும்; உலகியலின் அடங்கலுக்கும் – வாழ்வியல் முழுமைக்கும்; தகத்தகாய – ஒளிமிகுந்த (சிறப்பு மிகுந்த என்னும் பொருளில் புதிய சொல்லாக்கத்தைக் கவிஞர்

தந்துள்ளார்); சாய்க்காமை – அழிக்காமை; நூற்கழகங்கள் – நூலகங்கள்; களைந்தோம் – நீக்கினோம்; தாபிப்போம் – நிலைநிறுத்துவோம்.

**இலக்கணக்குறிப்பு :** புதிது புதிது, சொல்லிச் சொல்லி – அடுக்குத்தொடர்கள்; செந்தமிழ் – பண்புத்தொகை; சலசல – இரட்டைக்கிளவி.

**பகுபத உறுப்பிலக்கணம் :** கழித்தோம் – கழி + த் + த் + ஓம். கழி – பகுதி; த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஓம் – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி; களைந்தோம் – களை + த் (ந்) + த் + ஓம். களை – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஓம் – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

**பிரித்தறிதல் :** வெளியுலகில் – வெளி + உலகில்; செந்தமிழ் – செம்மை + தமிழ்; ஊறறியும் – ஊர் + அறியும்; எவ்விடம் – எ + இடம்.



**ஆசிரியர் குறிப்பு :** பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர், 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் 29ஆம் நாள் புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி. பாரதியின்மேல் கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். இவர் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் ஆகிய சிறப்புப்பெயரால் வழங்கப்படுகிறார். குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன இவர்தம் படைப்புகளாம். பாரதிதாசன் பரம்பரை என்றொரு கவிஞர் பரம்பரையே அவர் காலத்தில் உருவானது. தமிழக அரசு, பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியுள்ளது; ஆண்டு தோறும் சிறந்த கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருது வழங்கி வருகிறது; திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்துச் சிறப்புச் சேர்த்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) குடும்ப விளக்கு ________ படைப்புகளுள் ஒன்று.

1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. சுரதா

ஆ) பாரதிதாசனார் ________ என அழைக்கப்படுகிறார்.

1. புரட்சிக்கவிஞர் 2. தேசியக்கவிஞர் 3. உவமைக்கவிஞர்


### ஆ) குறுவினாக்கள்

1. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன ?
2. பாரதிதாசனின் படைப்புகள் நான்கனை எழுதுக.
3. தமிழர் எதற்கு நாணிடவும் வேண்டும் ?

### இ) சிறுவினாக்கள்

1. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?
2. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை ?

# பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள்



தமிழ்த்திருநாடு சான்றோர் பலரை நாட்டிற்கு வழங்கி அணி செய்திருக்கிறது. மொழிக்காக வாழ்ந்தவர் பலர். நாட்டின் விடுதலைக்காக வீழ்ந்தவர் பலர். மண்டிக் கிடந்த மூடக்கருத்துகளைச் சிதைத்தவர் சிலரே. அவருள் தமிழ்நாடு தவம் செய்து பெற்றவர் ஒருவருண்டென்றால், அவர்தாம் பெரியார்.

தொண்டு செய்து பழுத்த பழம்
  தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
  மனக்குகையில் சிறுத்தை எழும்.

இப்பாடல் வரிகள் பெரியாரைப் பற்றிய பாவேந்தரின் படப்பிடிப்பு.

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள்; புலவராய், பாடினியாய், விறலியாய்த் திகழ்ந்து மாண்புடை மன்னரால் மதிக்கப் பெற்றார்கள். கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர். மறங்கொண்ட மன்னனின் பகையை மாற்றத் தூது சென்ற பெருமையையும் அக்காலத்துப் பெண்கள் பெற்றிருந்தார்கள். அக்காலச் சூழல் பிற்காலத்தே மாறியது. வந்தவர் கூறிய கருத்தையெல்லாம் இங்கு வாழ்ந்தவர் ஏற்றனர்; பெண்களை அடிமைப்படுத்தினர்; வீட்டிற்குள் முடக்கி வைத்தனர். எனவே, நாட்டு விடுதலைக்குப் போராடிய பெரியார், பெண்களின் சமூக விடுதலைக்கும் போராடினார்.

பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகை. ஒன்று, அடிப்படைத் தேவைகள்; பிறிதொன்று, அகற்றப்படவேண்டியவை. பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியன அடிப்படைத் தேவைகள். குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியன அகற்றப்படவேண்டியவை.

## பெண்கல்வி

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை, வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே. இது நாட்டு நடப்பை அறியவிடாமல் அவர்களின் அறிவை மறைக்கச் செய்வதாகும். 'நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய,

பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. அப்படி மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதனால் பயனொன்றும் விளையாது. பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்றவேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது' என்று பெரியார் உறுதியாக எடுத்துரைத்தார்.

"ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்கவேண்டும். நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை; இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்" என்றார் பெரியார்.

## பெண்ணுரிமை

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார். அதற்காக அவர், அவர்களை ஆயத்தப்படுத்தும் முறையே தனியானது. 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்று சிந்தித்தவர் பெரியார். அவர், 'பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும்' என்று வலியுறுத்தினார்.

## சொத்துரிமை

பெரியார் பெண்ணுரிமை மறுப்புக்கான காரணங்களை நன்கு ஆராய்ந்தார். பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது என்று உணர்ந்தார். அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டுமெனக் கூறினார்.

"பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவகையான அடிமைத்தனங்களும் ஒழிந்துபோகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும்" என்று பெரியார், தம் கட்டுரைகளில் எழுதியும் மேடைகளில் பேசியும் வந்தார். இன்று அச்சிந்தனை நடைமுறைக்கு வந்ததுள்ளது.

## அரசுப்பணி

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப்போலவே பெண்களும் அரசுப்பணியைப் பெறவேண்டும். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது, நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும். "பெண்களுக்கு எல்லா வகையான

உத்தியோகமும், கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறோம்'' என்று, பெரியார் அன்று சிந்தித்ததனைத் தமிழக அரசு இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## அகற்றப்பட வேண்டியவை

சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும் களைவதில் உறுதியான உள்ளம் படைத்தவராக இருந்தார் பெரியார். பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார். விடுதலைக்கு முன்னிருந்த பெருங்கொடுமைகளுள் குழந்தை மணமும் ஒன்று. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா? இது, சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு எனக்கூறி அதனை நீக்கப் பாடுபட்டார்.

## மணக்கொடை மறுப்பும் கைம்மை ஒழிப்பும்

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகப் பணம், செலவழிப்பதனைத் தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவிமூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிடவேண்டுமென்று துடிக்கின்றனர். "சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும். தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாறவேண்டும். "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்'' என்று பெரியார் நாப்பறை ஆர்த்தார். கணவனை இழந்தோர் மறுமணம் செய்துகொள்வதில் தீங்கில்லை என்றும் தெரிவித்தார்.

## ஒழுக்கம்

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்கவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது, அவர்தம் கருத்து.

பெரியார், சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூகமாற்றத்தை விரும்பியவர்; பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர்; பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால், தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ________ ஒன்று உண்டு.
2. பெரியார் சமூக ________ எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை ________ .

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர்

   1. திரு.வி.க. 2. பெரியார் 3. பாரதிதாசன்

2. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ________ இல்லாமை.

   1. வாக்குரிமை 2. பேச்சுரிமை 3. சொத்துரிமை

**3. விடைகளுக்கு ஏற்ற வினா எழுதுக.**

1. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
2. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.

**4. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

1. அனைத்து துறைகளிலும் ஆண்களைபோலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்கவேண்டும்.
2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.

**5. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.**

1. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்.
2. பெண்கள் பெறவேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

### ஆ) குறுவினாக்கள்

1. பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகளை எவ்வாறு பகுக்கலாம்?
2. ஒழுக்கம் குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?
2. பெண்ணுரிமையை விளக்குக.
3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

### ஈ) நெடுவினாக்கள்

1. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக.
2. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.

# மெல்ல மெல்ல மற!

– இலட்சுமி

அன்று ஞாயிற்றுக்கிழமை. புறநகர்ப் பகுதியில், பள்ளிக்கூடக் கட்டடத்தில் காலை பத்து மணிக்குமேல் ஆரம்பிக்கவிருந்த மருத்துவமுகாமுக்குக் கோகிலாவும் சென்றிருந்தாள்.

வீடு திரும்புவதற்குள் உச்சிப் பொழுதாகிவிட்டிருந்தது.

"டாக்டரம்மா என்ன சொன்னாங்க ? விழுந்தடிச்சுக்கொண்டு ஓடினாயே" உல்லாசமாகச் சிரித்தான் கணவன்.

"என்னைப் பரிசோதிச்சிட்டு, உடம்பிலே கோளாறு இல்லேன்னுட்டாங்க. சாதாரணமா பெண்களுக்கு இருபத்தஞ்சு வயசுல இருந்து ஐம்பத்தஞ்சு வயசுவரை, மார்பில புத்துநோய் வரலாம்னு சொன்னாங்க." அதை ஆரம்பத்திலியே கவனிச்சா, குணப்படுத்திடலாமாம்.

"உனக்கு ஒண்ணுமில்லேன்னு தெரிஞ்சிட்டுதில்லியா" கேலி செய்தான்.

"சாதாரண வியாதியா அது. அப்படி அசட்டையா இருக்க. அ! அவங்ககூட ஒரு புத்தகம் குடுத்தாங்க. உங்க கணவர் புகை பிடிப்பாரான்னு கேட்டுட்டுக் குடுத்தாங்க. இதோ பாருங்க" புத்தகத்தை அவன்முன் நீட்டினாள் சாமர்த்தியமாக.

"புகை – உங்களுக்குப் பகை! பேஷ்! இதை நீயே படிச்சுக் காட்டு" கமலநாதன் முகத்தில் புன்னகை மறையத் துவங்கியது.

புகை பிடிக்கிறவங்களுக்கு நூத்துக்கு இருபத்தஞ்சு பேருக்காவது சுவாசப் பையில புத்துநோய் வருதாம். புகை பிடிப்பதால் இரத்தக்குழல் சுருங்கிப் போகும். மாரடைப்பு வருவதற்கு வழியாகிறதாம். அது மட்டுமில்லை. இத்தோடு சங்கிலித் தொடராக, சளி, சுரம், வாய் ஓயாத இருமல், எரிச்சல், கைகளில் நடுக்கம், தூக்கமின்மை, பசியின்மை... இப்படிப் பல தொல்லைகள் ஏற்படுகின்றனவாம்."

"நிறுத்து! நிறுத்து! நான்தான் பில்டர் டிப் சிகரெட் பிடிக்கறேனே. அதிலே, புத்துநோய் கொடுக்கும் விஷப்பொருள் வடிகட்டப்பட்டுவிடுதே ?" சொல்லியபடி அருகிலிருந்த சிகரெட் பெட்டியைக் கையிலெடுத்தான், அவன்.

பில்டர் டிப் சிகரெட் குடிச்சா... அவங்களுக்கும் புத்துநோய் மெல்ல வரும்னு, டாக்டரும் சொன்னாங்க."

"இதோ பாரு கோகிலா! இந்தப் பழக்கத்தை ஆனமட்டும் நிறுத்தப் பார்த்தேன். பாக்கைத் தின்னு மாத்தனும்னு முயற்சி செஞ்சேன். பாக்குத் தின்னா வாயிலே புத்துநோய் வரும்னாங்க. சரி! காப்பியைக் குடிச்சுப் பார்க்கலாம்னு பார்த்தேன். அது இருதயத்துக்குக்

கெடுதல்னாங்க. எதில இல்லே நோய்கள்? ஏதாவது வந்து தொலையட்டும் போ. ஏதாச்சும் நீ பேச்சு எடுத்தே... நான் மகா பொல்லாதவனா ஆயிடுவேன், ஆமாம்!” உரக்கக் கத்தினான் கமலநாதன்.

கல்யாணமான புதிதில் அவள் கணவனது புகைப்பழக்கத்தைக் கண்டிக்க ஆரம்பித்தாள். அப்போதும் தர்க்கம்தான். ‘எத்தனையோ எடுத்துச் சொல்லியும், கெஞ்சியும் வழிக்கு வரவில்லையே’ என்று வேதனையில் உழன்று கொண்டிருந்தாள், கோகிலா.

ஒருநாள் ஆபீசிலிருந்து அவசரமாகத் திரும்பி வந்தவன், “கோகிலா! உடனே குழந்தைகளை உன் சிநேகிதி வீட்ல விட்டுவிட்டு, வீட்டைப் பூட்டிகிட்டுப் புறப்படு” என்றான். அவன் முகம் கலவரமடைந்திருந்தது. “என்னங்க?” பதறினாள் அவள்.

“நர்மதா நர்சிங் ஹோமில், என் சிநேகிதன் இராமலிங்கத்தை, உடம்புக்கு ரொம்ப முடியாம சேத்திருக்காங்களாம்.”

“புறப்படு... அவனுக்கு ஆச்சு போச்சுன்னு ஆயிட்டுதாம்” பரபரப்புடன் செயல்பட்டான்.

டாக்சி பிடித்து நர்சிங் ஹோமில் அவனது அறைக்குப் போனதும் பெருத்த அதிர்ச்சி அவர்களுக்கு.

“என்ன ஆச்சுங்க” கமலநாதன் மெதுவாகக் கேட்டான். ஜாடை செய்து அவர்களிருவரையும் அறைக்கு வெளியே அழைத்து வந்தாள், இராமலிங்கத்தின் மனைவி சியாமளா.

“எத்தனையோ சொல்லிப் போராடிப் பார்த்தேங்க, பிடிவாதமா புகை பிடிக்கற பழக்கம்... எப்பிடி கொண்டுவந்து விட்டுடுச்சு பாருங்க. ஒருநாளைக்கு மூணு டப்பா சிகரெட் ஓயாம பிடிப்பாரு. ஓயாத இருமல். அதை அசட்டையா விட்டாரு. வாய் ஓயாம இரும ஆரம்பிச்சதும் டாக்டர் கிட்ட காட்டி, ‘எக்ஸ்ரே’ அது இதுன்னு பணம் தண்ணியா செலவாச்சு; குணம்தான் இல்லே. கடைசியிலே சுவாசப்பையில புத்துநோய் வந்ததா கண்டுபிடிச்சாங்க. எப்படியாச்சும் குணப்படுத்திடுங்கன்னு டாக்டர் கால்ல விழுந்து கெஞ்சினேன். ஆனா... ஆரம்பத்திலியே சிகிச்சைக்கு வந்திருந்தா ஏதாவது செய்திருக்க முடியும். அதுவும் பூரண குணமாக்கிடுவோம்னு சொல்ல முடியாது. சுவாசப்பையிலிருந்து புத்துநோய்க் கட்டியை அறுத்து எடுத்த பிறகு ஒரு அஞ்சு அல்லது ஆறு வருஷம்தான் நோயாளி வாழமுடியும். இவர் நல்லாவே தமது ஆரோக்கியத்தைப் பாழடிச்சுட்டார்ன்னு சொல்லிட்டாரு. என் மனசு கேக்கலே... பல டாக்டர்கள், கோவில் குளம்னு அலையறேன். பலன்...? இப்போ நீங்க பார்க்கறீங்களே” சேலைத்தலைப்பை வாயில் அடைத்தபடி குமுறினாள், அவள்.

கமலநாதன் முகத்தில் முதல்முதலாகப் பயம் நிழலாடியது. அன்று இரவே, இராமலிங்கத்தின் கதை முடிந்துவிட்டது. அதில், அவன் நடுங்கிவிட்டான். நண்பனின் இறுதிச்சடங்கு முடிந்தபிறகு, சில நாள் கழித்துச் சியாமளாவைப் பார்த்து ஆறுதல் கூறச் சென்றனர், கோகிலாவும் கமலநாதனும். சுவரில் இராமலிங்கம் போட்டோவில் இருந்தபடி எட்டிப் பார்த்தான். அவன் மனைவியோ...? வெறும் கழுத்தும், வெறிச்சோடிய நெற்றியுமாக

“வாங்க! உட்காருங்க” என்று வரவேற்றாள். கமலநாதனுக்கு மனம், ‘திக்’ கென்று ஆகிவிட்டது. சோகமே உருவாக நின்ற அவளை ஒட்டியபடி நின்ற குழந்தைகள், “அப்பா எப்பம்மா வருவாரு” என்று கேட்டபோது அவனது அடிவயிற்றில் பகீரென்ற உணர்வு.

சிறிதுநேரம் ஆறுதல் சொல்லிவிட்டு, மனைவியுடன் வீடு திரும்பிய கமலநாதன், வழியில் மறக்காமல் நாலுமுழம் மல்லிகைப்பூவை வாங்கி வந்தான். வீடு வந்ததும், முதல் வேலையாக மனைவியிடம் பூவைக் கொடுத்தவன் கண்கள் கலங்கின.

“கோகிலா! பூவைத் தலைநிறைய வைத்துக்கொள், எப்பவும் பொட்டும் பூவுமா, சந்தோஷமா நீ இருக்கணும்” என்றான். கோகிலா திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்.

“இராமலிங்கத்தின் மரணம் அவன் குடும்பத்தை எப்படிப் பாதிச்சுட்டுதுன்னு என் மனசு ரொம்ப துடிச்சுப் போயிட்டுது கோகிலா! இனிமே, இந்த சிகரெட் பழக்கத்தை விட முயற்சி செய்றேன்! ஆனா, நான் ஒரு சராசரி மனிதன். கொஞ்சம் கொஞ்சமா விட முயற்சி செய்றேன். ஏன்னா, சியாமளா போல, உன்னையும் குழந்தைகளையும் நிறுத்திட்டு, நோயில கஷ்டப்பட்டுச் சாக நான் விரும்பல” தழுதழுத்தது, அவன் குரல். அவன் வாயைப் பொத்தினாள், அவள்.

“அப்படிச் சொல்லாதீங்க. இந்தப் பழக்கத்தைத் திடீரென விடறது சிரமம்தான். ஒப்புக்கறேன். ஆனா, மெல்ல மெல்ல மறக்க முயற்சி செய்யுங்க. நானும் உதவி செய்றேன்” என்றாள், உணர்ச்சி வசப்பட்டவளாக.

“நானும் ஒத்துழைக்கிறேன். சிகரெட் பிடிக்கணும்னு தோணிச்சா, தண்ணீரை மொண்டு கபகபன்னு வயிறு நிறையக் குடிச்சிடறேன்; தேகப்பயிற்சி செய்யறேன்; காப்பி சாப்பிட்டதும் சிகரெட் பிடிக்கணும்னு தோணுதா... வேண்டாம் டீ சாப்பிடறேன்; என் கைக்குச் சதா வேறு நல்ல வேலை கொடுக்கறேன். குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தரேன்; எழுதறேன்; அவங்களோட விளையாடறேன். ஓய்வு நேரத்தில் தோட்டம் கொத்தறேன்; புத்தகம் படிக்கிறேன். ஆபீஸில், மும்முரமா வேலையில் ஈடுபடறேன், போதுமா? எப்படியாவது இந்த சிகரெட் அசுரனின் பிடிகளிலேருந்து என்னை மெல்ல விடுவிச்சுடு கோகிலா!” கெஞ்சினான், அவன்.

“ஆண்டவா! அதிர்ச்சி உருவத்திலே எங்களுக்குத் துணை புரிஞ்சியாப்பா” மனத்தினுள் நன்றி கூறியபடி கோகிலா உட்பக்கம் சென்றாள். அவர்கள் இனித் தீவிரமாக முயற்சி செய்வார்கள். கமலநாதன் புகை மூட்டத்திலிருந்து விடுபட்டு, ஓர் ஆரோக்கியமான மனிதனாக, பூவும்பொட்டுமாக விளங்கும் கோகிலாவுடன் நெடுங்காலம் வாழ்வான். பேரன், பேத்திகள் எடுத்துப் பல்லாண்டு இன்பமாக வாழ்வான். இது உறுதி!

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. ‘மெல்ல மெல்ல மற’ என்னும் சிறுகதையின் மையக்கருத்தை மாறாமல் சுருக்கி எழுதுக.
2. கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதனை விளக்குக.

# சொல்

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். பதம், மொழி, கிளவி என்பன ஒரு பொருள்தரும் பல சொற்கள்.

பதம் – பகுபதம் ( பகுக்கவியலும் பதம் ); பகாப்பதம் ( பகுக்கவியலாப் பதம் )

மொழி – தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

கிளவி – இரட்டைக்கிளவி ( இரட்டைச்சொல் )

(எ–டு) 1. பூ, கை, தா, வா – இவை ஓரெழுத்துச் சொற்கள்.

2. மண், மாந்தர், நடந்தனர் – இவை இரண்டு முதலாகப் பல எழுத்துகள் தொடர்ந்த சொற்கள்.

## மூவகை மொழிகள்

மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

### 1. தனிமொழி

ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது, தனிமொழி.

(எ–டு) வா, கண், செய்தான்.

### 2. தொடர்மொழி

இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட சொற்கள் தொடர்ந்துவந்து பொருளை உணர்த்துவது தொடர்மொழி.

(எ–டு) 1. படம் பார்த்தான்.

2. பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருக்கின்றன.

### 3. பொதுமொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்துநின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, பொதுமொழி.

(எ–டு) அந்தமான்

'அந்தமான்' என்பது ஒரு தீவையும், அச்சொல்லே அந்த + மான் எனப் பிரிந்து நின்று, அந்த மான் ( விலங்கு ) என வேறுபொருளையும் தருகின்றது.

இதேபோல், பலகை, வைகை, தாமரை, வேங்கை முதலியன தனிமொழியாகவும் பொதுமொழியாகவும் வருவதை அறிக.

ஒருமொழி ஒருபொருள வனவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. – நன்னூல், 260

## வினைச்சொல்

இராமன் வந்தான். கண்ணன் நடந்தான்.

இத்தொடர்களில் இராமன், கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள். அவையே எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான், நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும், நடப்பதும் ஆகிய செயல்களைக் குறிப்பதால், இவை வினைச்சொற்கள். இவையே பயனிலைகளாகவும் ( முடிக்கும் சொற்களாகவும் ) உள்ளன. இவ்வாறு, எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

## வினைமுற்று

அருளரசு வந்தான். வளவன் நடந்தான்.

இத்தொடர்களில் வந்தான், நடந்தான் என்னும் வினைச்சொற்களின் பொருள் முற்றுப்பெற்று வந்துள்ளன. இவ்வாறு, தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்றுகள் என்பர். இது முற்றுவினை எனவும் வழங்கப்படும்.

'வந்தான், நடந்தான்' என்னும் வினைமுற்றுகள் 'ஆன்' என்னும் விகுதி பெற்றுள்ளதால், உயர்திணையையும், ஆண்பாலையும், ஒருமை என்ற எண்ணையும், படர்க்கை இடத்தையும், உணர்த்துகின்றன. 'த்' என்ற இடைநிலை வந்துள்ளதால் ( நட + த் ( ந் ) + த் + ஆன்); (வா (வ) + த் (ந்) + த் + ஆன்) இஃது இறந்த காலத்தையும் உணர்த்துகிறது.

வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும்; முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும்; திணை, பால், எண், இடங்களைக் காட்டும். இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

### தெரிநிலை வினைமுற்று

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று.

(எ–டு) உழுதான்

| | | |
|---|---|---|
| செய்பவன் | – | உழவன் |
| கருவி | – | கலப்பை |
| நிலம் | – | வயல் |
| செயல் | – | உழுதல் |
| காலம் | – | இறந்தகாலம் |
| செய்பொருள் | – | நெல் |

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. – நன்னூல், 320

### குறிப்பு வினைமுற்று

பொருள்முதல் ஆறனையும் அடிப்படையாகக்கொண்டு, முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவன் பொன்னன் | – | பொன்னை உடையவன் | – | பொருள் |
| அவன் விழுப்புரத்தான் | – | விழுப்புரத்தில் வாழ்பவன் | – | இடம் |
| அவன் சித்திரையான் | – | சித்திரையில் பிறந்தவன் | – | காலம் |
| அவன் கண்ணன் | – | கண்களை உடையவன் | – | சினை |
| அவன் நல்லன் | – | நல்ல இயல்புகளை உடையவன் | – | குணம் |
| அவன் உழவன் | – | உழுதலைச் செய்பவன் | – | தொழில் |

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே. – நன்னூல், 321

அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த ‘பொன்னன்’ என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

### எச்சம்

கயல்விழி படித்தாள். கோதை சென்றாள்.

இத்தொடர்களில் படித்தாள், சென்றாள் என்பன வினைமுற்றுகள்.

இவ்வினைமுற்றுகள் சில இடங்களில் ‘ஆள்’ என்னும் விகுதி குறைந்து படித்த, சென்ற எனவும், படித்து, சென்று எனவும் வரும். இச்சொற்கள் பொருளில் முற்றுப்பெறாத முழுமையடையாத வினைச்சொற்கள்; ஆதலால், எச்சம் எனப்படும்; அல்லது வினைமுற்றின் (ஆள்) விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும்.

### பெயரெச்சம்

படித்த கயல்விழி. சென்ற கோதை.

படித்த, சென்ற என்னும் முற்றுப்பெறாத எச்சவினைகள் கயல்விழி, கோதை எனப் பெயரைக்கொண்டு முடிந்ததால் அவை பெயரெச்சங்கள் எனப்படும். அஃதாவது, ஓர் எச்சவினை ( வந்த, நடந்த ) பெயரைக்கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும். இப்பெயரெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகாலப் பெயரெச்சம் – படித்த கயல்விழி, சென்ற கோதை
2. நிகழ்காலப் பெயரெச்சம் – படிக்கின்ற கயல்விழி, செல்கின்ற கோதை
3. எதிர்காலப் பெயரெச்சம் – படிக்கும் கயல்விழி, செல்லும் கோதை

இது தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

### தெரிநிலைப் பெயரெச்சம்

வந்த பையனைப் பார்த்துக் கண்ணன் நின்றான்.

இத்தொடரில் வந்த என்பது பையன் என்னும் பெயரைக்கொண்டு முடிவதால், பெயரெச்சம் எனப்படும். செய்த, செய்கின்ற, செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வாய்பாடுகள். இவை முக்காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டிச் செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும். இவை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

(எ–டு) உண்ட இளங்கோவன்.

| | | |
|---|---|---|
| செய்பவன் | – | இளங்கோவன் |
| கருவி | – | கலம் |
| நிலம் | – | வீடு |
| செயல் | – | உண்ணுதல் |
| காலம் | – | இறந்த காலம் |
| செய்பொருள் | – | சோறு |

உண்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறே பொருத்திக் காணலாம்.

| | | |
|---|---|---|
| | உடன்பாடு | – | எதிர்மறை |
| (எ–டு) | உண்ட இளங்கோவன் | – | உண்ணாத இளங்கோவன் |

### குறிப்புப் பெயரெச்சம்

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

(எ–டு) நல்ல பையன்

இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ செயலையோ உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிந்துள்ளது. இது காலத்தைக் ( இன்று நல்ல பையன், நேற்று நல்ல பையன், நாளை நல்ல பையன் ) குறிப்பால் உணர்த்தும்.

| | | | |
|---|---|---|---|
| | உடன்பாடு | – | எதிர்மறை |
| (எ–டு) | நல்ல மாணவன் | – | தீய மாணவன் |

### வினையெச்சம்

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும்.

(எ–டு) படித்து வந்தான், பாடக் கேட்டான், ஓடிச் சென்றான், போய்ப் பார்த்தான்.

அஃதாவது, ஓர் எச்சவினை, வினையைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகால வினையெச்சம் – படித்து வந்தான், ஓடிச் சென்றான்.
2. நிகழ்கால வினையெச்சம் – படித்து வருகின்றான், ஓடிச் செல்கின்றான்.
3. எதிர்கால வினையெச்சம் – படித்து வருவான், ஓடிச் செல்வான்.

இவ்வினையெச்சமும் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும். பெயரெச்சத்தில் எச்சங்கள் மட்டுமே செய்த, செய்கின்ற, செய்யும் எனக் காலத்துக்கேற்ப மாறும்; பெயர்கள் மாறா. வினையெச்சத்தில் எச்சங்கள் மாறா. மேலே காட்டியதுபோல அவை முக்கால வினைமுற்றுகளையும் பெற்றுவரும்.

### தெரிநிலை வினையெச்சம்

படித்துத் தேறினான் படிக்கச் செல்கின்றான்

இத்தொடர்களில் படித்து, படிக்க என்னும் சொற்கள் எச்ச வினையாய் நின்று காலத்தைக் காட்டித் தேறினான், செல்கின்றான் ஆகிய வினைமுற்றுகளைக் கொண்டு பொருள் முடிவு பெறுகின்றன. இவ்வாறு காலத்தையும், செயலையும் உணர்த்தி வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை, தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

### குறிப்பு வினையெச்சம்

மெல்லப் பேசினான். கண்ணன் நோயின்றி வாழ்ந்தான்.

இவ்விரு தொடர்களிலும் உள்ள மெல்ல, இன்றி என்னும் எச்ச வினைச்சொற்கள் காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பினை உணர்த்தி நின்று, வினைமுற்றைக்கொண்டு முடிந்துள்ளன. ஆகையால், இவை குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

### முற்றெச்சம்

மைதிலி வந்தனள் பாடினள். முருகன் படித்தனன் தேறினன்.

இத்தொடர்களில், வந்தனள், படித்தனன் என்னும் வினைமுற்றுகள் வந்து, படித்து என்னும் வினையெச்சப் பொருள்களில் நின்று, வேறு வினைமுற்றுகளைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு ஒரு வினைமுற்றுச் சொல், எச்சப்பொருளில் வந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதே முற்றெச்சம் எனப்படும்.

## மொழித்திறன் பயிற்சி

### தொகைச்சொல்

கனிகளுள் எவற்றை முக்கனி எனக் குறிப்பிடுகிறோம் ?

மா, பலா, வாழை.

முக்கனி என்பது தொகைச்சொல் எனப்படும். தொகை என்னும் சொல்லுக்குத் தொகுத்தல் என்பது பொருள். சில தொகைச்சொற்களை விரித்துக் காண்போம்.

இருவினை – நல்வினை, தீவினை; தன்வினை, பிறவினை

இருதிணை – உயர்திணை, அஃறிணை; அகத்திணை, புறத்திணை.

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | – | இயல், இசை, நாடகம் |
| முப்பால் | – | அறம், பொருள், இன்பம். |
| மூவிடம் | – | தன்மை, முன்னிலை, படர்க்கை. |
| மூவேந்தர் | – | சேரர், சோழர், பாண்டியர். |
| நாற்றிசை | – | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. |
| நானிலம் | – | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். |
| ஐந்திணை | – | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. |
| ஐம்பால் | – | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால். |
| ஐம்புலன் | – | தொடுஉணர்வு, உண்ணல், உயிர்த்தல், காணல், கேட்டல். |
| ஐம்பொறி | – | மெய், வாய், மூக்கு, கண், செவி. |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ____________.

ஆ) தொழிலைக் குறிக்கும் சொல் ____________ .

இ) வினைமுற்று ____________, ____________ என இருவகைப்படும்.

ஈ) ஓர் எச்ச வினை ____________ கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.

**2. தொகைச்சொற்களை விரித்தெழுதுக.**

1. இருவினை 2. முத்தமிழ் 3. மூவேந்தர் 4. நானிலம் 5. ஐந்திணை

### ஆ) குறுவினாக்கள்

1. சொல் என்றால் என்ன ?
2. மொழியின் வகைகள் யாவை ?
3. வினைச்சொல் என்றால் என்ன ?
4. வினைமுற்றைக்கொண்டு எவ்வெவற்றை அறியலாம் ?
5. பெயரெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
6. வினையெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
7. முற்றெச்சம் என்றால் என்ன ? சான்று தருக.

### இ) சிறுவினாக்கள்

1. பொதுமொழி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
2. தெரிநிலை வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.
3. குறிப்பு வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.
4. தெரிநிலைப் பெயரெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
5. குறிப்புப் பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
6. குறிப்பு வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

**செயல்திட்டம் :** பாடநூலிலுள்ள தொகைச்சொற்களை எடுத்தெழுதி விரித்துக்காண்க.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'பெண்கல்வி' என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

அறிஞர் அண்ணாவின் அடுக்குமொழி நடையைப் படித்துச் சுவைக்க.

மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கின்றேன்.

நான்மாடக்கூடலில் நிற்கின்றேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக்கோட்டமாய்த் திகழ்ந்தது இம்மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன். பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகிடுகின்றீர்! பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனைப் பன்மடங்கு பெருக்கிப் பார் மகிழத் தருவதற்கே, சூல்கொண்டு உலவுவது மேகம்; அறிகிறோம். தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ! ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளிலுள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு – புள்ளிக் கலாப மயில் – கார்மேகம்.

இவ்வுரைப்பகுதியிலுள்ள அடுக்குமொழித்தொடர்களை எடுத்தெழுதுக.

### இ) எழுதுதல் திறன்

கீழுள்ள சொற்றொடர்களை முறைப்படுத்திப் பத்தியமைப்பில் எழுதுக.

1. களைப்பு மிகுதியால் தள்ளாடித் தள்ளாடி நடந்த அவர், சோர்வு மேலிடச் சுற்றும் முற்றும் பார்த்தார்.
2. முரசு மட்டும் வைக்கக்கூடிய அக்கட்டிலில், யாரோ ஒருவர் படுத்திருப்பதைக் கண்டதும் உறையிலிருந்த வாளை எடுத்து அவரை வெட்டுவதற்குச் சென்றான் சேரமான்.
3. புலவரின் உறக்கம் கலையாதவாறு மெதுவாக அவருக்குக் கவரி வீசிக்கொண்டு நின்றான் சேரமான்.

4. மோசிகீரனார் என்னும் புலவர் ஒருசமயம் சேரமான் இரும்பொறையைக் காண நெடுந்தொலைவிலிருந்து வந்திருந்தார்.

5. சிறிது நேரத்தில் சேரமானும் வீரர்களும் அக்கட்டிலை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

6. முரசுக்கட்டிலுக்கு மிக நெருக்கமாகச் சென்றதும், திகைப்படைந்த சேரமான், ஓங்கிய வாளைக் கீழே தாழ்த்தினான். வீரர்களிடம் மயில் தோகையால் செய்யப்பட்ட கவரியைக்கொண்டு வருமாறு பணித்தான்.

7. அருகில் ஓர் அழகிய கட்டில் இருப்பதைப் பார்த்தார். களைப்பின் காரணமாகக் கால்களை நீட்டிப் படுத்துவிட்டார்.

### ஈ) கட்டுரை

சிக்கனமும் சிறுசேமிப்பும்

### உ) கடிதம்

குடிநீர்வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம்.

## தமிழெண்களை அறிவோம்

51 முதல் 100 வரை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 51 ௫௧ | 61 | 71 | 81 | 91 |
| 52 | 62 | 72 | 82 | 92 |
| 53 | 63 | 73 | 83 | 93 |
| 54 | 64 | 74 | 84 | 94 |
| 55 | 65 | 75 | 85 | 95 |
| 56 | 66 | 76 | 86 | 96 |
| 57 | 67 | 77 | 87 | 97 |
| 58 | 68 | 78 | 88 | 98 |
| 59 | 69 | 79 | 89 | 99 |
| 60 | 70 | 80 | 90 | 100 |

## வாழ்க்கைத்திறன்

### மறுத்தல் திறன்

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளிநேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

பெற்றோர் மாறனைப்பற்றி நினைப்பது சரியா?

நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக்கொள்ளவேண்டும்?

உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் புகைபிடித்தல் முதலான செயல்களில் ஈடுபட உங்கள் நண்பர்கள் உங்களை அழைக்கிறார்கள். அப்போது நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

அ) நண்பருடனான நட்பு நீடிக்கவேண்டும். எனவே, அவர்களின் பேச்சுக்கு உடன்படுவேன்.

ஆ) நீங்கள் செய்வது தவறு, இதனை அனைவரிடமும் வெளிப்படுத்தி விடுவேன் என்று கூறுவேன்.

இ) எனக்கு இதுபோன்ற செயல்களில் விருப்பம் கிடையாது என்று மென்மையாக மறுத்து விடுவேன்.

## மதிப்புக்கல்வி

### இரக்கம்

ஒருநாள், கொல்கத்தாவில் கனமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது, சாலையோரத்தில் கொட்டும் மழையில் மூதாட்டி ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அந்நிகழ்வைக் கண்ட பெண்மணி, அம்மூதாட்டியைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்தார். கவனிப்பாரற்றுச் சாலையில் திரிபவர்களையும் முதியோர்களையும் அரவணைத்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வதில் அப்பெண்மணி நாட்டம் கொண்டார். அனாதையாக இறப்பவர்களைப் புதைக்கும் பணியினையும் அப்பெண்மணி மேற்கொண்டார். அப்பணியினை மேற்கொள்ளும் இடத்தின் அருகில் கோவில் ஒன்று இருந்தது. அக்கோவிலைப் பராமரிப்பவர்களுக்கு அப்பெண்மணியின் செயல் பிடிக்காததால் அவரை, அங்கிருந்து வெளியேற்ற முடிவு செய்தனர். இதுகுறித்து அவரிடம் பேசுவதற்கு, அவர் இருப்பிடத்தை நோக்கி ஆவேசத்துடன் வந்தோர், அப்பெண்மணி செய்து கொண்டிருந்த செயலைக் கண்டு திகைத்து நின்றனர் . அப்பொழுது அப்பெண்மணி, தொழுநோயால் பாதிப்படைந்த ஒருவரின் புண்களைக் கழுவி மருந்து போட்டுக்கொண்டிருந்தார்.

தொட்டால் ஒட்டிக்கொள்ளும் என்று பயந்து அனைவரும் வெறுக்கக்கூடிய ஒரு நோயாளியை அவர் கவனித்துக் கொண்டமுறை, அவரை எதிர்த்துப் போராட வந்தவர்களை நாணமடையச் செய்தது. அவர்கள், அப்பெண்மணியை இருகரம் கூப்பி வணங்கினார்கள். தன்னலம் கருதாது பிறர்க்கு உதவுவதையே சிறந்த தொண்டாகக் கருதி வாழ்ந்த அப்பெண்மணிதான் அன்னை தெரேசா.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. Charity begins at home. | தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும். |
| 2. Covet all lose all. | பேராசை பெருநட்டம். |
| 3. Diamonds cut diamonds. | முள்ளை முள்ளால் எடு. |
| 4. East or west, home is the best. | எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது. |
| 5. Empty vessels make the greatest sound. | குறை குடம் கூத்தாடும். |

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்

### குகப் படலம்

**முன்கதைச் சுருக்கம் :**

அயோத்தி நாட்டு மன்னன் தசரதனுக்கு மக்கள் நால்வர். தசரதன், தன் மூத்த மகன் இராமனுக்கு முடிசூட்ட விழைந்தான். தசரதன் மனைவி கைகேயி; அவள் தோழி மந்தரை, இராமன் முடிசூடுவதனை விரும்பவில்லை. எனவே, கைகேயியின் மனத்தை மந்தரை வஞ்சக உரைகளால் மாற்றினாள். மனம் மாறிய கைகேயி, தசரதனிடம் தான்பெற்ற இரு வரங்களைப் பயன்படுத்தி, இராமன் காடு செல்லவும், தன்மகன் பரதன் நாடாளவும் வேண்டுமெனக் கூறினாள்.

மணிமுடி சூடப் புறப்பட்டு வந்த இராமனிடம் கைகேயி, "நீ பதினான்கு ஆண்டுகள் காடு செல்லவேண்டும். இது மன்னன் ஆணை" என்றாள். அதனை இராமன் பணிவுடன் ஏற்றான். தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் காட்டிற்குச் சென்றான். செல்லும் வழியில் கங்கைக்கரையை அடைந்தான். அங்கே அன்பே வடிவான வேட்டுவத் தலைவன் குகன், இராமனைச் சந்தித்தான்.

#### குகனின் வருகை

1. ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு
நாய கன்போர்க் குகன்எனும் நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்
காயும் வில்லினன் கல்திரள் தோளினான்.

**பொருள் :** போர்க்குணம் மிக்க குகனானவன் ஆயிரம் படகுகளுக்குத் தலைவன்; கங்கை யாற்றுத் தோணித்துறைக்குத் தொன்றுதொட்டு உரிமையுடையவன்; பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன்; மலைபோன்ற திரண்ட தோள்களை உடையவன்.

**சொற்பொருள் :** ஆயகாலை – அந்தநேரத்தில்; அம்பி – படகு; நாயகன் – தலைவன்; நாமம் – பெயர்; துறை – தோணித்துறை; தொன்மை – தொன்றுதொட்டு; கல் – மலை; திரள் – திரட்சி; காயும் வில்லினன் – பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன்.

**இலக்கணக்குறிப்பு :** போர்க்குகன் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; கல்திரள்தோள் – உவமைத்தொகை.

## குகனின் தோற்றம்

2. துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்தபேர்
அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான்,
நெடிய தானை நெருங்கலின் நீர்முகில்
இடியி னோடுஎழுந் தாலன்ன ஈட்டினான்.

**பொருள் :** குகன் துடியென்னும் பறை உடையவன்; வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்; தோல் செருப்பணிந்த பெருங்கால்களை உடையவன்; இருள் போன்ற கரிய நிறத்தையுடையவன்; கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தாற்போன்ற மிகுதியான படைபலம் உடையவன்.

**சொற்பொருள் :** துடி – பறை; அல் – இருள்.

**இலக்கணக்குறிப்பு :** நீர்முகில் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

**பகுபத உறுப்பிலக்கணம் :** ஈட்டினான் – ஈட்டு + இன் + ஆன். ஈட்டு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## குகன் இராமனைக் காண வருதல்

3. சிருங்கி பேரம் எனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகருறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீன்உப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்.

**பொருள் :** அலைகளையுடைய கங்கைக்கரையின் பக்கத்திலுள்ள சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழும் தலைவன் குகன். இவன், முனிவர்தம் தவச்சாலையிலுள்ள வள்ளல் இராமனைக் காணத் தேனும்மீனும் கொண்டுசென்றான். (அரசன், குரு, தெய்வம் ஆகியோரைக் காணச் செல்லும்போது வெறுங்கையோடு செல்லலாகாது என்பது தமிழ்மரபு.)

**சொற்பொருள் :** சிருங்கிபேரம் – கங்கைக்கரையோர நகரம்; திரை – அலை; மருங்கு – பக்கம்; உபகாரத்தன் – பயன்கருதாது உதவுபவன்.

**இலக்கணக்குறிப்பு :** திரைக்கங்கை ( அலைகளை உடைய கங்கை ) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; இருந்தவள்ளல் – பெயரெச்சம்; வந்துஎய்தினான் – வினையெச்சம்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** எய்தினான் – எய்து + இன் + ஆன்; எய்து – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; இருந்த – இரு + த் (ந்) + த் + அ; இரு – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

4. கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
ஆவான் யார்என அன்பின் இறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாய்அடியேன் என்றான்.

பொருள் : இராமன், குகனை அழைக்கும் முன்னர், இளையவனாகிய இலக்குவன் அவனை நெருங்கி, யார் நீ? என வினவினான். குகன், இராமனை அன்போடு வணங்கி, "தேவா, கங்கையாற்றில் நாவாய்களை இயக்குகின்றவனும் நாயினும் அடியவனாகிய வேட்டுவன் யான், தங்களின் திருவடிகளை வணங்க வந்துள்ளேன்" என்று கூறினான்.

சொற்பொருள் : கூவா முன்னர் – அழைக்கும் முன்னர்; குறுகி – நெருங்கி; இறைஞ்சி – வணங்கி; சேவிக்க – வணங்க; நாவாய் – படகு.

இலக்கணக்குறிப்பு : கூவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; குறுகி, சேவிக்க – வினையெச்சங்கள்; தேவா – விளி; கழல் – தானியாகுபெயர்; வந்தனென் – தன்மை ஒருமை வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம் : இறைஞ்சினான் – இறைஞ்சு + இன் + ஆன்; இறைஞ்சு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; வந்தனென் – வா (வ) + த் (ந்) + த் + அன் + என்; வா – பகுதி, வ – எனக் குறுகியது விகாரம்; த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

## குகனைக்குறித்து இராமனிடம் இலக்குவன் கூறியது

5. நிற்றி ஈண்டு என்றுபுக்கு நெடியவன் தொழுது தம்பி
கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை;குகன் ஒருவன் என்றான்.

பொருள் : இலக்குவன் இராமனைத் தொழுது, 'வெற்றி பொருந்திய தலைவனே! தூய உள்ளம் உடையவன்; தாயினும் சிறந்த அன்பினன்; கங்கை யாற்றில் செல்லும் நாவாய்களுக்குத் தலைவன்; குகன் என்னும் பெயரினன்; தன் உறவினருடன் நின்னைக் காண வந்துள்ளான்' என்றான்.

சொற்பொருள் : நெடியவன் – உயர்ந்தவனாகிய இராமன்; குறுகினன் – வந்துள்ளான்; நாவாய் – படகு; இறை – தலைவன்.

பகுபத உறுப்பிலக்கணம் : குறுகினன் – குறுகு + இன் + அன். குறுகு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## இராமன் இலக்குவனிடம் குகனை அழைத்துவரப் பணித்தலும், வந்த குகன் பணிதலும்

6. அண்ணலும் விரும்பி என்பால் அழைத்திநீ அவனை என்றான்
பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவில் புக்கான்
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன் இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்.

பொருள் : இராமன் விருப்பத்துடன், "அன்னவனை என்னிடம் அழைத்து வருவாய்" என்றான். இலக்குவன் குகனை, 'வருக' என்றவுடன், குகன் விரைந்து வந்து இராமனைத் தன் கண்களால் கண்டு களித்தான்; இருள்போன்ற நீண்டமுடியுடைய தலை, மண்ணில் படியக் கீழே விழுந்து வணங்கினான். பின் எழுந்து, வாயைக் கையால் பொத்தி, உடலை வளைத்து அடக்கமாக நின்றான்.

சொற்பொருள் : பண்ணவன் – நற்குணங்கள் பல உடைய இலக்குவன்; பரிவு – இரக்கம்; குஞ்சி – தலைமுடி; மேனி – உடல்.

இலக்கணக்குறிப்பு : அழைத்தி (அழைப்பாய்) – முன்னிலை ஒருமை வினைமுற்று; வருக – வியங்கோள் வினைமுற்று; பணிந்து, வளைத்து, புதைத்து – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : புக்கான் – புகு (புக்கு) + ஆன். புகு – பகுதி, புகு – புக்கு எனப் பகுதி ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## தேனும் மீனும் விருப்பத்துடன் கொண்டு வந்ததாகக் குகன் கூறுதல்

7. இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன், எல்லை நீத்த
அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்.

பொருள் : இராமன், 'இங்கே உட்கார்' எனச் சொன்னதும், இராமனின் பெருமை கருதிய குகன் உட்காரவில்லை, அளவில்லாத பேரன்பினனாகிய குகன், தேவரீர்க்கு நல்லுணவாக அமையும்படி "தேனையும் மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டுவந்துள்ளேன். இதனை ஏற்றுக்கொள்வது குறித்துத் தங்கள் கருத்து யாதோ" என்றான். இராமன் அருகிலிருந்த முனிவர்களை நோக்கி, மெல்லப் புன்முறுவல் பூத்துச் சொல்லத் தொடங்கினான்.

சொற்பொருள் : அருத்தியன் – அன்பு உடையவன்; மாதவர் – முனிவர்; முறுவல் – புன்னகை; விளம்பல் – கூறுதல்.

இலக்கணக்குறிப்பு : இருத்தி – முன்னிலை ஒருமை வினைமுற்று, தேனும் மீனும் – எண்ணும்மை; மாதவர் (மா + தவர்) – உரிச்சொற்றொடர்.

பகுபத உறுப்பிலக்கணம் : கொணர்ந்தேன் – கொணர் + த் (ந்) + த் + ஏன்.

கொணர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்றுவிகுதி.

## இராமன் குகனைப் பாராட்டல்

8. அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான்.

பொருள் : உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பரிவின் காரணமாகக் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைத்தற்கரியன; அமுதத்தைவிடச் சிறந்தன. இவை எத்தகையனவாய் இருப்பினும், அன்பு கலந்ததெனில் தூய்மையானவையே! எம் போன்றோர்க்கும் உரியன; ஆகையால் இனிமையான இவை, நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம்.

சொற்பொருள் : சீர்த்த – சிறந்த; பவித்திரம் – தூய்மையானது; இனிதின் – இனிமையானது; உண்டனெம் – உண்டோம் என்பதற்குச் சமமானது; தழீஇய – கலந்த.

இலக்கணக்குறிப்பு : அமைந்த காதல் – பெயரெச்சம்; சீர்த்த – ஒன்றன்பால் வினைமுற்று; தழீஇய (தழுவிய) – சொல்லிசை அளபெடை.

பகுபத உறுப்பிலக்கணம் : சீர்த்த – சீர் + த் + த் + அ. சீர் – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பலவின்பால் வினைமுற்று விகுதி; உண்டனெம் – உண் + ட் + அன் + எம். உண் – பகுதி, ட் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, எம் – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

## குகன் வேண்டுகோள்

9. கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்து வான்இப்
பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன தைய செய்குவென் அடிமை என்றான்.

பொருள் : கருமுகில் வண்ணனாகிய இராமன் கூறியதைக் கேட்ட குகன், 'இவ்வுலகு அனைத்திற்கும் செல்வம் போன்றவனே! தங்களை இத்தவக் கோலத்தில் பார்த்த என்னிரு கண்களை எடுக்க முடியாத நிலையில் உள்ள கள்வன் நான்; இம் மனத்துயரோடு என்னிருப்பிடம் செல்லத் துணியேன். ஐயனே, தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன்' என்றான்.

சொற்பொருள் : கார்குலாம் – மேகக்கூட்டம்; பார்குலாம் – உலகம் முழுதும்; இன்னல் – துன்பம்; ஈர்கிலா – எடுக்க இயலாத; தீர்கிலேன் – நீங்கமாட்டேன்; அடிமைசெய்குவென் – பணிசெய்வேன்.

இலக்கணக்குறிப்பு : கார்குலாம் ( காரது குலாம் ) – ஆறாம் வேற்றுமைத்தொகை; உணர்த்துவான் – வினையாலணையும் பெயர்; பார்த்தகண்ணை – பெயரெச்சம்; தீர்கிலேன், செய்குவென் – தன்மை ஒருமை வினைமுற்றுகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : உணர்த்துவான் – உணர்த்து + வ் + ஆன். உணர்த்து – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை. ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## குகனைத் தன்னுடன் இருக்க இராமன் அனுமதியளித்தல்

10. கோதைவில் குரிசில் அன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப இருத்திஈண்டு எம்மொ டென்றான்.

பொருள் : கோதண்டம் என்னும் வில்லேந்திய, ஆடவரில் நல்லவனாகிய இராமபிரான், குகன் கூறிய கருத்தைக் கேட்டான். சீதையின் திருமுகத்தைப் பார்த்தும், தம்பி இலக்குவன் திருமுகத்தைப் பார்த்தும், 'இவன் நம்மிடத்து நீங்காத அன்பு உடையவன்' என்றுரைத்தான். அருள் நிறைந்த பார்வையுடைய இராமன் குகனை நோக்கி, 'எல்லாவற்றினும் இனிய நண்பனே! இவ்விடத்தில் எம்மோடு இருப்பாயாக!' என்றான்.

சொற்பொருள்: குரிசில் – தலைவன்; இருத்தி – இருப்பாயாக.

இலக்கணக்குறிப்பு : தீராக் காதலன் – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; மலர்ந்த கண்ணன் – பெயரெச்சம்; இனிய நண்ப – குறிப்புப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : கேட்டான் – கேள் (ட்) + ட் + ஆன். கேள் – பகுதி, ள் – ட் ஆனது விகாரம், ட் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி, நோக்கி – நோக்கு + இ. நோக்கு – பகுதி, இ – வினையெச்சவிகுதி.

## குகன் கொண்டுவந்த படகில் மூவரும் புறப்படல்

11. சிந்தனை உணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லாம் அருளுதிர் விடைஎன்னா
இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா.

பொருள் : இராமனின் மனக்குறிப்பை அறிந்த குகன் மிகவிரைவாகச் சென்றான்; பெரியதோர் படகைக் கொண்டுவந்தான். தாமரைமலர்போன்ற கண்களை உடைய இராமன் அந்தணர்களிடம் விடைபெற்று, பிறைநிலவு போன்ற நெற்றியை உடைய சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் படகில் இனிதாக ஏறினான்.

சொற்பொருள் : நயனம் – கண்கள்; இந்து – நிலவு; நுதல் – நெற்றி.

இலக்கணக்குறிப்பு : நெடுநாவாய் – பண்புத்தொகை; தாமரை நயனம் – உவமைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம்: சென்றனன் – செல்(ன்) + ற் + அன் + அன். செல் – பகுதி, ல் – ன் ஆனது விகாரம், ற் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; தந்தனன் – தா(த) + த் (ந்) + த் + அன் + அன். தா – பகுதி, தா – த எனக் குறுகியது விகாரம், த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.



## குகன் படகைச் செலுத்துதல்

12. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார். *

பொருள் : விரைந்து படகினைச் செலுத்துமாறு குகனுக்கு இராமன் கட்டளையிட்டான். உயிரின் ஏவலுக்கு மெய் செயல்படுவதுபோலக் குகனும் படகினை விரைவாகச் செலுத்தினான். மடங்கிவிழும் அலைகளையுடைய கங்கையாற்றில் இளம் அன்னம் விரைந்து செல்வதனைப் போலப் படகு சென்றது. அவர்களின் பிரிவால் அனல்பட்ட மெழுகுபோல் துன்பமுற்று அந்தணர்கள் மனமுருகி நின்றார்கள்.

சொற்பொருள் : கடிது – விரைவாக; முடுகினன் – செலுத்தினன்; முரிதிரை – மடங்கிவிழும் அலை; இடர் – துன்பம்.


இலக்கணக்குறிப்பு : நனிகடிது – உரிச்சொற்றொடர்; நெடுநாவாய், நெடுநீர் – பண்புத்தொகைகள்

பகுபத உறுப்பிலக்கணம் : முடுகினன் – முடுகு + இன் + அன். முடுகு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; நின்றார் – நில் (ன்) + ற் + ஆர். நில் – பகுதி; ல் – ன் ஆனது விகாரம்; ற் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : நெடுநாவாய் – நெடுமை + நாவாய்; நெடுநீர் – நெடுமை + நீர்.

## குகனும் உடன்வருவதாக நவின்றபோது இராமன் கூற்று.

13. அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ, இளவல்உன் இளையான்,இந்
நன்னுத லவள்நின்கேள், நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யது,நான்உன் தொழில்உரி மையின்உள்ளேன்.



**பொருள் :** குகன் கூறியதைக் கேட்ட குற்றமற்றவனாகிய இராமன், என் உயிர்போன்றவன் நீ; இலக்குவன் உன்தம்பி; சீதை உன் கொழுந்தி; நீர் சூழ்ந்த இந்நிலவுலகம் முழுதும் உன்னுடையது. நான் உனது ஆளுகைக்குரியவன்.

**சொற்பொருள் :** அமலன் – குற்றமற்றவன்; நுதல் – நெற்றி; இளவல் – தம்பி.

**இலக்கணக்குறிப்பு :** என்னுயிர் – ஆறாம் வேற்றுமைத்தொகை; நன்னுதல் – பண்புத்தொகை; நின்கேள் – நான்காம் வேற்றுமைத்தொகை.

**பகுபத உறுப்பிலக்கணம் :** நேர்வான் – நேர் + வ் + ஆன். நேர் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

14. துன்புள தெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுளதென உன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம். *

**பொருள் :** துன்பம் உண்டாயின் அதனையடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை. இப்பிரிவு இடைக்காலத்ததே; அதனை நினைத்து வருந்த வேண்டா. முன்னர், நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராய் இருந்தோம்; விரிந்த அன்பினால் இனி உன்னொடு ஐவரானோம்.

**சொற்பொருள் :** துன்பு – துன்பம்; உன்னேல் – நினைக்காதே.



ஆசிரியர் குறிப்பு : கம்பர் தேரழுந்தூரில் பிறந்தார். இவ்வூர், நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது. கம்பரின் தந்தையார் ஆதித்தன். கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர். இவரைத் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் ஆதரித்தார்.

கம்பரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

இவர் செய்ந்நன்றி மறவா இயல்பினர். தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் எனப் பாடிச் சிறப்பித்துள்ளார்.

கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகியன கம்பர் இயற்றிய நூல்கள். சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோர் இவர் காலத்துப் புலவராவர்.

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன், கல்வியிற் பெரியர் கம்பர் என்னும் தொடர்களால் கம்பரின் பெருமையை அறியலாம். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்' என்று பாரதியார் கம்பரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

நூற்குறிப்பு : இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார். கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயணம் எனப்பட்டது. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.

கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது. காண்டம் என்பது பெரும்பிரிவையும் படலம் என்பது அதன் உட்பிரிவையும் குறிக்கும். தமிழிலக்கியத்தில் காப்பிய வளர்ச்சி கம்பர் படைப்பினால் உச்சநிலையை அடைந்தது. இந்நூலின் சிறப்புக் கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் தமிழுக்குக் 'கதி' என்பர் பெரியோர்.

கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது; பொருள், அணி, நடை ஆகியவற்றால் சிறந்தது; கற்போர்க்கு இனிமை தரும் கவிச்சுவை நிறைந்தது; சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப் பண்பாடும் மிளிர்ந்துள்ளது.

கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாம் காண்டமாகும். இதில் பதின்மூன்று படலங்கள் உள்ளன. நம் பாடப்பகுதியான குகப் படலம் ஏழாம் படலமாகும். இப்பகுதியைக் கங்கைப் படலம் எனவும் கூறுவர்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.**

அ) இரு – த (ன்/ந்) வ – ளலைக் (ல்/ள்) கா – வந் (ன/ண) தெய்தினா–. (ண்/ன்)

ஆ) இடரு – (ர/ற) ம – யோரும் (றை/ரை) எ– யுறு (ரி/றி) மெ – கானார். (ழு/ளு)

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) கம்பராமாயணம் ______________ காண்டங்களைக் கொண்ட நூல்.

1. ஐந்து 2. ஆறு 3. மூன்று

ஆ) சரசுவதி அந்தாதி ______________ இயற்றிய நூல்களுள் ஒன்று.

1. கம்பர் 2. ஒட்டக்கூத்தர் 3. புகழேந்தி

இ) கம்பரைப் புரந்தவர் ______________ .

1. ஔவையார் 2. புகழேந்தி 3. சடையப்ப வள்ளல்

**3. உவமையை விளக்கிப் பொருளோடு பொருத்தி எழுதுக.**

“மட அன்னக் கதியது செல”

**4. சீர்மோனையை எடுத்தெழுதுக.**

“இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா”

**5. அகரமுதலி பார்த்துப் பொருள் எழுதுக.**

இறை, நாவாய்.

**6. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | இடர் | – | நிலவு |
| 2. | நாவாய் | – | துன்பம் |
| 3. | இறை | – | படகு |
| 4. | இந்து | – | தலைவன் |

### ஆ) குறுவினாக்கள்

1. கம்பர் – சிறு குறிப்பு எழுதுக.
2. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்குக் கொண்டு சென்றான் ?
3. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ?

4. குகனின் வேண்டுகோள் யாது?

5. “அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்” – யார், யாரிடம் கூறியது?

இ) சிறுவினாக்கள்

1. கம்பராமாயணம் – சிறு குறிப்பு எழுதுக.

2. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?

3. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?

ஈ) நெடுவினாக்கள்

1. குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.

2. கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.



## அறிந்துகொள்க

தொல்காப்பிய நெறி நின்றவர் கம்பர்

வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே. – தொல். எச்சவியல், 5

வடசொல்லைப் பயன்படுத்தும்போது வடஎழுத்தை நீக்கித் தமிழ்ப்படுத்தவேண்டும் என்னும் தொல்காப்பிய இலக்கணப்படி ராமன், ஹனுமன், லக்ஷ்மணன், விபீஷணன் என்னும் பெயர்களை இராமன், அனுமன், இலக்குவன், வீடணன் என நெறிப்படுத்திய தமிழ் வேந்தர் கம்பரே! வடமொழி எழுத்தையும் பிறமொழிக் கலப்பையும் தடுத்தவர் இவரே.

உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும்; மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம்.

– கால்டுவெல்

# அண்ணல் அம்பேத்கர்

நிகரென்று கொட்டு முரசே – இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே – பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்



விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் முரசு கொட்டிய பாரதியின் வரிகள் இவை. அயலவர் தளையிலிருந்து விடுபடுவது மட்டுமே விடுதலையன்று; சமூகக் கேடுகளிலிருந்தும் விடுபடுவதே உண்மையான விடுதலை. நாட்டின் வடக்கும் தெற்கும் அத்தகு சிந்தனையாளர்களைக் கொடையாகத் தந்திருக்கின்றன.

மராட்டிய கொங்கண் மாவட்டத்தில் தபோலி என்னும் சிற்றூர் உள்ளது. பனிவிலகாத காலைப் பொழுதில் வயல்வெளிகளுக்கிடையே ஒற்றையடிப் பாதையில் சிறுவன் தாவிக் குதித்து ஓடினான். பின்னாலேயே அவன் தந்தையும் ஓடினார். அன்றுதான் அந்தச் சிறுவனுக்குப் பள்ளியின் முதல்நாள். அதனாலேயே தந்தை மகன் இருவருள்ளும் அளவு கடந்த மகிழ்ச்சி வெள்ளம்.

பள்ளியில் சேர்ந்த அடுத்த நொடியிலேயே அச்சிறுவனின் மகிழ்ச்சி வகுப்பறையைவிட்டு வெளியேறியது. ஏனெனில், அவனது வருகையைப் பள்ளியில் எவரும் விரும்பவில்லை; தன்னொத்த மாணவர்களுடன் சரிசமமாக உட்காரவும் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கு, அவனுடைய சாதியைக் காரணமாக்கினர் கல்நெஞ்சினர். அதனையும் மீறி, அந்தச் சிறுவன் தொடர்ந்து படிக்க விரும்பினான். பள்ளிக்கு வரும்போது புத்தகப்பையுடன் உட்காருவதற்கு ஒரு கோணிப்பையையும் கொண்டு வரும்படி ஆணையிட்டது பள்ளி நிருவாகம்.

அதே சிறுவன் ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் 1947இல் மிடுக்கான உடை அணிந்த மாமனிதராக வந்து நின்றார். இந்தியாவே அவரின் வருகைக்காக நாடாளுமன்றத்தில் கூடிநின்று எதிர்பார்த்தது. அவர்தாம் அண்ணல் அம்பேத்கர். அவர் கைகளில், இந்தியாவின் எதிர்காலத்தையே உருவாக்கும் இந்திய அரசியல் சாசனச் சட்டவரைவு இருந்தது.

அவர் சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி; சமத்துவக் காவலர்; உலகச் சாதனையாளர் வரிசையில் முன்னிற்பவர்; அரசியல் சட்டமேதை; தேசியத் தலைவராகவும் திகழ்ந்தவர்; பல்வேறு மத இன மொழி சமூகப் பழக்கவழக்கங்கள் கொண்ட இந்நாட்டை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒருங்கிணைத்தவர்.

### பிறப்பு

மராட்டிய மாநிலத்தில் கொங்கண் மாவட்டத்தில் உள்ள அம்பவாடே என்னும் சிற்றூரில் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் பதினான்காம் நாள் அம்பேத்கர் பிறந்தார். அவர்தம் தந்தையார் இராம்ஜி சக்பால், தாயார் பீமாபாய். செல்வம் நிறைந்த குடும்பத்தில் பதினான்காவது பிள்ளையாகப் பிறந்தார் அவர்.

அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி. மகாபாரதப் பீமனைப்போலவே தன்மகனும் எவருமே அசைக்க முடியாத வீரனாக வருங்காலத்தில் வரவேண்டும் என்ற எண்ணத்தில் பீம் எனப் பெயர் சூட்டினார் தந்தை இராம்ஜி சக்பால்.

### கல்விக் கடல்

ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமன்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.

சாதி மதங்களைப் பாரோம் – உயர்
சென்மம் இத்தேசத்தில் எய்தினர் ஆயின்
வேதியர் ஆயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே

என்னும் உயரிய நோக்குடன் செயல்பட்டவர் பீமாராவின் ஆசிரியர் அம்பேத்கர். காலத்தினால் செய்த இவ்வுதவியை ஞாலத்தினும் பெரிதெனக் கருதினார் பீமாராவ். அவ்வாசிரியர் பெயரையே தம்பெயராகக் கொண்டார்.

அம்பேத்கர் 1908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் தம்முடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்; பின்னர், பரோடா மன்னர் பொருளுதவியுடன் 1912இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்; அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1915இல் முதுகலைப் பட்டமும் 1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்; பின்னர், மும்பையில் சிறிதுகாலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்; மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

அம்பேத்கர் இந்தியா திரும்பியபின் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்; கட்டணமின்றி ஏழைகளுக்கு வழக்காடி நீதியைப் பெற்றுத் தந்தார்.

அவர் அரசியல், சட்டம், சமூகம், பொருளாதாரம், தத்துவம், வரலாறு, வாணிகம், கல்வி, சமயம் என அனைத்துத் துறைகளிலும் நிகரற்ற அறிஞராகத் திகழ்ந்தார்; ஒரு நாளில் பதினெட்டு மணி நேரத்தைக் கல்வி கற்பதற்காகவே செலவழித்தார்;

நூலகத்தில் காலையில் முதல் ஆளாக நுழைவார்; மாலையில் இறுதி ஆளாக வெளியேறுவார். இத்துணைச் சிறப்பிற்கும் அவர் கற்ற கல்வியே காரணமாயிற்று.

### முதல் உரிமைப்போர்

மூடநம்பிக்கைகளும் தீயபழக்கங்களும் சமுதாயத்தை அரித்துக் கொண்டிருந்தபோது, சமுதாயத்தைச் சமப்படுத்துவதற்குச் சிந்தனையாளர் பலர் பெரிதும் போராட வேண்டியிருந்தது. மனித உரிமைக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். அவ்வகையில் தந்தை பெரியார் 1924ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கத்தில் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலயநுழைவு முயற்சியும், 1927ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இருபதாம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டமும் மனிதஉரிமைக்காக முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள் எனலாம்.

### விடுதலை உணர்வும் வட்டமேசை மாநாடும்

'இங்கிலாந்து சொல்வதற்கெல்லாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு; இந்தநிலை எப்போதோ மாறிவிட்டது; இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்ற வேண்டும்' என ஆங்கிலேயரிடம் அச்சமின்றி ஆணித்தரமாகக் கூறினார்; முழுமையான விடுதலையைக் கண்டிப்பாக வழங்கவேண்டும்; அதற்கு முன்னர்த் தன்னாட்சித் தகுதியை இந்தியாவிற்கு வழங்க வேண்டும் எனவும் அம்பேத்கர் முன்மொழிந்தார்.

வட்டமேசை மாநாடு 1930ஆம் ஆண்டு நடைபெற்றது. அம்மாநாட்டில் அண்ணல் அம்பேத்கர் கலந்துகொண்டார். அம்மாநாட்டில் "அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்" என்று, தனது கருத்தைத் தொடங்கினார். மாற்றார் ஆதிக்கத்தை நீக்கி, மக்களால் ஆளப்படும் மக்களாட்சியையே நாங்கள் விரும்புகிறோம்; வெறும் எஜமான மாற்றத்தை நாங்கள் விரும்பவில்லை; எங்கள் கைகளில் அரசியல் அதிகாரம் வந்தாலொழிய, எங்கள் குறைகள் நீங்கா என மொழிந்தார். ஒடுக்கப்பட்டோரின் இவ்வுரிமைக்குரல் வட்டமேசை மாநாட்டின் வழியே உலகஅரங்கில் எதிரொலித்தது.

### சட்ட மாமேதை

விடுதலைக்குப் பிறகு இந்திய அமைச்சரவையில் அண்ணல் அம்பேத்கரையும் இடம்பெறச் செய்யவேண்டுமென்று நேரு பெரிதும் விரும்பினார்; அம்பேத்கரும் அதற்கு உடன்பட்டார்; சட்டஅமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுக்க எழுவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. பலரும் செயல்படாமல் விலகினர். இறுதியில் அம்பேத்கர் ஒருவரே அந்த ஒப்பற்ற பணியைச் செய்து முடித்தார். 1950ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்தாறாம் நாள், இந்தியா முழுமையான குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.

### கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்

அறியாமைதான் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை அம்பேத்கர் நன்குணர்ந்தார். எனவே, "ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம்.

உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்" என்றார். மேலும், 'கற்பித்தல், அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல்வேண்டும்; விருப்புவெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழ்தல்வேண்டும். மாணவனுக்குள் தகவல்களைத் திணிப்பதாகக் கல்வி இருத்தல் கூடாது; அஃது, அவனது ஊக்கத்தைத் தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக் கொணர்வதாக இருத்தல்வேண்டும்' என்றும் கற்றல், கற்பித்தலின் உயர்ந்த குறிக்கோள்பற்றி அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுவார்.

அவர், 1946ஆம் ஆண்டு, மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார். மும்பையில், அவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவுவளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

### பொருளாதார வல்லுநர்

அம்பேத்கர் மேலைநாடுகளில் கல்வி பயின்றபோது புகழ்வாய்ந்த பேராசிரியர் பலருடன் நட்புக் கொண்டிருந்தார். இவர் எழுதிய 'இந்தியாவின் தேசியப் பங்குவீதம்' என்னும் நூலைப் பொருளாதாரத் துறையின் சிறந்த நூலாகக் கருதிப் பொருளியல் வல்லுநர்களும் பேராசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள். பொருளியலில் பெரும்புலமை பெற்று விளங்கியதால், பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களை அணுகியும் நுணுகியும் ஆராய்ந்து பார்க்க அவரால் இயன்றது; தொழில்துறையில் பொருளாதார வளர்ச்சிபெறப் புதுப்புதுக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

### இந்திய வரலாற்றின் புதிய பக்கங்கள்

புதியன சிந்திப்பதும் படைப்பதுமே புத்துலகம் சமைக்கும் சிற்பிகளின் நோக்கம். இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் அம்பேத்கர். சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. குறிப்பிட்ட சில சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூகவாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை என்று அவர் கருதினார்.

சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்றார் அம்பேத்கர். 'இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்குச் சாதி என்பது, நன்மை தராது; இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கின்றது; அது மக்களிடையே ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்துவிட்டது. இதனை அவர்கள் உணரும்படி செய்துவிட்டால் போதும்; அதுவே எனக்கு நிறைவு தரும்' என்றார் அம்பேத்கர்.

### அண்ணலாரின் இலட்சியச் சமூகம்

அண்ணல் அம்பேத்கர் சிறந்த இலட்சியவாதி. அவர், "ஓர் இலட்சிய சமூகம் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றார்.

"சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம்; சுதந்தரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை; உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் உரிமை அது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும்வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்" என்று, சனநாயகத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தார் அம்பேத்கர்.

சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம்; எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ, அங்கே மனிதப் பண்பு மறைந்துவிடுவதை அவர் அனைவருக்கும் உணர்த்தினார்.

## பெரியோர் போற்றிய பெருந்தகை

அம்பேத்கர் ஓர் அறிவுச் சுரங்கம். இவர், அறியாமைக்கு எதிராக ஆற்றிய மகத்தான பணி சான்றோர் நெஞ்சில் நிலைக்கச் செய்தது. “அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர்; பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி, அப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் நாம் காணமுடியாது” என்று பெரியார் புகழாரம் சூட்டினார்.

“பகுத்தறிவுத் துறையில் அவருக்கு இணை அவரே. ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்” என்று அம்பேத்கரை நேரு புகழ்ந்துரைத்தார். “அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர்; மிகவும் ஆர்வத்துடனும் விரைந்தும் தன்னந் தனியனாகச் செயல்பட்டவர். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர்” என்று இராசேந்திர பிரசாத் பாராட்டியுள்ளார். நாட்டிற்காக அயராது உழைத்த அண்ணல் அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் ஆறாம்நாள் புகழுடம்பு எய்தினார்.

இந்திய அரசு, பாரத ரத்னா (இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு 1990ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

அண்ணல் அம்பேத்கர், இந்திய நாட்டின் ஒளிமிகுந்த எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்ட இலட்சிய மனிதர். தாம் கண்ட இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர். அவர், உயரிய ஆளுமைத் திறனைக் கொண்டவர்; கூர்த்த அறிவுவன்மை உடையவர்; மனித உரிமைக்காக உழைத்தவர். சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து அவர். கல்வி அறிவின்றி நாடு முன்னேற முடியாது என்று உரைத்தவர். அவர், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.



இருபெருந் தலைவர்கள் இந்தியாவில் இருந்தார்கள்.

ஒருவர் பெரியார்; மற்றொருவர் அம்பேத்கர்.

வடக்கே இருந்து அம்பேத்கரும் தெற்கேயிருந்து பெரியாரும் இடைவிடாது உழைத்ததனால் சாதி என்னும் பாறை உடைந்து சுக்கு நூறானது.



## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) மும்பையில் அம்பேத்கர் சிறிதுகாலம் ________________ பேராசிரியராகப் பணியாற்றினார்.

1. வாணிகவியல் 2. அறிவியல் 3. பொருளியல்

ஆ) அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ________________

1. பத்மஸ்ரீ 2. பாரத ரத்னா 3. பத்மவிபூஷண்

**2. ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.

ஆ) வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.

**3. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

அ) ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்.

ஆ) ஏழைகளுக்கு பொருள்பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.

### ஆ) குறுவினாக்கள்

1. அம்பேத்கர் எங்கு எப்போது பிறந்தார்?
2. அம்பேத்கரின் பெற்றோர் யாவர்?
3. அம்பேத்கருக்குப் பீம் எனப் பெயர் வைக்கக் காரணம் என்ன?
4. பீமாராவ், தம் பெயரை அம்பேத்கர் என மாற்றிக்கொள்ளக் காரணம் யாது?
5. அம்பேத்கர் குறித்து நேரு புகழ்ந்து கூறியது யாது?

### இ) சிறுவினாக்கள்

1. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?
2. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

### ஈ) நெடுவினாக்கள்

1. அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.
2. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?


# அன்றாட வாழ்வில் சட்டம்

திருவெண்ணெய் நல்லூரில் திரளான மக்கள் கூட்டம்; பெரிய வீட்டுத் திருமணம் அது.

அழகிய மணப்பந்தல். மணமேடையில் மணமக்கள்.

மங்கல இசை ஒலித்தது. மணமகன் மணமகள் கழுத்தில் மங்கல நாண் அணிவிக்க முனைந்தார். அப்போது 'நிறுத்து' என்றது. ஒரு குரல் கம்பீரமாக....

குரல் வந்த திசையில் திரும்பினர் மக்கள்; அங்கு முதிய அந்தணர் ஒருவர்.



ஏன் ? ஏன் ? எங்கும் எழுந்தது கூச்சல்.

இவன் என் அடிமை ! அடிமையா ? மனிதனுக்கு மனிதன் அடிமையா ? இஃது அடுக்காது. ஆதாரம் கேட்டான் மணமகன். 'இதோ உன் பாட்டன் எழுதித் தந்த ஓலை. வா நீதிமன்றம்' என்றார். எழுந்தனர் யாவரும். அவர்கள் நீதிபதிகள் முன் கூடினார்கள். நீதிபதிகள் சான்றுகளைக் கேட்டார்கள்; ஆட்சியில், ஆவணத்தில், அயலவர் சாட்சியில் ஒன்று தருக என்றார்கள்.

இதோ, இவன் பாட்டன் எழுதித் தந்த பழவோலை என்றார் அம்முதியவர். நீதிபதிகள் அதனை மூலவோலை கொண்டுசோதித்தார்கள். 'அடிமைதான்' எனத் தீர்ப்பளித்தார்கள்.

பழந்தமிழ் நாட்டில் வழக்குகள் கையாளப்பட்ட முறையை இந்நிகழ்வு தெரிவிக்கிறது. இன்றைய சாட்சிச் சட்டம் அன்றே எப்படிக் கையாளப்பட்டது என்பதற்கு இந்நிகழ்வு சான்றாக அமைகிறது.

## சட்டவரையறை

மனிதன் சேர்ந்து வாழத் தலைப்பட்டபொழுதுதான் மனித சமுதாயத்திற்கிடையே அறவியல் சிந்தனைகள் தோன்றின. பழக்க வழக்கங்களினால் பல சட்டவியல் கூறுகளும் தோற்றம் பெற்றன. சட்டம் என்பதற்குச் செம்மை என்பது பொருள். செம்மை என்னும் சொல் நடுவுநிலை என்னும் பொருளிலும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது.

## வள்ளுவர்கூறும் தண்டனைச்சட்டம்

அரசன், கொலைத்தொழில் புரியும் கொடியவர்களுக்கு மரணதண்டனை அளித்தல் குற்றமன்று. அது, பயிருடன் வளர்ந்த களைகளை நீக்குதல் போன்றதாகும் என்கிறார் வள்ளுவர்.

கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். – குறள், 550

தண்டனை வழங்குவது பற்றிக் கூறிய வள்ளுவரே அச்சட்டங்கள் மனிதநேய அடிப்படையில் நெகிழ்வுத்தன்மை உடையனவாகவும் அமைதல்வேண்டும் என்கிறார்.

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். – குறள், 562

### அரசியல் அமைப்புச் சட்டம்

சட்டங்கள் பலவகைப்படும். உலக நாடுகளிடையேயுள்ள தொடர்புகளை ஒழுங்கு படுத்தும் சட்டத்தை அனைத்து நாட்டுச் சட்டம் என்கிறோம். நம் நாட்டின் முதன்மையான வாழ்வியல் அடிப்படைச் சட்டத்தை அரசியல் அமைப்புச் சட்டம் என்கின்றோம். நாட்டின் நாடாளுமன்றமும் மாநிலச் சட்டமன்றங்களும் அரசுத் துறைகளின் அலுவலகங்களும் இதன் அடிப்படையில்தான் இயங்குகின்றன. நாட்டில் உள்ள அனைத்துவகைச் சட்டங்களுக்கும் அடிப்படையானது, அரசியல் அமைப்புச் சட்டமே. மக்களின் வாழ்வியல் அடிப்படை உரிமைகளும் இச்சட்டத்தின் வாயிலாகத்தான் காக்கப்படுகின்றன.

### சமயச் சார்புச் சட்டங்கள்

இந்தியா சமயச் சார்பற்ற நாடு; எனினும், மக்கள் தாம் பின்பற்றும் சமயங்களுக்கு ஏற்ப வாழ உரிமையுடையவர் ஆவர். இந்தியாவில் அவரவர் பின்பற்றிய சமயத்திற்கேற்ற சட்டங்களும் உள்ளன. இந்துச் சமயத்தைச் சார்ந்தோருக்கு இந்துச் சட்டமும் இசுலாமியர்களுக்கான இசுலாமியர் சட்டமும், கிறித்தவர்களுக்கான சட்டமும் உள்ளன. பௌத்தர்களுக்கும் சமணர்களுக்கும் தனியான மதச் சட்டங்களென எவையுமில்லை. இந்துச்சமயச் சட்டங்களே அவர்களுக்கும் பொருந்தும்.

### மாநிலச் சட்டங்கள்

பொதுச் சட்டங்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எனத் தனித்தனிச் சட்டங்களும் உள்ளன. அவை அந்தந்த மாநிலங்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், சூழ்நிலைகளுக்கேற்ப அமைந்துள்ளன. மாநிலச் சட்டமன்றங்களே அச்சட்டங்களை இயற்றுகின்றன. அவை, அந்தந்த மாநிலத்திற்கு மட்டுமே பொருந்தும். தமிழ்நாட்டில் வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், உள்ளாட்சித் துறைச் சட்டம் முதலியன மாநிலத் தனிச் சட்டங்களுக்குச் சான்றாகும்.

### குற்றம் என்றால் என்ன ?

சட்டப்படி தண்டிக்கத்தக்க செயலையே குற்றமென்கிறோம். அது நடைமுறை ஒழுங்கிற்கு மாறானதும் எதிரானதும் ஆகும். குற்றங்கள் இரு வகைப்படும். ஒன்று, சட்டம் செய்யக்கூடாது என்று வலியுறுத்திச் சொன்னதைச் செய்தல்; மற்றொன்று, சட்டம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதைச் செய்யாமல் இருத்தல். சான்றாக, மாவட்ட நகராட்சிச் சட்டப்படி ஊர்ப் பொதுவிடத்தில் பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிக்கும்வகையில் எவரும் குப்பைகளைக் கொட்டக்கூடாது. இதனை மீறி ஒருவர் அச் செயலைச் செய்தால்,

அது சட்டப்படி குற்றமாகிறது. இது செய்யக்கூடாது என்பதை மீறிச் செய்வதால் ஏற்படும் குற்றமாகும். ஒருவர் நகராட்சி எல்லைக்குள் வீடுகட்ட விரும்பினால் முன்கூட்டியே அனுமதி பெறவேண்டும் என்பதே சட்டம். அவ்வாறு அனுமதி பெறத் தவறினால், அது குற்றமாகும். முறையாக அனுமதி பெற்று, வீடுகட்டி, அதனை நகராட்சிக்குத் தெரிவித்து, அதற்குரிய வரியையும் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு தெரிவிக்காமல் விடுதலும் வரி செலுத்தாமல் இருப்பதும் குற்றமாகும். இது, செய்யவேண்டும் என்பதைச் செய்யாமல் விடுவதால் வரும் குற்றமாகும்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். – குறள், 466

என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

## போக்குவரத்துச் சட்டங்கள்

சில இடங்களுக்குப் போகவும் வரவும் எனத் தனித்தனிப் பாதைகள் உள்ளன. அவற்றை உரிய அறிவிப்புப் பலகைகள் வாயிலாக அறிந்து முறையாக நடந்து கொள்ளுதல் வேண்டும். சிவப்பு விளக்கு எரிந்தால், உடனே வண்டியை நிறுத்துதல் வேண்டும்; பச்சைவிளக்கு எரியும்போது புறப்படுதல் வேண்டும். சாலைகளில் மஞ்சள் கோடுகள் போட்டுப் பேருந்துகள், மகிழுந்துகள், இரண்டு மற்றும் மூன்று சக்கர ஊர்திகள் செல்வதற்கான வழிகள் பிரித்துக் காட்டப்பட்டு இருப்பதனைக் காணலாம். குறித்த பாதைகளில் குறிப்பிட்ட வேகத்தில் சென்றால், துன்பம் எதுவும் நேரிடாது. இத்தகைய சாலைவிதிகளை மீறிச் செயல்படும்போது, அது குற்றமாகக் கருதப்படுகிறது.

## மாணாக்கர் வன்கொடுமைத் தடைச்சட்டம்

கல்வி நிறுவனங்களில் மாணாக்கர் சேர்ந்த புதிதில் மூத்த மாணாக்கருடன் கலந்து பழகத் தயங்குவர். இத்தயக்கத்தைப் போக்க மூத்த மாணாக்கர் வலிய வந்து புதியவர்களுடன் பேசிச் சிரித்து விளையாடுவது உண்டு. இப்பழக்கம் மேனாட்டுக் கல்வி நிறுவனங்களில் தொடங்கி, நம் கல்வி நிறுவனங்களுக்கும் வந்துள்ளது. அறிமுகத்துக்கு உதவ வேண்டிய பண்பு, அளவுக்கு மீறிப் போய்விட்டது. இதனால், சில இடங்களில் வன்கொடுமை நிகழ்கிறது. அதாவது அடித்தல், உதைத்தல் முதலியன நிகழ்கின்றன. படிப்புக்கு மூத்த மாணாக்கரின் வழிகாட்டுதல் தேவைதான். எனினும், அதனைத் தவறாகப் பயன்படுத்தாமல் மாணாக்கர் என்னும் பெயருக்கேற்ப மாண்புடையோராகத் திகழ்வது நன்று.

## குழந்தைத்தொழிலாளர் தடைச்சட்டம்

பெற்றோர் தம் வறுமையைப் போக்க, குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். குறைந்த ஊதியத்தில் அதிக உழைப்பைப் பெற விரும்பும் முதலாளிகள் இவர்களின் உழைப்பைச் சுரண்டுகிறார்கள். அந்நிலையை மாற்றவே குழந்தைத்தொழிலாளர் தடைச்சட்டங்கள் இருக்கின்றன. பொதுமக்கள், அரசு, தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இந்நிலையை அறவே போக்கிவிடலாம்.

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள்

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மக்களுக்குப் பல்வேறு வகைகளில் சேவைகளை வழங்குகின்றன. சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருள்களில் எத்தகைய குறைபாடுகள் இருந்தாலும், மாநில அல்லது மாவட்டக் குறைதீர் மன்றங்களையோ நுகர்வோர் பாதுகாப்புக் குழுவையோ அணுகித் தீர்வு காணலாம். இதற்கெனத் தனி நீதிமன்றங்கள் உள்ளன. நுகர்வோர் உரிமைகளைக் காக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் பல உள்ளன. பொது இடங்களில் புகைபிடித்தல், புகையிலை போட்டுத் துப்புதல் முதலிய பல தீமைகளைத் தருகின்ற நிகழ்வுகளைத் தடுக்க, இப்போது சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

## கையூட்டு

மக்களுக்குத் தொண்டாற்றும் பணியில் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ஆட்சியாளருக்குத் துணைபுரிவது அவர்களின் கடமையாகும். அவர்கள், தம் கடமையை ஆற்ற அரசிடமிருந்து ஊதியம் பெறுகிறார்கள். ஆயினும், மனச்சாட்சியைத் துறந்து அலுவலர் சிலர் செயல்படுவதும், கையூட்டுப் பெறுவதும் ஆங்காங்கே நிகழ்கின்றன. ஒருவருக்குக் கையூட்டுக் கொடுப்பதும் குற்றம்; அதனைப் பெறுவதும் குற்றம் என்பதே நமது சட்டம்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசியல் சாசனத்தின் 19 (1)ஆவது பிரிவின்படி குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முழுமையான பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு; மேலும், அதற்குரிய தகவல்களைப் பெறவும் முழு உரிமை உண்டு. காரணம், நமது நாடு சனநாயக நடைமுறையில் இயங்கும் அமைப்பாகும். சனநாயகத்தில் மக்கள்தான் எசமானர்கள். தங்கள்மீது எத்தகைய நிருவாகம் நடத்தப்படுகிறது என்பதனை அறியவும் தாங்கள் செலுத்திய வரிப்பணம் எந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது என்பதனைத் தெரிந்துகொள்ளவும் முழு உரிமை உள்ளது. இதனைத்தான் அரசியல் சாசனம் வலியுறுத்துகிறது. இதை முன்னிறுத்தித்தான் தகவல் அறியும் உரிமைச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியக் குடிமக்கள் தனியாகவோ ஓர் அமைப்பின் மூலமாகவோ தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6இன்படி தகவல் பெறலாம். தகவல் பெறுவதற்கெனத் தனி விண்ணப்பம் இல்லை. உரிய அலுவலகத்திலுள்ள பொதுத்தகவல் அலுவலரிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒரே விண்ணப்பத்தில் எத்தனை தகவல்களை வேண்டுமானாலும் பெறலாம். மாநில, மைய அரசு சார்ந்த அதிகார அமைப்பிடமிருந்து தகவல் பெறுவதற்குப் பத்து உரூபாயை விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பத்துடன் கட்டணத்தொகை பத்து உரூபாயைப் பொதுத்தகவல் அலுவலரிடம் நேரில் செலுத்தலாம். அல்லது, உரூபா பத்துக்கான நீதிமன்றக் கட்டண வில்லையை விண்ணப்பத்தில் ஒட்டலாம்.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவராக இருந்தால், தகவல் பெறுவதற்கு எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

## பொதுமக்கள் ஒத்துழைப்பு

குற்றம் நடந்தால் உடனே காவலருக்குத் தெரிவிப்பதும், குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவி செய்வதும் பொதுமக்களின் கடமையாகும். அமைதியைப் பாதுகாப்பதிலும் குற்ற ஆய்வு செய்வதிலும் காவலருக்கு நம்மாலான உதவிகளைச் செய்தல் வேண்டும். சமுதாய வளர்ச்சிக்கு அயராத உழைப்பு மட்டும் காரணமன்று; மக்கள் கடைப்பிடிக்கும் சட்ட ஒழுங்கும் காரணமாகும். 'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்' என்று திருக்குறள் கூறுவதனை எண்ணிப் பார்க்கவேண்டும். சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்க்கை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும்.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. சட்ட வகைகள் குறித்துக் கட்டுரை எழுதுக.
2. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.
3. குறிப்பு எழுதுக.

அ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்

ஆ) தகவல் அறியும் உரிமைச் சட்டம்

### கலைச்சொற்களை அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| International Law | – | அனைத்து நாட்டுச் சட்டம் |
| Constitutional Law | – | அரசியல் அமைப்புச் சட்டம் |
| Supreme court | – | உச்சநீதி மன்றம் |
| High Courts | – | உயர்நீதி மன்றங்கள் |
| Writs | – | சட்ட ஆவணங்கள் |
| Substantive Laws | – | உரிமைச் சட்டங்கள் |
| Procedureal Laws | – | செயற்பாட்டு முறைச்சட்டங்கள் |
| Indian penal code | – | இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பு |
| Criminal Procedure code | – | குற்றவியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு |
| Civil Procedure code | – | உரிமையியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு |
| Indian Evidence Act | – | இந்தியச் சான்றுச் சட்டம் |
| Transfer of Property Act | – | சொத்துமாற்றுச் சட்டம் |
| Indian Succesion Act | – | இந்திய வாரிசுரிமைச் சட்டம் |
| Court fee stamp | – | நீதிமன்றக் கட்டண வில்லை |

# பொது



எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள் சொல்லப்படுவதால், இது பொது என அழைக்கப்படுகிறது.

## 1. வெளிப்படை, குறிப்பு

1. உலகிலேயே பண்பாட்டில் தமிழ்நாடுதான் தலைசிறந்து விளங்குகின்றது.
2. பூப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது.

இவ்விரு தொடர்களையும் படித்துப் பாருங்கள். இரு தொடர்களிலும் தமிழ்நாடு என்னும் சொல் வந்துள்ளதைக் கவனியுங்கள்.

முதல் தொடரில் வந்துள்ள தமிழ்நாடு என்னும் சொல் வெளிப்படையாக இடத்தைக் குறித்து வந்துள்ளது.

இரண்டாம் தொடரில், தமிழ்நாடு என்பது ஆகுபெயராய் நின்று குறிப்பால் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களைக் குறிக்கிறது.

இவ்வாறு, வெளிப்படையாகத் தன்பொருளை உணர்த்தும் சொல் வெளிப்படை எனவும், ஒரு தொடர் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பொருளைத் தருவது குறிப்பு எனவும் கூறுவர்.

## 2. குறிப்புச்சொற்கள்

ஒன்றொழி பொதுச்சொல், விகாரச்சொல், தகுதிவழக்குச்சொல், ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்புச் சொல், முதற்குறிப்புச் சொல், தொகைக்குறிப்புச் சொல் போன்றவை குறிப்பால் பொருள் தரும் சொற்களாம்.

### ஒன்றொழி பொதுச்சொல்

உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டிலும் பொதுவான சொற்கள் உண்டு. ஒரு சொல், தொடரில் முன்னும் பின்னும் வரும் சொற்களின் தொடர்பாலும், குறிப்பாலும் ஒரு பாலை நீக்கி, மற்றொருபாலைச் சுட்டும். அதற்கு, ஒன்றொழி பொதுச்சொல் என்பது பெயர்.

#### உயர்திணையில்,

(எ–டு) 1. வீட்டின்முன் ஐவர் கோலமிட்டனர்.

2. நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்.

முதல் தொடரில் வந்துள்ள ஐவர் என்னும் பொதுச்சொல் கோலமிட்டனர் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கிப் பெண்பாலை உணர்த்தி நின்றது. இரண்டாம் தொடரிலுள்ள

ஐவர் என்னும் பொதுச் சொல், போர்க்களம் என்னும் சொல்லின் குறிப்பால் பெண்பாலை விடுத்து, ஆண்பாலை மட்டும் உணர்த்தி நின்றது.

அஃறிணையில்,

(எ–டு) 1. இம்மாடு வயலில் உழுகிறது. 2. இம்மாடு பால் கறக்கிறது.

முதல் தொடரில் வந்துள்ள 'மாடு' என்னும் பொதுச் சொல் உழுகிறது என்னும் வினைக்குறிப்பால் காளைமாட்டையும், இரண்டாவது தொடரில் வரும் 'மாடு' என்னும் பொதுச்சொல் கறக்கிறது என்னும் வினைக்குறிப்பால், பசுமாட்டையும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு, ஒரு பொதுச்சொல் முன்பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது ஒன்றொழி பொதுச்சொல் எனப்படும்.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை. – நன்னூல், 269

### 3. இனங்குறித்தல்

கதிர்வேல் வெற்றிலை தின்றான்.

இத்தொடர், கதிர்வேல் வெற்றிலை மட்டுமா தின்றான். வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு முதலானவற்றையும் சேர்த்துத் தின்றான் எனப் பொருள்படுகிறது.

இவ்வாறு ஒருசொல், தன்பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும்.

ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே. – நன்னூல், 359

### 4. அடுக்குத்தொடர்

அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்குமுறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (எ–டு) 1. | அன்றே அன்றே | – | அசைநிலை |
| 2. | போ போ | – | விரைவு |
| 3. | எறி எறி | – | சினம் |
| 4. | வருக வருக | – | மகிழ்ச்சி |
| 5. | தீ தீ தீ | – | அச்சம் |
| 6. | நொந்தேன் நொந்தேன் | – | துன்பம் |
| 7. | கோடி கோடி கோடி கோடியே | – | இசை நிறை |

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்று நான் கெல்லை முறை அடுக்கும். – நன்னூல், 395

## 5. இரட்டைக்கிளவி

இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டித்தே வரும்; பிரித்தால் பொருள் தராது; இதனை இரட்டைக்கிளவி என்பர். (கிளவி – சொல்) இரட்டைக் கிளவி – இரண்டு சொல்.

(எ–டு) 1. பாவை, படபடவெனப் பேசினாள்.

2. கலா, கலகலவெனச் சிரித்தாள்.

இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா – நன்னூல், 396

**அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடு**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. சொற்கள் தனித்தனியே நிற்கும். | 1. சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும். |
| 2. பிரித்தால் பொருள் தரும். | 2. பிரித்தால் பொருள் தராது. |
| 3. இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும். | 3. இரட்டித்தே வரும். |
| 4. விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி | 4. இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும். |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) இளவழகன் வந்தான். இது ____________ தொடர்.

1. குறிப்பு 2. வெளிப்படை 3. எதுவுமில்லை.

ஆ) 'மாடு' என்னும் சொல் ____________ ஆகும்.

1. உயர்திணைப் பொதுப் பெயர் 2. அஃறிணைப் பொதுப் பெயர் 3. விரவுப்பெயர்

இ) மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ____________ குறிக்கும்.

1. பசு 2. காளை 3. கன்று

2. பொருத்துக.

1. வெளிப்படைச் சொற்கள் – சோறு உண்டான்.
2. குறிப்புச் சொல் – கல், மண்.
3. இனங்குறித்தல் – மாடு பால் கறந்தது.

### ஆ) குறுவினாக்கள்

1. வெளிப்படை என்றால் என்ன? சான்று தருக.
2. குறிப்பு என்பதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'தீண்டாமை மனித நேயமற்ற செயல்' என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

**பத்தியைப் படித்து அதன் பொருள் நயம் உணர்க.**

மாவீரன் அலெக்சாண்டரைப் பார்க்க வந்த அயல்நாட்டு விருந்தினர் ஒருவர், "பேரரசே! உங்கள் நகரிலுள்ள தோட்டங்களில் அருஞ்செயலாற்றிய வீரர்களின் சிலைகளை வைத்திருக்கிறீர்கள். தங்களின் சிலையை மட்டும் ஏன் வைக்கவில்லை?" என்று கேட்டார்.

அதற்கு அலெக்சாண்டர், "என்னுடைய உருவச் சிலையை நான் இங்கு வைத்தால் எதிர்காலத்தில் என் பெயர் மறைந்துவிடும். இது யாருடைய சிலை என்று என் சிலையைப் பார்த்துக் கேட்பார்கள். அதைவிட என் சிலை வைக்கப்படாதிருந்தால், "இவ்வளவு சிலைகள் இருக்கும்போது அலெக்சாண்டரின் சிலை மட்டும் ஏன் இல்லை? என்று கேட்கட்டும், அதைத்தான் நான் விரும்புகிறேன்," என்றார்.

இதுபோன்ற பொருள் நயமிக்க சொற்களைச் சிறுகுழுவில் கலந்துரையாடி மகிழ்க.

### இ) எழுதுதல் திறன்

**சிறுகதையை முடிக்கும் திறன்**

கதை, கவிதை, கட்டுரை, கடிதம் முதலானவை, எழுதுதல் திறனில் உயர்நிலைத் திறன்களாகும். மொழிப்பாடம் கற்ற ஒவ்வொருவரிடமும் இத்திறன்கள் அமைந்திருந்தல் வேண்டும். இப்பகுதியில் சிறுகதை ஒன்றின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, முழுமைபெற்ற ஒரு சிறுகதையை உருவாக்குதல் வேண்டும். சிறுகதையின் முடிவு உங்கள் எண்ணத்திற்கேற்ப எப்படி வேண்டுமானாலும் அமையலாம். சிறுகதைக்கேற்ற பொருத்தமான தலைப்பு ஒன்றையும் தருக.

பயிற்சி : கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையின் தொடக்கத்தைக்கொண்டு கதையை முழுமையாக எழுதுக. கதைக்குத் தலைப்பு ஒன்று தருக.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தங்கள் கூடுகளைவிட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலைவேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது. அப்போது ..............

### ஈ) கட்டுரை : சாலைவிதிகள்

### உ) கடிதம் : பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

### ஊ) விவாதித்தல் திறன்

'தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொதுமக்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது' என்பது குறித்து வகுப்பில் பேசுக.

## மொழித்திறன் பயிற்சி

**அ) உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.**

(எ–டு) நான் மழையில் நனைவது பிடிக்கும்.

எனக்கு ( நான் + கு = எனக்கு ) மழையில் நனைவது பிடிக்கும்.

1. அண்ணன், தம்பி வீடு சென்றார்.
2. மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்க.
3. நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
4. வேல்விழி திருக்குறள் படித்தாள்.

**ஆ) இளமைப்பெயர்களைப் பொருத்துக.**

1. ஆடு – கன்று
2. மான் – பிள்ளை
3. கீரி – குட்டி
4. சிங்கம் – குஞ்சு
5. கோழி – குருளை

**இ) நிறுத்தக்குறி இடுக.**

சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்

**ஈ) பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
3. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
4. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
5. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.

## தமிழெண்களை அறிவோம்

பயிற்சி : 101 முதல் 150வரை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 101 ௧௦௧ | 111 | 121 | 131 | 141 |
| 102 | 112 | 122 | 132 | 142 |
| 103 | 113 | 123 | 133 | 143 |
| 104 | 114 | 124 | 134 | 144 |
| 105 | 115 | 125 | 135 | 145 |
| 106 | 116 | 126 | 136 | 146 |
| 107 | 117 | 127 | 137 | 147 |
| 108 | 118 | 128 | 138 | 148 |
| 109 | 119 | 129 | 139 | 149 |
| 110 | 120 | 130 | 140 | 150 |

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

அன்பரசி, பள்ளிக்குச் செல்லும் வழியில் அந்தக் காட்சியை நாள்தோறும் காணத் தவறுவதில்லை. கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் உட்கார்ந்திருப்பார்.

அவருடைய கைகள் இரண்டும், கூடைமுடைதலில் விரைவாகச் சுழன்றுகொண்டிருக்கும். எப்படி இவரால் இவ்வளவு விரைவாகச் செயல்படமுடிகிறது என்று அன்பரசி வியப்படைவாள்.

ஒருநாள், தன் இரு கண்களையும் கட்டிக்கொண்ட அன்பரசி, வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின்மீது மோதிக்கொண்டாள். அப்போதுதான், அவர்கள் எத்தகைய துன்பத்தை அடைகிறார்கள் என்று எண்ணிப்பார்த்து மனம் வருந்தினாள்.

மாற்றுத் திறனாளரிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் ?


அன்பரசியைப்போன்று நீங்களும் சிறிதுநேரம் கண்ணைக்கட்டிக்கொண்டு, உங்கள் வீட்டினுள்ளே ஏதாவது ஒருபொருளைத் தேடி எடுங்கள்.

இப்பொழுது மாற்றுத்திறனாளரின் நிலையை எண்ணிச் சிந்தனை செய்யுங்கள்.

## படிவங்களை நிரப்புதல்

அஞ்சலகம், வங்கி, கல்வி நிறுவன விண்ணப்பங்கள் மற்றும் பேருந்து, தொடர்வண்டி ஆகியவற்றில் இருக்கை / படுக்கை முன்பதிவு செய்தல் முதலியவற்றில் படிவங்களை நிரப்புதல் தவிர்க்க இயலா. அவற்றை நிரப்ப நாம் அறிந்து கொள்ளுவது அவசியம்.

### வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம் நிரப்புதல் :


தேதி / Date

Depositing Branch

Common Pay in Slip for Depositing, Loans, IB Credit Card, Taxes etc.

Type of account (Pl ✓) SB / CA / OD / OCC / RD / Term Dep / Loans / Taxes / Credit Card / Others

(specify)

A/c No. / Credit Card No.

Account Name Mr./Ms./Messrs

Rs. in words


only

by Cash/Cheque) | ரூ Rs. | பை Ps.

Cashier/SWO | அதிகாரி / Officer

PLEASE GIVE DETAILS OF CASH / CHEQUES DEPOSITED OVERLEAF

Service Tax Registration No. AAAC11607GST005 PAN No. AAAC11607G


தேதி / Date

Common Pay in Slip for Deposits, Loans, IB Credit Card, Taxes etc.

Please use separate slips for Cash / Cheques on IB / Cheques on Other Banks Local / Other Banks Outstation

Deposited at ... Branch

SB / CA / OD / OCC / RD / Term Dep / Loans / Taxes / Credit Card / Others

A/c No. / Credit Card No.

A/c Maintained with ... Branch

For the credit of Mr./Ms./Messrs

Rs. in words

only by Cash / Cheque | ரூ Rs. | பை Ps.

வங்கி முத்திரை பதிக்குமிடம் AFFIX BANK SEAL HERE

For Cash deposits of Rs. 10 Lakhs & above please furnish details of transaction including source of cash overleaf for RBI reporting

(Signature of Remitter)

Name

Address

Phone No.

PAN of Remitter

* (Mandatory of Rs. 50000 and above)

Journal No.

Queue No.

Cashier/SWO | அதிகாரி / Officer

Service Tax Registration No. AAAC11607GST005

PAN No. AAAC11607G

## மதிப்புக்கல்வி

### ஈகை

தமிழ்த்திரைப்பட உலகின் வழிகாட்டியாகவும் பாதுகாவலராகவும் திகழ்ந்தவர் ஏ.வி. மெய்யப்பர். அவர் இயற்கையெய்தியதும், அவர் வழக்கமாகப் பயன்படுத்திய பொருள்கள் எல்லாவற்றையும் பாதுகாப்பாக எடுத்து வைத்தனர். அத்தகைய பொருள்களில் இன்றியமையாத ஒன்று ஒலிப்பதிவு நாடாக் கருவி.

அவர், தமக்கு விருப்பமான பாடல்களை அதில் கேட்பது வழக்கமாம். அவருடைய துணைவியார், அவ்வொலிப்பதிவுக் கருவியைத் தேடியபோது, அதனைக் காணவில்லை; எல்லாரையும் கேட்டுப் பார்த்தார்; வீட்டில் தேடாத இடமில்லை. ஆனாலும் கிடைக்கவில்லை.

சில நாளுக்குப் பிறகு, அலுவலகத்திலிருந்த ஒருவரைக் கேட்டபோது, அவர் கூறிய பதில் அவ்வம்மையாரைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

ஏ.வி.எம். அவர்கள், இயற்கை யெய்துவதற்கு நான்கு நாளுக்குமுன் செய்தித்தாளில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தார். யாராவது ஓர் ஒலிப்பதிவுக்கருவியை நன்கொடையாகக் கொடுத்து உதவினால், அதில் பாடங்களைப் போட்டுப் படித்துத் தேர்வு எழுத உதவியாக இருக்கும் என்று விழிமாற்றுத்திறனாளிப் பெண்ணொருத்தி விளம்பரப்படுத்தியிருந்தாள்.

அதனைப் படித்த ஏ.வி.எம். தம் ஒலிப்பதிவுக் கருவியை எடுத்து, அதனை எப்படி இயக்குவது எனத் தாமே ஒலிப்பதிவுநாடாவில் பேசிப் பதிவு செய்தார். அதனை, அந்தப் பெண்ணுக்கு உடனே அனுப்பிவைத்தார்.

தம் வாழ்நாள் இறுதிவரை ஏ.வி.எம். அவர்கள் கருணை உள்ளத்தோடு இருந்துள்ளார் என்பதை இதன்வாயிலாக அறியமுடிகிறது.

நம் வாழ்நாளில் இயன்றவரை இயலாதோருக்கு, இல்லாதோர்க்கு, மாற்றுத் திறனாளியர்க்கு உதவுவதே சிறந்த உதவி.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. Money makes many things | பணம் பத்தும் செய்யும். |
| 2. Eagles don't catch flies. | புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. |
| 3. Old is gold. | காலம் பொன் போன்றது. |
| 4. Prevention is better than cure. | வருமுன் காப்பதே சிறந்தது. |
| 5. Slow and steady wins the race. | முயற்சி திருவினையாக்கும். |

## நற்றிணை

( தோழி, தலைமகனிடம் கூறியது. )

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே.

– மிளைகிழான் நல்வேட்டனார்

**பொருள் :** உழவர், நெற்கதிர்களை அறுவடை செய்த பின்னர், அகன்ற அழகிய வயலை மறுபடியும் பயிர்செய்ய உழுதனர்; பனையோலைப் பெட்டியில் விதை கொண்டுசென்று ஈரமுள்ள அந்நிலத்தில் விதைத்தனர். பின்னர், அவர்கள் அங்குள்ள நீர்நிலைகளில் பல்வகை மீன்களைப் பிடித்து அப்பெட்டியில் கொண்டு வருகின்ற புதுவருவாயினை உடைய மருத நிலத்தலைவனே!

அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும், யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் அவ்வரசர் முன்னிலையில் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று. அஃது, அவரவர்தம் முன்வினைப் பயனே. தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வமெனச் சான்றோர் கூறுவர்.

**சொற்பொருள் :** அரி – நெற்கதிர்; செறு – வயல்; யாணர் – புதுவருவாய்; வட்டி – பனையோலைப் பெட்டி; நெடிய மொழிதல் – அரசரிடம் சிறப்புப் பெறுதல்.

**இலக்கணக்குறிப்பு :** சென்ற வட்டி – பெயரெச்சம்; செய்வினை – வினைத்தொகை; புன்கண், மென்கண் – பண்புத்தொகைகள்; ஊர (ஊரனே) – விளித்தொடர்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** சென்ற – செல் (ன்) + ற் + அ. செல் – பகுதி, ல் – ன் ஆனது விகாரம், ற் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி; சேர்ந்தோர் – சேர் + த் (ந்) + த் + ஓர். சேர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனதுவிகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஓர் – படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : அங்கண் – அம் + கண்; பற்பல – பல + பல; புன்கண் – புன்மை + கண்; மென்கண் – மென்மை + கண்.

ஆசிரியர் குறிப்பு : மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், மிளைகிழான் நல்வேட்டனார் என்னும் பெயர் பெற்றார். இவர், ஐந்திணைகளைப் பற்றியும் பாடல் இயற்றியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடலும் குறுந்தொகையில் ஒன்றுமாக ஐந்து பாடல் உள்ளன. இவர் சங்ககாலத்தவர்.

நூற்குறிப்பு : பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கநூல்கள் எனப் போற்றப்படுவன. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும், 'நல்' என்று அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதும் நற்றிணையே. இஃது அகத்திணை நூலாகும்.

நற்றிணை பல்வேறு காலங்களில், புலவர் பலரால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல். ஓரறிவு உயிர்களையும் விரும்பும் உயரிய பண்பு, விருந்தோம்பல், அறவழியில் பொருளீட்டல் முதலிய தமிழர்தம் உயர் பண்புகளைத் தெள்ளத்தெளிவாக எடுத்தியம்பும் நூலிது. இதில், ஐந்திணைக்குமான பாடல்கள் உள்ளன. இதிலுள்ள பாடல்கள், ஒன்பது அடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்டவை.

இப்பாடல்களைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி. நற்றிணைப் பாடல்கள் நானூறு; பாடினோர் இருநூற்றெழுபத்தைவர். நம் பாடப்பகுதி, நற்றிணையிலுள்ள இருநூற்றுப் பத்தாவது பாடல்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக

அ) நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ______________ பேரெல்லையும் கொண்ட நூல்.

ஆ) 'அரி' என்னும் சொல்லின் பொருள் ______________.

2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) 'நல்' என்னும் அடைமொழி பெற்ற நூல் ______________.

1. அகநானூறு
2. கலித்தொகை
3. நற்றிணை

ஆ) நற்றிணையைத் தொகுப்பித்தவர் ______________.

1. பன்னாடு தந்த மாறன் வழுதி
2. உக்கிரப் பெருவழுதி
3. இளம்பெருவழுதி

இ) நற்றிணை ________________ நூல்களைச் சார்ந்தது.

1. பத்துப்பாட்டு 3. எட்டுத்தொகை

2. பதினெண்கீழ்க்கணக்கு

3 பொருத்துக.

1. செறு – பனையோலைப்பெட்டி
2. வித்து – புதுவருவாய்
3. யாணர் – விதை
4. வட்டி – வயல்

ஆ) சிறுவினா

தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.

செயல் திட்டம் :

1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களை அகம், புறம், அகப்புறம் என வகைப்படுத்தி எழுதுக.
2. நற்றிணைப் பாடலின் கருத்தை மனவரைபடமாக்குக.

## புறநானூறு

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.

– கண்ணகனார்

பொருள் : பொன்னும் பவளமும் முத்தும் நிலைத்த பெருமலையில் பிறக்கும் மாணிக்கமும், தோன்றும் இடங்களால் ஒன்றுக்கொன்று தொலைவில் இருப்பினும், மாலையாகக் கோத்து மதிப்புமிக்க அணிகலனாக அமைக்கும்போது, தம்முள் ஒருங்கு சேரும். அதுபோல, சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர்; சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர்.

**சொற்பொருள் :** துகிர் – பவளம், மன்னிய – நிலைபெற்ற, சேய – தொலைவு, தொடை – மாலை, கலம் – அணி.

**இலக்கணக்குறிப்பு :** பொன்னும் துகிரும் முத்தும் பவளமும் மணியும் – எண்ணும்மைகள்; மாமலை – உரிச்சொற்றொடர்; அருவிலை, நன்கலம் – பண்புத்தொகைகள்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** புணர்ந்து, புணர் + த் ( ந் ) + த் + உ. புணர் – பகுதி த் – சந்தி , த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்சவிகுதி.

**பிரித்தறிதல் :** அருவிலை – அருமை + விலை, நன்கலம் – நன்மை + கலம்.

**ஆசிரியர்குறிப்பு :** இப்பாடலாசிரியர் கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவர். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபொழுது, பிசிராந்தையாரின் வருகைக்காகக் காத்திருந்தான். அப்போது, அவருடன் இருந்தவர் கண்ணகனார் ஆவார். அவன் உயிர் துறந்தபொழுது மிகவும் வருந்திய கண்ணகனார் இப்பாடலைப் பாடினார்.

**நூற்குறிப்பு :** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. இது, புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூல் சங்ககால மக்களின் வாழ்க்கைநிலை, மன்னர்களின் வீரம், புகழ், கொடை, வெற்றிகள் பற்றிய பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது. தமிழரின் வரலாற்றை அறியவும், பண்பாட்டு உயர்வை உணரவும் பெரிதும் உதவுகிறது. நம் பாடப்பகுதியில் இருநூற்றுப் பதினெட்டாம் பாடல் இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) குறுவினாக்கள்

1. புறநானூறு – குறிப்பு எழுதுக.
2. சான்றோர் யாருடன் சேர்வர் ?

### ஆ) சிறுவினா

சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

# பேச்சுக்கலை

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக்கலையும் ஒன்று. இது, நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமையத்தக்க அரியதொரு கலை. இது, மக்களுக்கு அறிவு புகட்டி அவர்களை உயர்ந்த இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையது. மேடைப்பேச்சில் நல்ல தமிழைக்கொண்டு மக்களை ஈர்த்தோர் தமிழ்த்தென்றல் திரு.வி.க., பேரறிஞர் அண்ணா, ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடிஅடிகளார் முதலியோர் ஆவர்.



## பேச்சும் மேடைப்பேச்சும்

பேச்சு வேறு, மேடைப்பேச்சு வேறு. வெறும்பேச்சுக்கும் மேடைப்பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. பேச்சில் உணர்ந்ததை உணர்ந்தவாறு தெரிவித்தால் போதுமானது; ஆனால், மேடைப்பேச்சிலோ உணர்ந்ததனை உணர்த்தும்வகையிலும் தெரிவித்தல் வேண்டும். பேச்சில் கேட்கின்றவனைக் கேட்கின்றவனாகவே மதிக்கலாம். ஆனால், மேடைப்பேச்சிலோ கேட்கின்றவனை மதிப்பிடுவோனாக மதித்தல் வேண்டும். பிறருக்கு எழுதி உணர்த்துவதனைக் காட்டிலும் இனியமுறையில் பேசி உணர்த்தும் மேடைப்பேச்சு, முறையான மிகுந்த பயனை நல்கும் எனலாம்.

## பேச்சுக்கலையில் மொழியும் முறையும்

மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி என்றாலும், அக்கருத்துகளை வெளியிடும் மொழியும் முறையும் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன. பேச்சுக்கலையில் வெற்றிபெற வலிமையான கருத்துகள் தேவை. ஆயினும், அவற்றைக் கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேசத் தெரிதல்வேண்டும்.

பேச்சாளரின் நெஞ்சிலே உள்ள கருத்து, கேட்பவர்கள் நெஞ்சங்களிலே பாய்தல் வேண்டும். மின்சாரம் பாயக் கம்பி கருவியாக இருப்பதுபோலக் கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது. ஆதலால், பேசும்மொழி அழகியதாகவும் தெளிவாகவும் சிக்கலற்றதாகவும் இருத்தல்வேண்டும். அழகிய செஞ்சொற்களால் இனிமையாகவும் எளிமையாகவும் நுட்பமாகவும் கருத்தினை உணர்த்தவல்லதே சிறந்தமொழி நடை.

நாம் சொல்லுகின்றமுறையில் அச்சொல்லுக்குத் தனிப்பொருளும் தனிவேகமும் பிறக்கின்றது; உயிரும் உண்டாகின்றது. எனவே, சொல்லை ஆராய்ந்து அறிந்து அளவாகப் பயன்படுத்துதல் வேண்டும். சொல் கிடைக்கிறதே என்று நம்மை அறியாமல் அவற்றைக் கொட்டிவிடுதல் கூடாது; கொட்டியதை நம்மால் அள்ள முடியாது.

நாம் சொல்லுகின்ற செய்தியை ஒருவரிடம் மிகவும் விரைவாகச் சொல்லுதல் கூடாது. சொல்லியதனையே திரும்பத் திரும்பச் சொல்லுதல் தவறு. பொய்யுரையும் மிகைப்படுத்தலும் வேண்டா. நாம் எதனைச் சொல்ல நினைக்கிறோமோ அதனைத் தெளிவாகக் காலம் அறிந்து சொல்லுதல் வேண்டும்.

### முக்கூறுகள்

பேசும்பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்தித் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப் பகுத்துப் பேசுவதனையே பேச்சுமுறை என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

மேடைப்பேச்சினைத் தொடங்கும்போதே எடுப்புடன் தொடங்குதல் வேண்டும். பின்னர்ப் பேசவேண்டிய பொருளைக் கேட்பவர்களுக்குச் சோர்வு ஏற்படாதவகையில் சுவையுடன் எடுத்து, முடிவில் சுருக்கத்தினைக் கூறி, அக்கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

### எடுத்தல்

பேச்சைத் தொடங்குவது எடுப்பு. பேச்சின் தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது. தட்டுத்தடங்கலின்றிப் பேசுவதற்குத், தொடக்கமே அடித்தளமாகும். கேட்போரை வயப்படுத்தும்முறையில் பேச்சைத் தொடங்குதல் வேண்டும். அவையோர்தம் உள்ளங்களைக் கேட்பதற்குரிய பக்குவத்தில் வைத்திருத்தல் வேண்டும். மண்ணில் ஈரப்பதம் இருந்தால்தான் விதைக்க முடியும் என்பதனைப்போலக் கேட்போரைத் தன்வயப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது.

அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேசத் தொடங்குவதே சிறப்புடையது. பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளில் பேசப்போகும் பொருளில் புகுந்துவிடுவது பாராட்டுக்குரியது; இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பத் தொடக்கவுரை அமைதல் நன்று.

### தொடுத்தல் முறை

தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும். அன்றலர்ந்த மலரை அழகுபட மாலையாகத் தொடுத்தல் இதற்கோர் எடுத்துக்காட்டாம். மலர்களின் நறுமண வேறுபாடும் நிறவேறுபாடும் உணர்ந்து, அவற்றை இடையிடையே அமைத்து மாலைகள் தொடுக்கப்படுதல் இயல்பு. அதுபோலவே, இடையிடையே சுவைமிக்க சொற்களும் குணமிக்க கருத்துகளும் பிணைத்துப் பேசுவதே தொடுத்தல் எனப்படும். தாம் பேச எடுத்துக்கொண்ட செய்தியின் நுட்பங்களையும் கருத்துகளையும் பல தலைப்புகளின்கீழ் வரிசைப்படுத்தி, ஓர் ஓவியன் பல வண்ணம் தீட்டி, இயற்கை வனப்பை உருவாக்கிக் காட்டுதல்போலப் பேசுதலே ஒரு பேச்சாளரின் கடமையாகும்.

### பேச்சின் அணிகலன்கள்

இலக்கியக்கூறுகள் என்பவை மருந்தின்மேலிட்ட இனிப்புப் போன்றவை. பேச்சாளர் சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லவேண்டிய முறையில் சொன்னால்தான் கேட்பவர்களுக்கு ஈர்ப்பு ஏற்படும். எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும். நாம் ஒரு வீடு கட்டுகிறோம்; அது வெறும் சுவராக மட்டும் அமைந்திருந்தால் அழகு இராது. எனவே, இடையிடையே அழகிய மாடங்கள், சாளரங்கள், வளைவுகள்,

தூண்கள் இவற்றையும் அமைத்து வீட்டை மேலும் அழகுபடுத்துகிறோம். அதுபோல, பேச்சுக்குக் கருத்துப்பொலிவும் குரலோசையும் மட்டுமே போதியன அல்ல; இடையிடையே கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறுவகையான நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும். பேச்சில் அணிகள் அணு ஆற்றல் போல்வன.

### உணர்த்தும் திறம்

சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும்; நிரல்படச் சொல்லுதல் வேண்டும்; திறம்படச் சொல்லுதல் வேண்டும்; தெளிவாகவும் சொல்லுதல் வேண்டும்; உணர்ச்சி ஒளி மின்னுதல் வேண்டும்; ஊக்கம் துடித்தல் வேண்டும். இவையனைத்தும் பேச்சின் இன்றியமையாப் பொருண்மைகளாம்.

உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும். அப்பேச்சே கேட்போர் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று, கேட்பவர்களுடைய உள்ளத்தைப் பிணிக்கும் ஆற்றல் வாய்ந்ததாக அமையும். பேச்சாளர், தாம் உணர்ச்சிவயப்படாது, கேட்போரின் உள்ளத்தில் தாம் விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும்வகையில் பேசுதல்வேண்டும்.

### முடித்தல்

பேச்சைத் தொடங்குவதிலும் பொருளை விரிப்பதிலும் செலுத்தும் கவனத்தை, அழகுறப் பேச்சை முடிப்பதிலும் செலுத்துதல்வேண்டும். பேச்சை முடிக்கும்போதுதான், பேச்சாளர் தமது கருத்தை வற்புறுத்தவும் கேட்போர் மனத்தில் பதியுமாறு சுருக்கிக் கூறவும் கூடும். பேச்சாளர் கருத்துக்கு அவையோர் இணங்குவதும் மாறுபடுவதும், அவர்தம் பேச்சின் முடிவுரையைப் பொருத்தே அமையும். நாடகக்கலை, திரைப்படக்கலை போன்றே பேச்சுக்கலையிலும் முடிவு தனிச்சிறப்பையும் பெருமையையும் தேடிக் கொடுக்கக்கூடியது எனலாம்.

பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும்முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக் கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அழகுறவே அமையும் எனலாம். தமிழகத்தில் பேச்சுக்கலை இன்று சிறப்புற்று விளங்குவதனையும் தங்கள் கருத்திற்கு வலிமை சேர்த்து எல்லாத் தரப்பினரும் அதனைக் கையாளுவதனையும் காணலாம்.

> விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்.
>
> – குறள், 648

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) வெறும் பேச்சுக்கும் ____________ பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.

ஆ) பேச்சு முடிவில் ____________ கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை ________.

1. ஓவியக்கலை 2. இசைக்கலை 3. பேச்சுக்கலை

ஆ) மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர் ________ .

1. பேரறிஞர் அண்ணா 2. மு. வரதராசனார் 3. திரு.வி.க.

**3. ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.**

அ) புலவர் பொங்கற் புது நாள்களின் மாண்பினை உணர்ந்துகொண்டாடினார்.

ஆ) மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது.

**4. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

அ) மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது.

ஆ) மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடைபேச்சு.

## ஆ) குறுவினாக்கள்

1. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்த நால்வர் யாவர்?
2. பேச்சின் முக்கூறுகள் யாவை?

## இ) சிறுவினாக்கள்

1. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல்வேண்டும்?
2. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
3. பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல்வேண்டும்?

## ஈ) நெடுவினாக்கள்

1. மேடைப்பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிவகைகள் யாவை?
2. மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

## செயல்திட்டம்

மொழிக்கலப்பு பெருங்குற்றமே என்னும் பொருளில் வழக்காடு மன்றம் நடத்துக.

### கீழுள்ள உரைநடையைப் பேசிப் பழகுக.

சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ! கைத்தோல் உரிய கல்லுடைக்கும்போது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ! சிறைக் கோட்டத்தில் வேலை ஒழிந்த வேளையில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்; வள்ளுவர் குறளைப் படித்து என் உள்ளம் தழைத்தேன்.

செந்தமிழ் நடைக்கோர் எடுத்துக்காட்டு இது. இதுபோன்று எதுகை மோனை நயம் தோன்ற, நண்பருடன் பேசியும் எழுதியும் வருக.

# அண்ணாவின் கடிதம்

தம்பி!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன்பக்கம் நின்றிடவும் பரிவினைப் பெற்று மகிழ்ந்திடவும் இல்லந்தனிலே,

புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்
பொன்னின் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி



நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்துவந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு பீடத்தில் அமர்த்திவிட்டாய்.

பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய்.

நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய்.

நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்துகொள்வதில் முற்பட்டிருக்கிறேன்.

எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்குதடையற்ற நிலையில் இருந்துவந்த நான், கட்டுண்டு கிடக்கிறேன்.

ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது.

நலிந்தோரும்கூட, இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம்

எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன். ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, முடியாது – பிறகு – விடு – அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா; அதுபோல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவான் வேண்டி, "உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!" என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடச் செய்துள்ளனர்.

"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்"


என்று முடியரசன் முழங்குகிறார். நாடு, ஆம் ஆம்! என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு கருத்து விருந்து அளித்துள்ளேன், காஞ்சி இதழ்மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய்.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

14.1.1968

அண்ணன்,



மாதிரி வினா

நெடுவினா

அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

# வினா, விடைவகைகள், ஒருபொருட் பன்மொழி

## வினா வகை

என்ன ? எப்படி ? எங்கு ? ஏன் ? என வினாமேல் வினாவைக் கேட்டு விடையறிய விரும்புகின்றவனே சிறந்த அறிவாளியாக ஆகமுடியும் என்று சாக்கரடீசும், தந்தை பெரியாரும் கூறுவர். வினா அறுவகைப்படும். அவை: அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்பன.

### 1. அறிவினா

தான் ஒரு பொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும்பொருட்டு வினாவப்படும் வினா அறிவினா.

(எ–டு) திருக்குறளை இயற்றியவர் யார் ? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.

### 2. அறியாவினா

தான் அறியாத ஒரு பொருளை அறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது; அறியாவினா.

(எ–டு) எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை ? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

### 3. ஐயவினா

தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒருபொருள் குறித்து, ஐயத்தினைப் போக்கிக் கொள்வதற்காக வினவப்படும் வினா, ஐயவினா.

(எ–டு) அங்கே கிடப்பது பாம்போ ? கயிறோ ?

### 4. கொளல்வினா

தான் ஒரு பொருளை வாங்கிக்கொள்ளும்பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா, கொளல்வினா.

(எ–டு) பருப்பு உள்ளதா ? என வணிகரிடம் வினவும் வினா.

### 5. கொடைவினா

தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக, அப்பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரிடம் வினவுவது, கொடைவினா.

(எ–டு) மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ ?

### 6. ஏவல்வினா

ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் வினா, ஏவல் வினா.

(எ–டு) மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா ?

முருகா சாப்பிட்டாயா ?

( இவை படி, சாப்பிடு என்று ஏவல் பொருளைத் தருகின்றன )

அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை,
ஏவல் தரும் வினா, ஆறும் இழுக்கார். – நன்னூல், 385.

## விடை வகை

வினாவிற்கு ஏற்ப விடையளிப்பதுதான் மொழிநடையின் சிறப்பு.

'தேர்வு, நாளை நடைபெறுமா?' எனக் கேட்ட ஒருவனிடம், 'என் தங்கை ஏழாம் வகுப்பில் படிக்கிறாள்' எனக் கூறுவது தவறு. வினாவும் விடையும் பிழையின்றி அமைதலே முறை.

இறை, செப்பு, பதில் என்பன விடையின் வேறுபெயர்கள். விடை எண்வகைப்படும். அவை: சுட்டு, மறை, நேர், ஏவல், வினாஎதிர்வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்பன.

### 1. சுட்டுவிடை

"சென்னைக்கு வழி யாது?" என்று வினவினால்,

'இது' என்பதுபோலச் சுட்டிக் கூறும் விடை, சுட்டுவிடை.

### 2. மறைவிடை (எதிர்மறுத்துக் கூறல் விடை)

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்யேன் என்பதுபோல எதிர்மறுத்துக் கூறும் விடை, எதிர்மறைவிடை.

### 3. நேர்விடை (உடன்பட்டுக் கூறுதல்)

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்வேன் என்று உடன்பட்டுக் கூறும் விடை, நேர்விடை.

### 4. ஏவல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'நீயே செய்' என்று ஏவிக்கூறுவது ஏவல்விடை.

### 5. வினாஎதிர்வினாதல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'செய்யாமலிருப்பேனோ?' என்று வினாவையே விடையாகக் கூறுவது, வினாஎதிர்வினாதல்விடை.

### 6. உற்றதுரைத்தல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'உடம்பு நொந்தது' என்று தனக்கு உற்றதனை விடையாகக் கூறுவது, உற்றதுரைத்தல்விடை.

### 7. உறுவதுகூறல்விடை

"செய்வாயா?" என்னும் வினாவிற்குக் 'கை வலிக்கும்' எனத் தனக்கு வரப்போவதனை விடையாகக் கூறுவது, உறுவதுகூறல்விடை.

### 8. இனமொழிவிடை

"ஆடுவாயா?" என்று வினவியபோது, 'பாடுவேன்' என ஆடுவதற்கு இனமான பாடுவதனை விடையாகக் கூறுவது, இனமொழிவிடை..

சுட்டு, மறை, நேர் ஆகிய மூன்றும் வெளிப்படை. ஏவல், வினா எதிர்வினாதல், உற்றதுஉரைத்தல், உறுவதுகூறல், இனமொழி ஆகிய ஐந்தும் வினாக்களுக்கு உரிய விடையைக் குறிப்பால் உணர்த்துவன.

### ஒருபொருட்பன்மொழி

1. திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கிறது.

2. அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகின்றன.

இவ்விரு தொடர்களிலும் ஒருபொருள் குறித்துத் தொடர்ந்துவரும் இருசொற்கள் உள்ளன. அவை உயர்ந்தோங்கிய, குழிந்தாழ்ந்து என்பவை. உயர்ந்து, ஓங்கி ஆகிய இரு சொற்களும், உயர்ந்த என்னும் ஒரே பொருளிலும், குழிந்து, ஆழ்ந்து என்பவை குழிந்து என்னும் ஒரே பொருளிலும் வருகின்றன.

ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது, ஒருபொருட் பன்மொழியாகும்.

(எ–டு) 1. நடுமையம்.

2. மீமிசை ஞாயிறு.

என்னும் தொடர்களில் நடுப்பகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் என்னும் இருசொற்களும், மேற்பகுதி என்னும் பொருளைத் தரும் மீ, மிசை என்னும் இருசொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்தியுள்ளன.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே ________________ என்பர்.

ஆ) ஒருபொருட் பன்மொழிக்குச் சான்று ________________.

இ) இது செய்வா' என்னும் வினாவிற்கு 'வயிறு வலிக்கும்' எனக் கூறுவது ______ விடை.

ஈ) ஆடத்தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக் கூறுவது ________ விடை.

உ) நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது ____________ வினா.

**2. பொருத்துக.**

1. அறிவினா – வருவாயா? எனில் 'வாரேன்' என்பது.
2. ஏவல் விடை – உண்டாயா? எனில், 'வயிறு வலிக்கும்' என்பது.
3. மறைவிடை – இதனைச் செய்வாயா? எனில், 'நீயே செய்' என்பது.
4. உறுவது கூறல் – "இதன் பொருள் யாது?" என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது.

### ஆ) குறுவினாக்கள்

1. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பாம்போ? கயிறோ? – எவ்வகை வினா?.
3. விடை எத்தனை வகைப்படும்? அவையாவை?
4. சுட்டுவிடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக
5. உடன்பட்டுக் கூறும் விடையின் பெயரென்ன?

## மொழித்திறன்பயிற்சி

### உவமைகளைச் சொற்றொடரில் அமைத்தல்

(எ–டு) 1. என் இளமைக்காலத்துச் செயல்கள், பசுமரத்தாணிபோல நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன.

2. அறிஞர் அண்ணாவின் புகழ், குன்றின்மேலிட்ட விளக்குப்போலப் பாரெங்கும் ஒளிவீசுகின்றது.

இவ்வாறே பின்வரும் உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.

1. அனலிடைப்பட்ட புழுவைப்போல
2. கடலில் கரைத்த பெருங்காயம்போல
3. இலவுகாத்த கிளிபோல
4. காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல
5. அடியற்ற மரம்போல
6. மடைதிறந்த வெள்ளம்போல
7. கல்மேல் எழுத்துப்போல
8. அத்தி பூத்தாற்போல
9. மழை காணாப் பயிர்போல
10. மலரும் மணமும்போல
11. வேலியே பயிரை மேய்ந்ததுபோல
12. கீரியும் பாம்பும்போல
13 உள்ளங்கை நெல்லிக்கனிபோல
14 கிணற்றுத் தவளைபோல
15. நிலவும் வானும்போல

## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல் திறன்

அண்ணாவின் அடுக்குமொழி நடை குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம்.

பசி என்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம்.

பசி என்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருணியம்.

பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம்.

பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற்போக வெட்கந் தடுக்கின்றது, வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிகின்றது, உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை; இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்? என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங்கண்ட ஊமையைப்போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம்.

நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வர்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச்சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம்.

(இப்பகுதியில் இடம்பெற்றுள்ள வடசொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களைக் கண்டறிந்து மீண்டும் படித்துப் பார்க்க.)

செயல் திட்டம் : அண்ணாவின் கடிதம் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. இதேபோன்று நேரு இந்திராவுக்கு எழுதிய கடிதம், மு.வ.வின் தம்பிக்கு, தங்கைக்கு, நண்பருக்கு என எழுதிய கடிதங்கள் முதலிய நூல்களை நும் பள்ளி நூலகத்திலிருந்து திரட்டுக. அவற்றில் அமைந்துள்ள கருத்துகளைப் படித்துக் குறிப்புகள் திரட்டுக.

## இ) எழுதுதல் திறன்

### உரைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுதல்

கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியை நன்கு படித்து, அதன் மையக்கருத்தினை மனத்தில் அமைத்துக் கொள்ளுதல்வேண்டும். உரைப்பகுதியில், பயின்று வந்துள்ள சொற்களை, சொற்றொடர்களை மீண்டும் பயன்படுத்தாமல் சொந்தநடையில் எழுதுதல் வேண்டும். அடைமொழிகள், பழமொழிகள், உவமைகள், அடுக்குத்தொடர்கள் வந்திருப்பின், அவற்றில் தேவையற்றதை நீக்கிவிட்டு எழுதுதல் வேண்டும். முதலில் திருந்தாப் படிவம் எனத் தலைப்பிட்டுச் சுருக்கி எழுதிய பின்னர், அதில் மாற்றங்கள் செய்து திருந்திய படிவம் எழுதவேண்டும். திருந்திய படிவத்திற்குத் தலைப்பு ஒன்று தருதல்வேண்டும். சுருக்கப்பட்ட பகுதி மூன்றில் ஒரு பங்காக இருத்தல் வேண்டும்.

### சுருக்கி எழுதவேண்டிய பத்தி

சிக்கனமாய் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியுமா? செலவுகளைக் குறைத்தல் வேண்டும். அப்படியானால் நல்ல உணவு, சிறந்த ஆடை மற்றும் தேவையான பொருள்கள் முதலியவற்றுக்குப் போதிய அளவு செலவு செய்யாமல் வாழ்வதா? அற்றன்று. நோய் வந்துவிட்டால் அதைத் தீர்ப்பதற்கு மருத்துவச் செலவு செய்யாமலிருப்பதா? அதுவும் அன்று, தனக்கும் தன் குடும்பத்திற்கும் தேவையான இன்றியமையாத செலவுகளைச் செய்யத்தான் வேண்டும். தேவைக்குச் செலவிட்டது போக எஞ்சிய வருவாயில் எதிர்கால வாழ்க்கைக்குச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும். எறும்பு மழைக்காலத்தில் தனக்கு வேண்டிய உணவைக் கோடைக் காலத்திலேயே தேடி வைத்துக்கொள்கிறது அன்றோ? அதுபோல நாமும், உழைக்கவும் ஊதியம்

மிகுதியாகத் தேடவும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சேர்த்துவைக்க முயலுதல் வேண்டும். எதிர்காலப் பாதுகாப்பு மிக்க வாழ்க்கையின் பொருட்டாவது சிக்கனமாக வாழும் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல், சிறுகச் சிறுகச் சேமித்தாலே பெரும்பொருள் சேமித்துவிடலாம். சிக்கனமாக வாழ்வோம், சிறப்புடன் வாழ்வோம்.

திருந்தாப் படிவம்

சிக்கனமாய் வாழ்வதற்குச் செலவுகளைக் குறைத்தல் வேண்டும். நல்ல உணவு, அழகிய ஆடைகள், தேவைப்படும் பொருள்கள், மருத்துவச் செலவு போன்றவற்றுக்கும் தனக்கும் குடும்பத்திற்கும் இன்றியமையாச் செலவுகளைச் செய்து எஞ்சிய வருவாயில் சேமிக்கும் பழக்கம் கொள்ளுதல் வேண்டும். மழைக்கால உணவைக் கோடைக்காலத்திலேயே சேமித்து வைக்கும் எறும்புபோல, நாமும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சிக்கனமாக வாழ்ந்து சேமிக்கும் பழக்கம் கொண்டால் பெரும்பொருள் சேர்க்கலாம். சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு.

திருந்திய படிவம்

### சிறுதுளி பெருவெள்ளம்

உணவு, உடை, மருத்துவம் போன்றவற்றிற்கும் தனக்கும் குடும்பத்திற்கும் இன்றியமையாச் செலவுகளைச் செய்து, பின் எஞ்சியுள்ள பொருளைச் சேமித்து வைத்தல் வேண்டும். மழைக் காலத்திற்குத் தேவையான உணவைக் கோடையில் சேமிக்கும் எறும்புபோல, நாமும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே உழைத்துப் பொருள் தேடி எதிர்கால நல்வாழ்வுக்குச் சேமித்தல் வேண்டும். சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு.

பயிற்சி : கீழுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் திரண்ட கருத்தினைச் சுருக்கி வரைக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

மொழியென்பது சமூகத்தால்தான் வளர்ச்சி பெறும். மொழி இன்றேல் சமூகமாக இயங்க முடியாது. எனவே, ஒன்றுபட்ட பொதுவாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் உறவாடுவதற்கு மொழியே சிறந்த கருவியாக அமைகின்றது. பொதுமக்கள் தாய்மொழியையே சிறந்த கருவியாகக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக, நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்கு நமது தாய்மொழியையே கையாளுகின்றோம். பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், குலங்கள், நிலைகள், தொழில்கள் ஆகியவற்றால் வேற்றுமையுற்ற பல பிரிவினரும் பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதனைக் காணும்போது தாய்மொழியின் பேராற்றலை என்னவென்று கூறுவது ?

## ஈ) கட்டுரை

நான் பேச்சாளரானால்....

## உ) கடிதம்

பேருந்து வசதிவேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்க்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

## தமிழெண்களை அறிவோம்

1. 151 முதல் 200 வரை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 151 ௧௫௧ | 161 ௧௬௧ | 171 ௧௭௧ | 181 ௧௮௧ | 191 ௧௯௧ |
| 152 | 162 | 172 | 182 | 192 |
| 153 | 163 | 173 | 183 | 193 |
| 154 | 164 | 174 | 184 | 194 |
| 155 | 165 | 175 | 185 | 195 |
| 156 | 166 | 176 | 186 | 196 |
| 157 | 167 | 177 | 187 | 197 |
| 158 | 168 | 178 | 188 | 198 |
| 159 | 169 | 179 | 189 | 199 |
| 160 | 170 | 180 | 190 | 200 ௨௦௦ |

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

பேருந்து நிலையத்தில் ....

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே ?

வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனாலதான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கட் கிடைச்சுதா?

பஸ் டென் தர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

மேற்கண்ட உரையாடலைக் கலப்பின்றித் தமிழில் எழுதுக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுக்கும் திறன்

பதினோராம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகின்றன. தேவி, அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. ஆனால், அவள் பெற்றோர், அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.

"நான் சொன்னால் சொன்னதுதான். நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியதுதான்" என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார்.

"அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்" என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள், தேவி.

இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?

உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?

## மதிப்புக்கல்வி

### சூழ்நிலைக்கேற்ற அறிவுக்கூர்மை

நாட்டுடைமையாக்கப்பட்ட அரசுப் பேருந்துகளில் திருவள்ளுவர் படமும் திருக்குறளும் இடம்பெறச் செய்தார் முதலமைச்சர் ஒருவர். ஒருமுறை எதிர்க்கட்சியினர், அவரிடம் இதுகுறித்துக் கேள்வி எழுப்பினர். பேருந்தில்...

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

என்று குறிக்கப்பட்டுள்ள குறள் யாருக்கு? ஓட்டுநருக்கா? நடத்துநருக்கா? பயணிகளுக்கா? என்று கேள்வி எழுப்பினர்.

ஓட்டுநருக்கும் நடத்துநருக்கும் என்று கூறினால் தொழிலாளர்களின் வெறுப்புக்கு ஆளாக வேண்டும்; பயணிகளுக்கு என்றால் பொதுமக்களின் சினத்திற்கு ஆளாக நேரிடும். ஆனால், அந்த முதலமைச்சர் கூறிய நுணுக்கமான பதில் அனைவரையும் அதிர வைத்தது. மேற்கொண்டு அவரிடம் எந்தக் கேள்வியையும் எதிர்க்கட்சியினரால் எழுப்ப முடியவில்லை. அவர் கூறிய பதில் என்ன தெரியுமா?

நாக்கு உள்ளவர்கள் அனைவருக்காகவும் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்பதே அது. பொருத்தமாகவும் தெளிவாகவும் விரைவாகவும் விடை கூறும் ஆற்றல் அவரிடம் இயல்பாக அமைந்திருந்தது. அவர்தாம் பேரறிஞர் அண்ணா. தகுந்த நேரத்தில் நாமும் நம் அறிவைப் பயன்படுத்திப் பொருத்தமாக உரையாடத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Letter writing is an art. This can be perfected through constant practice. We write letters to keep in touch with friends and relatives and to carry important information. Letters are a form of conversation; because, they involve personal and direct communications between two people. So, every educated person should know how to write a clear and readable letter.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. First deserve, then desire. | முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? |
| 2. Little strokes fell great oaks. | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். |
| 3. Tit for tat. | யானைக்கும் பானைக்கும் சரி. |
| 4. Work is worship. | செய்யும் தொழிலே தெய்வம். |
| 5. Time is Gold. | காலம் பொன் போன்றது. |

# பெரியபுராணம்

## அப்பூதியடிகள் புராணம்

அப்பூதியடிகள் திங்களூரில் தோன்றியவர்; குற்றமற்றவர்; சிவபக்தி மிக்கவர்; திருநாவுக்கரசரிடம் பேரன்புடையவர். அவ்வன்புக்கு அறிகுறியாகத் தம்மக்கள், அளவை, நிறைகோல், பசு, தாம் வைத்த தண்ணீர்ப்பந்தல் ஆகிய அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே சூட்டி மகிழ்ந்தவர். திங்களூர் வந்த திருநாவுக்கரசர், அங்குக் கண்ட தண்ணீர்ப் பந்தலுக்குத் தம் பெயர் இருப்பதனைக் கண்டு வியப்புற்றார். அப்பெயர் வைத்தவரான அப்பூதியடிகளின் அன்பைக் கேட்டறிந்து, அவரது இல்லம் சென்றார். வந்தவர்க்குத் திருவமுது படைப்பதற்காக வாழைக்குருத்து அரியச் சென்ற அப்பூதியடிகளின் மூத்த மகன், பாம்பு தீண்டியதால் இறந்தான். திருநாவுக்கரசருக்குத் தெரியாதவாறு இது மறைக்கப்பட்டது. திருநாவுக்கரசு இதனையறிந்து, 'ஒன்றுகொலாம்' என்னும் திருப்பதிகம் பாடி, இறந்த பிள்ளையை எழுப்பித் திருவமுது செய்தருளினார்.

### அப்பூதியடிகள் தம் மனையிலுள்ள அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே சூட்டல்

1. களவு,பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொடு மேதி மற்றும்
உளஎலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக லாற்றார்.

**பொருள் :** அப்பூதியடிகள் களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீக்கியவர்; வளமிகு இல்லற வாழ்வினர்; தம் வீட்டிலுள்ள அளவைக் கருவிகள், துலாக்கோல், மக்கள், பசுக்கள், எருமைகள், மற்றுமுள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசு என்னும் திருப்பெயரையே சூட்டி வாழும் வழக்கமுடையவர்.

**சொற்பொருள் :** காய்ந்தார் – நீக்கினார்; மனை – வீடு; ஆ – பசு; மேதி – எருமை; நிறைகோல் – துலாக்கோல் (தராசு).

**பகுபத உறுப்பிலக்கணம் :** காய்ந்தார் – காய் + த் ( ந் ) + த் + ஆர். காய் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

### திங்களூர் வந்த திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் காணல்

2. அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனில் பரிவகற்றிக்
குளம்நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளம்மருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

பொருள் : அளவற்ற மக்கள் நடந்துசெல்லும் வழியில், கோடையின் மிகுந்த வெப்பத்தினைப் போக்கியருளும் கருணைமிக்க பெரியோர் உள்ளம் போன்றும் நீர்த்தடாகம் போன்றும் அமைக்கப் பெற்ற குளிர்ச்சி நிறைந்த தண்ணீர்ப்பந்தலைத் திருநாவுக்கரசர் வந்து சேர்ந்தார்.

சொற்பொருள் : தண்ணளித்தாய் – குளிர்ச்சி நிறைந்த; தடம் – தடாகம்.

இலக்கணக்குறிப்பு : செலவொழியா வழி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வழிக்கரை – ஆறாம் வேற்றுமைத்தொகை; உறுவேனில் – உரிச்சொற்றொடர்; நீர்த்தடம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; பந்தர் – பந்தல் என்பதன் கடைப்போலி.

பகுபத உறுப்பிலக்கணம் : நிறைந்த – நிறை + த் ( ந் ) + த் + அ. நிறை – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

பிரித்தறிதல் : செலவொழியா – செலவு + ஒழியா; வழிக்கரை – வழி + கரை.

### தண்ணீர்ப்பந்தலில் தம் பெயர் இருக்கக் கண்டு வியப்புறுதல்

3. வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாங்கண்டார்.

பொருள் : தண்ணீர்ப்பந்தலை வந்தடைந்த வாகீசர் ( திருநாவுக்கரசர் ) இளந்தென்றல் காற்று வீசும் குளிர்ச்சிமிக்க தண்ணீர்ப்பந்தலையும் அமுதமாகிய தண்ணீரையும் கண்டார். அப்பந்தலில், திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் என்னும் பெயர் அழகாக எழுதியிருப்பதனையும் பார்த்து வியந்தார்.

சொற்பொருள் : மந்தமாருதசீதம் – குளிர்ந்த இளந்தென்றல் காற்றுடன் கூடிய குளிர்ந்த நீர்; சந்தம் – அழகு.

இலக்கணக்குறிப்பு : அணைந்த வாகீசர் – பெயரெச்சம்;

பகுபத உறுப்பிலக்கணம் : வருவார் – வா (வரு) + வ் + ஆர். வா – பகுதி, வா – வரு என ஆகியது விகாரம், வ் – எதிர்கால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : வந்தணைந்த – வந்து + அணைந்த; எம்மருங்கும் – எ + மருங்கும்.

### திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்த காரணம் கேட்டல்

4. ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறுமென எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார்.

பொருள் : அப்பூதியடிகளிடம், "கங்கையைச் சடைமுடியில் தாங்கிய சிவபெருமானின் அடியார்களுக்காக ஊரெல்லையில், நீவிர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் உம்பெயர் எழுதாமல், வேறு ஒருவர் பெயர் எழுதிய காரணமென்ன ? சொல்வீராக" என்று, குற்றமற்றவராகிய திருநாவுக்கரசர் மொழிந்தார்.

சொற்பொருள்: ஈறு – எல்லை.

### அப்பூதியடிகளார் திருநாவுக்கரசர் பெருமையை உரைத்தல்

5. பொங்குகடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்புமென இயம்பினார்.

பொருள் : "கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலில் எறிந்தபோது, அக்கல்லினையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசரின் பெருமையினை, இவ்வுலகத்தில் அறியாதார் யாருளர் ? மங்கலமாகிய திருவேடத்துடன் நின்றும், இவ்வகை மொழிந்தீர் ! நீர் எங்குறைவீர் ? நீர்தாம் யார் ? கூறுவீர்" என்று இயம்பினார், அப்பூதியடிகள்.

சொற்பொருள் : கல்மிதப்பு – கல்லாகிய தெப்பம்; புவனம் – உலகம்.

இலக்கணக்குறிப்பு : பொங்குகடல் – வினைத்தொகை.

பிரித்தறிதல் : எங்குறைவீர் – எங்கு + உறைவீர்.

### தாமே திருநாவுக்கரசர் எனல்

6. திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார். *

பொருள் : அந்தணராகிய அப்பூதியடிகள் கூறியதைக் கேட்ட திருநாவுக்கரசர், அடியார்மீது அவர் வைத்திருந்த பெருமையினை அறிந்து, 'பிற சமய நெறியினின்று விடுபட்டு ஏற்றம் காணச் "சூலை" என்னும் பெருநோயால் ஆட்கொள்ளப்பட்டுச் சைவ சமயம் வந்தடைந்த தெளிவில்லாத உணர்வுடைய சிறியவனே யான்' எனக் கூறினார்.

சொற்பொருள் : சூலை – கொடிய வயிற்றுநோய், தெருளும் – தெளிவில்லாத.

இலக்கணக்குறிப்பு : பெருமையறிந்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை; அறிந்து, அடைந்து – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிந்து – அறி + த் ( ந் ) + த் + உ; அறி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்சவிகுதி.

### திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் வணங்குதல்

7. அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரண கமலம் பூண்டார்.

பொருள் : திருநாவுக்கரசர், தம்மை இன்னாரென்று அறியும்படி உரைத்தருள, உண்மை அறிந்துகொண்ட அப்பூதியடிகளுடைய கைம்மலர்கள் தலைமேல் குவிந்தன; கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி வழிந்தது; உரை தடுமாறியது; உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறியத் தரையில் வீழ்ந்து, திருநாவுக்கரசருடைய திருவடித் தாமரைகளைத் தலையால் வணங்கினார்.

சொற்பொருள் : கரம் – கை; கமலம் – தாமரை; மிசை – மேல்.

இலக்கணக்குறிப்பு : கரகமலம் – உருவகம்; பொழிந்திழிய – வினையெச்சம்.

பிரித்தறிதல் : கண்ணருவி – கண் + அருவி; உடம்பெல்லாம் – உடம்பு + எல்லாம்.

### திருநாவுக்கரசர் அமுதுண்ண இசைதல்

8. ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார்.

பொருள் : அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை ஓர் இருக்கையில் உட்காரச் செய்தார்; விருப்பமுடன் பூசித்து வழிபட்டார்; திருநீற்றுக் காப்பேந்தி அணிந்தார்; மனமகிழ்வுற்றவராய் நாடுய்ய வந்தவரைத் திருவமுது செய்தருள விண்ணப்பம் செய்தார். திருநாவுக்கரசரும் அதற்கு இசைந்தார்.

சொற்பொருள் : திருநீற்றுக்காப்பு – பெரியோர்களால் வாழ்த்தி வழங்கப்படும் திருநீறு; நேர்ந்தார் – இசைந்தார்.

இலக்கணக்குறிப்பு : தேசம் – இடவாகுபெயர்; வந்தவர் – வினையாலணையும் பெயர்.

பிரித்தறிதல் : திருவமுது – திரு + அமுது, மனந்தழைப்ப – மனம் + தழைப்ப.

வாழையிலை அரிந்துகொணர மூத்த திருநாவுக்கரசை அனுப்புதல்

9\. தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் னமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வாஎன விரைந்து விட்டார்.

பொருள் : அப்பூதியடிகள், திருநாவுக்கரசருக்குப் படைக்கத் தூய்மையான நல்ல காய்கறிகளைக்கொண்டு, அறுசுவையுடன் இனிய அமுதாக்கிச் செய்தார். பின்னர் அவர், தங்களின் குழந்தைகளுள் மூத்த திருநாவுக்கரசை அழைத்து, மிக இளமையான வாழைக்குருத்தை விரைவாகச் சென்று அரிந்து வருமாறு கூறினார்.

சொற்பொருள் : தங்கள் சேயவர் – தங்களின் குழந்தைகள்; பொற்குருத்து – மிக இளமையான வாழைக்குருத்து.

இலக்கணக்குறிப்பு: நற்கறிகள், இன்னமுதம் – பண்புத்தொகைகள்.

பகுபத உறுப்பிலக்கணம்: ஆக்கி – ஆக்கு + இ; ஆக்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி.

பிரித்தறிதல்: நற்கறிகள் – நன்மை + கறிகள், இன்னமுது – இனிமை + அமுது.

மூத்த திருநாவுக்கரசு வாழைக்குருத்து அரியும்போது பாம்பு தீண்டல்

10\. நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே. *

பொருள்: "நல்ல தாயும் தந்தையும் ஏவ, அதன்படி நான் இப்பணி செய்யும் பேறு பெற்றேன்" என்று, மூத்த திருநாவுக்கரசு மனமகிழ்ந்து விரைந்து தோட்டத்தினுள் நுழைந்தான்; பெரிய வாழையின் வளமான இளங்குருத்தினை அரியும்போது, பாம்பொன்று மிக வருந்தும் வகையில் கூரிய பற்களால், அவன் உள்ளங்கையில் தீண்டியது.

சொற்பொருள்: ஒல்லை – விரைவு; மல்லல் – வளமான; அம் – அழகிய; வாள் – கூரிய; அரா – பாம்பு; அல்லல் – துன்பம்; அழுங்கி – மிக வருந்தி; அங்கை – உள்ளங்கை.

இலக்கணக்குறிப்பு: தாய்தந்தை – உம்மைத்தொகை; மல்லலம் குருத்து - உரிச்சொற்றொடர்; தீண்டிற்று – ஒன்றன்பால் வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம்: பெற்றேன் – பெறு (பெற்று) + ஏன். பெறு – பகுதி (பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியது), ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி; தீண்டிற்று – தீண்டு + இன் (ற்) + று; தீண்டு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ன் – ற் ஆனது விகாரம், று – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் – வாளரா – வாள் + அரா; அங்கை – அகம் + கை.

மாண்ட மகனை மறைத்துத் திருவமுது படைத்திடத் திருநாவுக்கரசை அழைத்தல்

11. தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம்பதைத்து உற்று நோக்கி உதிரம்சேர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார்.

பொருள்: மயங்கி வீழ்ந்த மூத்த மகனை, அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் உள்ளப் பதைப்புடன் உற்றுநோக்கினர்; கையினில் குருதி வழியும் வடுவையும் உடற்குறியையும் கண்டு, 'விடம் ஏறியதால், இறந்தான்' என அறிந்துகொண்டனர். அறிந்தும், மனவருத்தம் சிறிதுமின்றித் திருநாவுக்கரசர், திருவமுது செய்வதற்குரிய (உணவு உண்பதற்குரிய) சூழலை எண்ணினார்.

சொற்பொருள்: உதிரம்– குருதி, மேனி – உடல், வீந்தான் – இறந்தான்.

இலக்கணக்குறிப்பு : துளங்குதல் – தொழிற்பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : தளர்ந்து – தளர் + த் (ந்) + த் + உ. தளர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

திருநீறு அணியச் செய்ய மூத்த திருநாவுக்கரசு எங்கே என்று வாகீசர் கேட்டலும், அப்பூதியடிகள் கூறிய விடையும்

12. ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதும்ஒன் றுரையார் இப்போது இங்கவன் உதவான் என்றார்.

பொருள்: நான்மறை கற்று வாய்மை தவறாத அப்பூதியாரை நோக்கி, "அன்புடைய உங்கள் மூத்த பிள்ளையையும் திருநீறு அணியச் செய்வதற்குக் காட்டுவீராக" என்றார். அதனைக் கேட்ட அப்பூதியடிகள், நிகழ்ந்த செயல் ஒன்றனையும் கூறாமல், "இப்போது, இங்கு அவன் உதவான்" என்றார்.

சொற்பொருள்: மறைநூல் – நான்மறை; சேய் – குழந்தை; பூதி – திருநீறு.

இலக்கணக்குறிப்பு: பூதி சாத்த – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம்: உரையார் – உரை + ய் + (ஆ) + ஆர். உரை – பகுதி, ய் – உடம்படுமெய், ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : நான்மறை – நான்கு + மறை.

நிகழ்ந்தது யாது என்று வினவுதல்

13. அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
இவ்வுரை பொறாதென் உள்ளம், என்செய்தான் இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும் என்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி.

பொருள்: அப்பூதியடிகளார் கூறியதைக் கேட்டவுடன், இறைவன் திருவருளால், செம்மை மிகுந்த திருநாவுக்கரசரின் திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. அப்பூதியடிகளை நோக்கித் தாங்கள் கூறிய கருத்தினை என்னுள்ளம் ஏற்கவில்லை. உம் மகனுக்கு நிகழ்ந்தது யாது? உண்மை விரித்து உரையும் என்று மொழிய, அப்பூதியடிகளும் நடந்த நிகழ்வை விளம்பலுற்றார்.

சொற்பொருள்: அங்கணர் – அழகிய நெற்றிக்கண்ணையுடைய சிவன்; பொறாது – ஏற்காது; மெய் – உண்மை.

இலக்கணக்குறிப்பு: அங்கணர் – அன்மொழித்தொகை; நோக்கி – வினையெச்சம்.

பிரித்தறிதல்: விதிர்ப்புற்றஞ்சி – விதிர்ப்பு + உற்று + அஞ்சி.

### திருநாவுக்கரசர் பதிகம்பாடி மூத்த திருநாவுக்கரசை உயிர்ப்பித்தல்

14. நாவினுக் கரசர் கேளா நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்வார் என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்.

பொருள்: அது கேட்ட திருநாவுக்கரசர், "நீர் செய்த வண்ணம் நன்று; இவ்வாறு செய்பவர், இவ்வுலகில் யாவர் உள்ளார்?" என்று கூறி, முன்னே எழுந்து சென்று, உயிர் நீங்கிய அப்பிள்ளையின் உடலைக் கொண்டுவரச் செய்தார். சிவபெருமானை அருளும்படி வேண்டி, 'ஒன்றுகொலாம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப், பாம்பின் விடத்தைப் போக்கியருளினார்.

சொற்பொருள்: பணிவிடம் – பாம்பின் நஞ்சு; சவம் – பிணம்; பாற்றுவித்தார் – போக்குவித்தார்.

இலக்கணக்குறிப்பு: எழுந்து, சென்று – வினையெச்சங்கள்; பணிவிடம் – ஆறாம் வேற்றுமைத் தொகை; கேளா – செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்: புரிந்த – புரி + த் (ந்) + த் + அ. புரி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

பிரித்தறிதல்: பாவிசை – பா + இசை.

ஆசிரியர் குறிப்பு: பெரியபுராணத்தை அருளியவர் சேக்கிழார். இவர், தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். இவர், அநபாயச்சோழனிடம் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவர். இவர், உத்தமசோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர். இவரைத் தெய்வச் சேக்கிழார் என்றும் தொண்டர்சீர் பரவுவார் என்றும் போற்றுவர். இவரது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

நூற்குறிப்பு: தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவர். அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் 'பெரியபுராணம்' என்னும் பெயர் பெற்றது. இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர், 'திருத்தொண்டர் புராணம்' என்பது. தில்லை நடராசப்பெருமான், 'உலகெலாம்' என்று

அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றதெனவும் கூறுவர். இவரது பாடல்கள் அனைத்தும் தெய்வ மணம் கமழும் தன்மையுடையன. எனவேதான், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார். உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான், 'பெரியபுராணம்' என்பார் திரு. வி. கலியாணசுந்தரனார்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) சேக்கிழார் பெருமான் அருளியது ____________.

1. சிவபுராணம் 2. பெரியபுராணம் 3. தலபுராணம்

ஆ) தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் ____________

1. அப்பூதியடிகளார் 2. மாறநாயனார் 3. திருநீலகண்டர்

இ) பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர் ________.

1. பெ. சுந்தரனார் 2. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்

3. கவிஞர் வெ. இராமலிங்கனார்

**2. கோடிட்ட எழுத்துகள் குறிக்கும் தொடை வகையை எழுதுக.**

1. அளவில்சனம் உளமனைய குளம் நிறைந்த வளமருவும்

2. கடிதணைந்த, அடிபணியா, முடிவில்தவம் வடிவுடையீர்

**3. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.**

1. வ–ம்மருவும் (ல/ள) நி–ல்தரும் (ள/ழ) தண்–ர்ப் (நீ/ணீ) பந்தர் வந்த–ந்தார் (ணை/னை)

2. சந்தமு – (ர/ற) வ– ந்ததனை (றை/ரை) எம்ம – ங்கும் (ரு/று) தாங்க – டார் (ன்/ண்)

**4. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மேதி | – | சிவன் |
| 2. சந்தம் | – | எருமை |
| 3. கோதில் | – | அழகு |
| 4. அங்கணர் | – | குற்றமில்லாத |
| | – | பசு |

## ஆ) குறுவினாக்கள்

1. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?
2. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார் ?
3. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன ?
4.. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார் ?
5. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன ?
6. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார் ?
7. நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல் ?
   – யார் யாரிடம் கூறியது ?
8. "இப்போது இங்கு அவன் உதவான்" – யார், யாரிடம் கூறியது ?

## இ) சிறுவினாக்கள்

1. சேக்கிழார் – குறிப்பு எழுதுக.
2. பெரியபுராணம் – நூற்குறிப்பு எழுதுக.
3. தண்ணீர்ப்பந்தலைக் கண்டு நாவுக்கரசர் வியப்புறக் காரணம் என்ன ?
   அப்பூதியடிகளாரிடம் அவர் யாது வினவினார் ?
4. இப்போது இங்கு அவன் உதவான் – விளக்குக.

## ஈ) நெடுவினாக்கள்

1. அப்பூதியடிகள் திருநாவுக்கரசர்மேல் கொண்டிருந்த பற்றினை விவரிக்க.
2. திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தலைக் கண்டு வியந்த நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.
3. அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.

> அன்பைப் பெருக்கிஎனது ஆருயிரைக் காக்கவந்த
> இன்பப் பெருக்கே இறையே பராபரமே! – தாயுமானவர்

# திரைப்படக்கலை உருவான கதை

## திரைப்படத்தின் சிறப்பு

கலை நம் வாழ்வின் உயிர்நாடி. கலையில்லையேல் வாழ்வில் சுவையிருக்காது. திரைப்படம் ஓர் அற்புதமான கலை. உலகில் பல்வேறு மொழிகள் இருப்பினும், மக்கள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் உலகமொழி திரைப்படம். அஃது உதடுகளால் பேசும் மொழியன்று; உள்ளத்தால் பேசி, உணர்ச்சிகளால் உருவாகும் மொழி. அதனால், மக்களைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் திரைப்படத்திற்கு உண்டு.

## திரைப்படத்தின் வரலாறு




ஒளிப்படம் எடுக்கும் முறையை 1830ஆம் ஆண்டு கண்டுபிடித்த பின்னர், எட்வர்டு மைபிரிட்சு என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றிபெற்றார். ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். எடிசன், ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தார். பிரான்சிஸ் சென்கின்சு என்ற அமெரிக்கர் 1894இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும்வகையில் வடிவமைத்தார். புதிய படவீழ்த்திகள் உருவாக, இவருடைய கருத்துகளே அடிப்படையாக அமைந்தன.

இவ்வியக்கப்படத்தில் நாட்டியம், கடல் அலைகள் கரையில் மோதுதல் முதலிய காட்சிகளைக் காண முடிந்தது. இவற்றை ஆயிரக்கணக்கான இடங்களில் படம் காட்டிக் கட்டணம் வசூலிக்கத் தொடங்கினர். இவை பேசும் படங்கள் அல்ல; ஊமைப் படங்களே.

## திரைப்படம்

ஊமைப்படங்களைப் பேசும் படங்களாக மாற்றுவதற்குப் பல்வேறு அறிவியல் அறிஞர்கள் அயராது உழைத்தார்கள். அதனால், திரைப்படத்துறை மாபெரும் வளர்ச்சியை எட்டியது. திரைப்படத்துக்குரிய கதையுடன் கதை மாந்தர் தேர்வு செய்யப்பட்டனர். கதை, உரையாடல், பாடல் முதலியன முதலில் ஆயத்தம் செய்யப்பட்டன. பின்னர், அவர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்பட்டன. திரைப்பட நடிகர், நடிகையர், அவர்களுக்குத் தோழர், தோழியர், பணியாளர்கள் என நடிகர் பலர் தேர்வு செய்யப்பட்டனர்.

நடிகரின் குரல் இசைவாக இல்லாவிடில், மற்றொருவர் குரல் தரும் முறை கொண்டுவரப்பட்டது. ஒரு மொழிப்படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு,

மொழிமாற்றம் என்று பெயர். நடிப்பாற்றலை எடுத்துக்கூறிச் சில நேரங்களில் தாமே நடித்தும், காட்சிகள் அமைத்தும் படம் முடியும்வரை உழைக்கும் நுண்மாண் நுழைபுலம் உடையாரை இயக்குநர் என்பர். அவருக்கு உதவியாகத் துணை இயக்குநர் பணியாற்றுவார். படம் எடுத்தலைப் படப்பிடிப்பு என்பர். திரைப்படக்கலை இவ்வாறு காலத்திற்கேற்ப வளர்ச்சி பெற்றது.

கதைப்படங்கள் மட்டுமன்றிக் கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை அடைந்துள்ளது. செய்திப் படங்கள், உலகில் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் படமாக்கிக் காட்டும். செய்திப்படங்கள் வாயிலாக உலக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே, காணும் வாய்ப்புகள் உருவாகி உள்ளன. விளக்கப்படங்களால் ஒருநாட்டு மக்களின் வாழ்க்கைமுறைகளை உள்ளவாறு அறியலாம். படப்பதிவின்போது பலவகைத் தொல்லைகளும் அல்லல்களும் இடர்ப்பாடுகளும் துன்பங்களும் தடைகளும் ஏற்படும். உலகப்போரின்போது ஆப்பிரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் படமெடுப்போர் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### திரைப்படச்சுருள்

திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது. படம் எடுக்கப் பயன்படும் சுருள், எதிர்ச்சுருள் எனப்படும். ஒலி, ஒளிப்பதிவுகளைத் தனித்தனிப் படச்சுருள்களில் அமைப்பர்.

### படம்பிடிக்கும் கருவி

திரைப்படத்தில் ஒளிப்பதிவு செய்யப் படப்பிடிப்புக் கருவி இன்றியமையாதது. படப்பிடிப்பின்போது படப்பிடிப்புக்கருவி அசைந்தால் படம் தெளிவாக இராது. ஆகையால், உறுதியான உயரமான இடத்தில் அக்கருவியைப் பொருத்திவிடுவர். சிலர் படப்பிடிப்புக்கருவியை நகர்த்தும் வண்டியில் பொருத்துவதும் உண்டு. படப்பிடிப்புக்கருவியில் ஓரடி நீளமுள்ள படச்சுருளில் பதினாறு படங்கள் வீதம் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக எடுக்கப்படும்.

### ஒலிப்பதிவு

நடிகர்களின் நடிப்பையும், பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒலிப்பதிவு செய்வர். உரையாடலில் எழும் ஒலிஅலைகள் ஒரு நுண்ணொலிபெருக்கியைத் தாக்கும். நுண்ணொலிபெருக்கி ஒலியலைகளை மின்அதிர்வுகளாக்கும். மின்அதிர்வுகள் பெருக்கப்பட்டு ஒருவகை விளக்கினுள் செலுத்தப்படுகின்றன. அம்மின்னோட்டத்திற்குத் தக்கவாறு விளக்கின் ஒளி மாறும். இவ்வொளி, படச்சுருளின் விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து, அங்கு அஃது ஒலிப்பாதையைத் தோற்றுவிக்கும்.

### திரைப்படக்காட்சிப் பதிவு

ஒளிஒலிப்படக்கருவி என்னும் கருவி திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகிறது. இக்கருவியில் மேற்பக்கம் ஒன்றும், அடிப்பக்கம் ஒன்றுமாக வட்டமான இரு பெட்டிகள் இருக்கும். காட்டவேண்டிய படச்சுருளை மேல் பெட்டியில் பொருத்துவர். இக்கருவியில் பல பற்சக்கரங்களும், சக்கரங்களும் உண்டு. படச்சுருளைப் பற்சக்கரங்களுக்கு

இடையில் செலுத்திக் கீழே உள்ள பெட்டியில் மீண்டும் சுற்றிக் கொள்ளுமாறு செய்வர். இவ்வாறு படச்சுருள் பிரிந்து மீண்டும் சுருட்டிக்கொள்ளும். இடையில் ஒளிமிகு விளக்குகளுக்கும், உருப்பெருக்கிகளுக்கும் இடையில் படம் வரும். முன்புறம் ஒரு மூடி இருக்கும். மூடிக்கு இரண்டு கைகள் உண்டு. அந்த மூடி நொடிக்கு எட்டுமுறை சுழலும். அதன் கைகள் நொடிக்குப் பதினாறு முறை சுழலும். அதனால், அதன் கைகள் ஒளியை மறைக்கும். ஒளி மறைக்கும் போதெல்லாம் படச்சுருள் நழுவி, அடுத்த படம் வந்து நிற்கும். அதற்குள் மூடி திறந்துவிடுவதால் அப்படம் திரையில் விழும். திரைப்பட இயந்திரங்களில் நவீன தொழில்நுட்பங்களைக் கையாளுவதனால், திரைத்துறை வளர்ச்சியும் செழுமையும் பெற்றுத் திகழ்கிறது. பல காலங்களில் பல்லோரது உழைப்பினாலும், புதியன காணும் விருப்பத்தினாலும் மேன்மை பெற்றுத் திகழ்கிறது இன்றைய திரைத்துறை.

### கருத்துப்படம்

கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் 'வால்ட் டிஸ்னி' என்பவர் ஆவார். அவர் ஓவியர், ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான படங்களை வரைவார். ஒன்றுக்கொன்று சிறிது சிறிதாக மாறுவனவாக இருக்கும். இப்படங்களை வரிசைப்படி அடுக்கி வைத்துவிட்டு மிக வேகமாக ஏடுகளைப் புரட்டினால், அவை வெவ்வேறு படங்களாகத் தோன்றாமல் ஒரே நிகழ்வாகத் தோன்றும்.

ஒவ்வொரு காட்சியிலும் வரும் விவரங்களையும், பின்னணியையும் தனித்தனியாக எழுதி, ஒளிபுகும் செல்லுலாய்டு தகட்டில் தீட்டி, திரைப்படப் படப்பிடிப்புக் கருவியைக்கொண்டு, இப்படங்களைப் படமாக்குவர். கதைக்கேற்ப ஒலிப்பதிவையும் செய்வர். படங்களை எழுதுவதற்குப் பதிலாகப் பொம்மைகளைக் கொண்டும் படங்களைத் தயாரிக்கின்றனர். இந்த இயங்குரு படங்கள் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருப்பதால் குழந்தைகள் மிகவும் விரும்பும்.

### செய்திப்படம்

உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையே படமாக்கிக் காட்டுவது செய்திப்படமாகும். திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.

### விளக்கப்படம்

ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப்படமாகும். எடுத்துக்காட்டாக, உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம் விளக்கப்படம் எனப்படும்.

### கல்விப்படம்

கல்வி கற்பிப்பதற்கென உருவாக்கப்படும் படங்கள் கல்விப்படங்கள். பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை முதலியவற்றைப் படம் பிடித்துக் காட்டினால், அதனைக் காணும் மாணவர் கல்வியறிவை எளிதில் பெறுவர். வாழ்க்கையில் நேரில் காண முடியாத பல இடங்களையும் நேரில் பார்ப்பதனைப் போலவே காட்டுவதற்குக் கல்விப்படம் வழி செய்கிறது.

மக்களைத் தன்பால் ஈர்த்துக் கட்டிப்போடும் ஆற்றல் கொண்டது திரை உலகம். "கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே" எனும் வரிகள் திரைப்படத்திற்கும் பொருந்தும். மக்களிடம் மிக எளிதில் சென்று சேரும் ஆற்றல் திரைப்பட ஊடகங்களுக்கு உண்டு. அதனால், இத்துறை மக்களிடம் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கிறது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் ________ என அழைப்பர்.

ஆ) படப்பிடிப்புக் கருவியை ________ பொருத்துவதும் உண்டு.

இ) இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ________ இருக்கும்.

**2. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

அ) திரைபடம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

ஆ) திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போடவல்லது.

**3. ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.**

அ) ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்.

ஆ) இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.

**4. ஏற்ற வினாத்தொடர்கள் அமைத்து எழுதுக.**

அ) செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.

ஆ) திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளிஒலிப் படக்கருவி பயன்படுகிறது.

**5. தேவையான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

கதைப்படங்கள் மட்டுமன்றிக் கருத்துப்படங்கள் செய்திப்படங்கள் விளக்கப்படங்கள் கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

**6. பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. ஈஸ்ட்மன் | – | ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி |
| 2. எடிசன் | – | படச்சுருள் |
| 3. எட்வர்டு மைபிரிட்சு | – | கருத்துப்படம் |
| 4. வால்ட் டிஸ்னி | – | இயக்கப்படம் |

### ஆ) குறுவினாக்கள்

1. மொழிமாற்றம் என்றால் என்ன ?
2. கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?
3. திரைப்படச்சுருள்பற்றி நீவிர் அறிவன யாவை ?

### இ) சிறுவினாக்கள்

1. படப்பிடிப்புக் கருவி குறித்து எழுதுக.
2. திரைப்படக்காட்சி எவ்வாறு பதிவு செய்யப்படுகிறது ?
3. கருத்துப்படம் பற்றி விளக்கி எழுதுக.

### ஈ) நெடுவினா

திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப்பணிகளைத் தொகுத்தெழுதுக.

**செயல்திட்டம் :** பள்ளியில் நடைபெறும் ஆண்டுவிழாவில் நடிப்பதற்கேற்றவாறு ஔவைக்கு நெல்லிக்கனி வழங்கிய வள்ளல் எனும் ஓரங்க நாடகம் அமைக்க.



### கலைச்சொற்களை அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| Persistence of vision | – | பார்வை நிலைப்பு |
| Dubbing | – | ஒலிச்சேர்க்கை |
| Director | – | இயக்குநர் |
| Shooting | – | படப்பிடிப்பு |
| Cartoon | – | கருத்துப் படம் |
| Negative | – | எதிர்ச்சுருள் |
| Camera | – | படப்பிடிப்புக்கருவி |
| Trolly | – | நகர்த்தும் வண்டி |
| Microphone | – | நுண்ணொலிபெருக்கி |
| Projector | – | படவீழ்த்தி |
| Lense | – | உருப்பெருக்கி |
| Motion Pictures | – | இயங்குருப் படங்கள் |